**குறிப்பு : தங்களுடைய பரிபூரண ஆதரவின் பேரில் இதை ஒரு மாபெரும் கம்பெனியாக உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம். சுற்றிலுமிருக்கும் கிராமங்களிலுள்ள ஆட்களுக்கு வேலை தந்து வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவு போக்க முயற்சி செய்கிறோம். அன்பர்களது முழு ஆதரவை எதிர்நோக்குகிறோம்.**

சுத்தம் சுகம் தரும்! சுகாதாரமே ஜீவாதாரம்!!

மனம் கவரும் சிற்றுண்டிகள் — மணம் மிகும் காப்பி

சுவை நிறைந்த உணவு — உளம் நிறைந்த உபசரிப்பு

அனைத்திலும் சிறந்த இடம்

**கஸ்தூரிபாய் காப்பி ஹோட்டல்**

**பட்டிவீரன்பட்டி**

★

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.

★

ஆர்டர்களுக்குக் குறித்த காலத்தில் சப்ளை செய்யப்படும்.

Prop: K. S. மாரியப்பன்.

எங்களிடம் தினமணி, கதிர், இந்தியன் எக்ஸ்பிரஸ் முதலிய பத்திரிகைகள் கிடைக்கும்.

பள்ளி நூல் நிலையங்களுக்கு ஏற்ற

சிறந்த தமிழ் இலக்கிய,

அறிவியல் நூற்கள்

அனைத்தும் ஒருங்கே கிடைக்குமிடம்:

★

**ஸ்டார் பிரசுரம்**

66, பெரிய தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

60, மேலக்கோபுரவாசல்
மதுரை.

# பேச வாயேது?

( ஸ்ரீமதி ந. பிச்சாரம்மாள்–பழைய மாணவி)

நயா பைசா வரும் நாளை எதிர்பார்த்திருந்தாள் சரளா. ஏப்ரல் முதல் தேதியும் வந்துவிட்டது. 'நயா பைசா சிறியதாக இருக்குமா? பெரியதாக இருக்குமா?' என்று எண்ணியபடியே இருந்தாள்.

காலை ஒன்பது மணி. பள்ளிக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தாள், சரளாவின் தங்கை நீலா. அட்டவணையின்படி புத்தகங்களை அடுக்கி வைத்துக்கொண்டு புறப்பட்டுப் போனாள். போனவள் திரும்பி வந்து, "நயா பைசா வந்துவிட்டதே. நீ பார்க்கவில்லையா? என்றாள். சரளா "இல்லையே" என்றாள்.

நீலா, "நம்மூர் ரொட்டிக்கடையில் கொடுக்கிறார்கள், காலணாதா, வாங்கி வருகிறேன்" எனக் கூறினாள். உடனே சரளா, "அரையணாவாக இருக்கிறதே? சில்லரை மாற்றிக் கொண்டுபோய் முதலில் காலணாவிற்கு வாங்கு. பிறகு காலணாவிற்கு வாங்கலாம்" என்றாள். நீலாவும் சரியென்று போனாள். போனவள் திரும்பி வந்தபொழுது, கையில் ஒரு நயா பைசாவும், ஒரு காலணாவும் வைத்திருந்தாள். அவள் சொன்னாள் "காலணாவிற்கு ஒன்றுதான் தருகிறார்கள்".

"என்னடி காலணாவிற்கு இரண்டல்லவா? பரவாயில்லை. இந்தக் காலணாவையும் கொடுத்துவிட்டு மூன்று நயா பைசா வாங்கிவா".

"அரையணாவிற்கும் இரண்டுதான் தருகிறார்கள்." "அப்படியானால் இந்த நயா பைசாவைக் கொடுத்துவிட்டு ஒரு காலணா ரொட்டி வாங்கிவா" "ரொட்டிக் கடைக்காரர் கொடுக்கமாட்டேன் என்று சொல்கிறாரக்கா".

"நீங்கள்தானே காலணாவிற்கு ஒரு நயா பைசா கொடுத்தீர்கள். அதன்படி ஒரு நயா பைசாவிற்கு ஒரு காலணா ரொட்டி தாருங்கள் என்று வாங்கிவா".

நீலா, அக்காள் சொல்லியபடியேகேட்டாள். ரொட்டிக்காரருக்கு பேச வாயேது? பேசாமல் ஒரு ரொட்டியை எடுத்துக்-கொடுத்துவிட்டார்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறாகப் பள்ளியின் தேர்தல் ஓர் நல்ல பாடத்தை எங்களுக்குக் கற்பித்துக் கொடுத்தது.

மாணவ மாணவிகள் கற்க வேண்டியது ஒன்றே ஒன்றுதான். அதுவே 'கடமை' எனப்படும். இக் கடமையை ஆசிரியர்களும், எழுத்தாளர்களும், பேச்சாளர்களும், பெரியோர்களும், பெற்றோர்களும் பலபல முறையில் எடுத்துக் கூறுகின்றார்கள். ஒவ்வொரு மாணவ மாணவியும் அவர் அவர் கடமையை செவ்வனே கடைப்பிடிக்கிறோமா என்பதை செவ்வனே சிந்தித்துப்பார்க்க வேண்டும். கல்வி பயிலுங் காலத்தில் கடமைகள் பல பல உள்ளன. இக் கடமைகளை நாம் சீரிய முறையில் கடைபிடித்து அதில் வெற்றி பெற்றால் பின்வரும்வாழ்வு நல்ல முறையில் இருக்கும். நமது மாணவ மாணவிகள், பாடப் படிப்பிலும், விளையாட்டிலும், ஒழுக்கத்திலும், உதாரண குணத்திலும், சமூகப் பணியிலும் தங்களது கடமைகளை செவ்வனே செய்கின்றார்கள் என்பதில் ஐயமில்லை

மாணவ மாணவிகளே! சமூகப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் நீங்கள் அரும்-பெரும் தொண்டுகள் செய்தீர்கள், செய்துகொண்டிருக்கிறீர்கள், செய்வீர்கள் என்பன உண்மையே. எனது கற்பனைக்கன்னி நம்முன் பொலிவுடன்திகழ, அதாவது நமது ஊர் அழகொழுகத் திகழ உங்களிடம் ஒரு பொறுப்பை ஒப்படைக்க விரும்புகிறேன். எனது உயர்நிலைப்பள்ளி வாழ்வில் நாங்கள் செய்த சுவர் சுத்தம் செய்யும் பணி மிகச்சிறந்தது என்று பேர் பெற்றோம். அந்தப் பணியையே நீங்களும் நல்ல முறையில் செய்வீர்கள் என்று எண்ணுகிறேன். தற்காலக் கல்வியில் வகுப்புச் சுத்தம் செய்வது, தெருச் சுத்தம் செய்வதுபோல் சுவர் சுத்தம் செய்வதையும் ஒரு திருப்பணியாக வைத்துக் கொள்ளுங்கள். ஊர்கள் அழகுடன் தோன்ற மாணவ மாணவிகளாகிய உங்களைத்தவிர யார்தான் பாடுபட முடியும்? வாழ்க சமூகப் பணி! வாழ்க மாணவ மணிகள்!! வாழ்க எனது கற்பனை ஜோதி "சுவர்"ணம்!!!



# "கி.பி. 2000 ஆண்டில்"

( ஸ்ரீ ஆ. பு. மு. க. மாரிமுத்து — பழைய மாணவர் )

**காட்சி 1**

இடம் :— சென்னையில் ஓர் வீடு

காலம் :— காலை மணி 8

பாத்திரங்கள் :- தாத்தா, கணேஷ்

தாத்தா :— அப்பா! கணேஷ்! வாடா சைனு பஜார் போயிட்டு வரலாம்.

கணேஷ் :— எதற்கு தாத்தா ?

தாத்தா :— ஒரு மூக்குக் கண்ணடி வாங் கணும்.

[ "கணேஷ் சிரிக்கிருன்" உடனே ]

தாத்தா :— ஏண்டா சிரிக்கிருய்?

கணேஷ் :- மூக்குக் கண்ணடி வியாபாரமே இப்போ இல்லே தாத்தா.

தாத்தா :— ( வியப்புடன் ) இல்லேயா ? ஏன்? எங்க காலத்தில் எல்லாம் ஏராளமாய் இருந்ததே!

கணேஷ் :— இப்போது யாரும் கண்ணடி போட்டுக்கொள்வதில்லே. நான் சொன்னல் நம்ப மாட்டீர்கள், வாருங்கள் கண் ஆஸ்பத்திரிக்கு. ( போகிருர்கள் )

**காட்சி 2**

இடம் :— கண் ஆஸ்பத்திரி

காலம் :— 10 மணி

( தாத்தா, கணேஷ், கண் டாக்டர், நோயாளி )

நோயாளி :— டாக்டர், என் கண் கொஞ்சம் தெரியவில்லே, பாருங்களேன்.

டாக்டர் :— ( கண்ணே சோதித்து ) கண் கெட்டுவிட்டது. வேறுகண் வைக்கணும். அடுத்த வாரம் வா ( நோயாளி போதல் )

தாத்தா :- என்ன! புதிய கண் வைப்பார்களா? வியப்பாயிருக்கே, கணேஷ் !

கணேஷ் :— ஆமாம் தாத்தா, கண் இழந் தவர்கள் யாரும் இனி இல்லே, கெட்ட கண்ணே யெல்லாம் எடுத்து, பார்க்கக்கூடிய புதிய கண்கள் வைத்துக்கொள்ளலாம். இஃதால்தான் மூக்குக் கண்ணடியே இல்லே.

தாத்தா :— மிக்க ஆச்சரியம், என் கண்ணேக் கூட அப்போ மாற்றிவிடலாம் போலே!

கணேஷ் :— பின் என்ன! இது கி. பி. 2000ம் ஆண்டு. வாருங்கள், இனி ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு போகலாம்.

( போகிருர்கள் )

**காட்சி 3**

இடம் :— ஆஸ்பத்திரி.

( டாக்டர் 60 வயது நோயாளி ஒருவரை சோதனே செய்கிருர். இஃதைத் தாத்தாவும் கணேஷும் பார்க்கின்றனர். )

டாக்டர் :— சார், உங்கள் இதயம் மிகவும் கெட்டுவிட்டது. இப்படி இருந்தால் திடீரென்று நின்றுவிடும், ஆகையால் வேறு ஒரு புதிய மிஷின் இதயம் மாட்டினல் தாங்கள் 150 வயது வரை வாழலாம்.

நோயாளி :— அப்படி என்ருல் சரி, என்று வரலாம்?

டாக்டர் :— அடுத்தவாரம் இதயம் தயாராகிவிடும்.

நோயாளி:-சரி,அடுத்தவாரம் வருகின்றேன், வணக்கம்.

டாக்டர் :— வணக்கம்.

தாத்தா :— (மிக வியப்புடன்) என்ன? மிஷின் இதயமா? அடேயப்பா! ஒரே மாயாஜாலம் போல் அல்லவா தோன்றுகிறது! இஃதுண்மை தானு?

கணேஷ் :— ஆமாம் தாத்தா, அத்தனையும் உண்மை. இஞ்சினில் ஒரு பகுதி கெட்டுவிட்டால் அதை அகற்றி புதியது போடுவோமே, அது போல்தான் இதுவும்.

தாத்தா :— என்ன உலகமடா!

கணேஷ் :—பின் என்ன? இது கி. பி 2000 ஆண்டு அல்லவா. சரி வாருங்கள் ஒரு கிராமத் திற்கு போகலாம். (போகிறுர்கள்)

## காட்சி 4

இடம் :— ஒரு கிராமம்

காலம் :— மதியம் (தாத்தா, கணேஷ்)

தாத்தா :— ஏன்டா கணேஷ், எங்கே பார்த் தாலும் சவுக்குத் தோப்பாய் இருக்கு?

கணேஷ் :— யார் இப்போது இதை வாங்குவது!

தாத்தா :— பின் விறகுக்கு என்ன செய்வார்கள்?

கணேஷ் :— விறகே வாங்குவதில்லை.

தாத்தா :— ஏன்? (அருகில் இருந்த வீட் டைப் பார்த்து) இந்த வீட்டின் சுவர் எல்லாம் சுத்தமாய் இருக்கே! வரட்டி தட்டி வைப்பார் களே. இப்போது இல்லையா?

கணேஷ் :- அதெல்லாம் முன்பு, இப்போது மக்கள் சாணத்தை வீணுக்காது எருவாய் உபயோகிக்கின்றனர்.

தாத்தா :— விறகும், வரட்டியும் இல்லாது பின் எப்படி அடுப்பெரிக்கின்றனர்?

கணேஷ் :— சூரியனல்!

தாத்தா :— என்ன சூரியனலா! எப்படி யப்பா அது?

கணேஷ் :— அதுதான் விஞ்ஞானத்தின் வியப்பு. சூரியனின் ஒளியை கிரகித்து அதனுல் எரியும் அடுப்பு. ஆதலால்தான் விறகு, வரட்டி கிடையாது.

தாத்தா :— அடேயப்பா, இதைப்போல அதி சயம் எங்க காலத்திலெல்லாம் ஏது, இது கனவி லும் காணேும்.

கணேஷ் :-ஆமாம், பின் என்ன! இது கி. பி. 2000ம் ஆண்டு (காரில் திரும்புகின்றனர். கணேஷ் காரை வேகமாய்விடவும், "மெதுவாய்த்தான் போ, யார்மேலாவது மோதிவிடப் போகிறது" என்கிறுர் தாத்தா, அதற்கு)

கணேஷ் :— அதெல்லாம் இல்லை தாத்தா. இப்போதெல்லாம் கார் விபத்தே இல்லை தாத்தா.

தாத்தா :... எப்படி?

கணேஷ் :— ஏதாவது ஓர் பொருள் கார் முன் வந்தால் தானே நின்றுகொள்ளும். (எப்படி என வியப்புடன் தாத்தா வினவ) எல்லாம் அணு சக்தியின் மகிமை. (சாயங்காலம் கார் திடீரென நிற்கிறது. கார் எதிரே ஓர் கழுதை நிற்கிறது. இதை கண்ணுற்ற தாத்தா வியப்பு என கூற, "பின் என்ன" இஃது கி. பி. 2000ம் ஆண்டு! என கணேஷ் சிரித்தபடியே கூறுகிறுன்.)

## காட்சி 5

இடம் :— பழைய இடமான அதேவீடு.

காலம் :— மாலை

கணேஷ்:— தாத்தா இன்றைய செய்தி படிக்கலாமா?

தாத்தா :— என்ன, மாலையில் பேப்பரா! அதற்குள்ளா? கொண்டா பார்க்கலாம்? [உடனே

கணேஷ் அவரை ஓர் அறைக்கு அழைத்துப் போகிறான். அவர் மறுபடியும் பேப்பர் கேட்க, கணேஷ் இதுதான் என ஒரு ரேடியோபோன்ற பெட்டியைக் காட்டுகிறான். ]

தாத்தா :— ஏன்டா கேலியா? [ கணேஷ் அதில் ஒரு சுவிட்சை போட, அஃதில் சினிமா எழுத்து மாதிரி வரிசையாய் செய்தி தெரிகிறது. தாத்தா எல்லாவற்றையும் வியப்புடன் படித்து முடித்து ]

தாத்தா :— ஏன்டா கணேஷ் என்ன இது.

கணேஷ் :— இதுதான் "டெலிவிஷன்" சாதாரணமான வீட்டிலும் உண்டு. தினசரி செய்தி இதில் தெரியும் படங்களையும்பார்க்கலாம்.

தாத்தா :— அடடா இதென்ன அதிசயம்!

கணேஷ் :— பின் என்ன தாத்தா! இது கி. பி. 2000ம் அல்லவா? (டெலிவிஷன் மூலம் செய்தி படித்துக்கொண்டிருக்கும்போது அடுத்த அறையில் மணி அடித்தது)

தாத்தா :— டேய் கணேஷ் யாரோ "காலிங் பெல்" அடிக்கிறார்கள் போய்ப்பார்.

கணேஷ் :— அந்த மணி ஓசை இங்கிருந்து வரவில்லை, வாருங்கள் இந்த அறைக்கு. (மணி யோசை வந்த அறைக்கு தாத்தாவை அழைத்துச் செல்லுகிறான். அவ்வறையில் 4 டெலிவிஷன் பெட்டிகள் உள்ளன. முதல் பெட்டியிலிருந்து மணிஓசை கேட்கிறது.)

கணேஷ் :— அட நம்ம அத்தான் கூப்பிடுகிறார் தாத்தா.

தாத்தா :— அத்தானா? எங்கேடா யாரையுங் காணோம்?

கணேஷ் :— இதோ பாருங்கள். (டெலிவிஷன் பெட்டியில் உள்ள ஓர் பொத்தானை அழுத்த அத்திரையில் கணேஷின் அத்தான் சிரித்தபடியே தெரிகிறான்)

தாத்தா :— எங்கேடா இருந்து தெரிகிறான்?

கணேஷ் :— செவ்வாய்க் கிரகத்திலிருந்து.

தாத்தா :— அது எந்த ஊருடா?

கணேஷ் :— இங்கில்லை அது வேறு உலகம்.

தாத்தா :— (வியப்புடன்) என்ன? என்ன? வேறு உலகமா?

கணேஷ் :— ஆமாம் தாத்தா. அத்தான் செவ்வாயில், மாமா சுக்கிரனில், சித்தப்பா சந்திரனில், அண்ணா சனியில் இருக்கிறார்கள் தெரியாதா? (இச்சமயம்)

அத்தான் :— என்ன மாப்பிள்ளை, தாத்தாவோடு பேச்சு? முதலில் நான் சொல்வதைக் கேள். உன் அக்காவுக்கு ஆண்குழந்தை பிறந்திருக்கிறது தாயும், சேயும் நலம். தாத்தா வணக்கம் (மறைகிறார்)

தாத்தா :— என்ன விந்தையப்பா!

(மயங்கிச் சாய்கிறார் ]

[ உடனே கணேஷ், தாத்தா முகத்தில் தண்ணீர் தெளிக்கிறான். ]

---

"மரம் ஒன்று ஓரிடத்தில் முளைத்து வளர்கிறது. அதன் மலரும், கனியும் எங்கெங்கோ எடுத்துச் செல்லப்படுகின்றன. நல்லான் ஒருவன் ஓரிடத்தில் வாழ்ந்திருக்கிறான். அவனது நலன் எங்கெங்கோ பரவுகிறது".

"அஞ்சாதவனும், ஆசைப்படாதவனுமே உண்மையான மனிதன்".

# ஜோஸப் ஸ்டோர்ஸ்

## பெரும்பாறை

தங்களுக்குவேண்டிய நயம் மளிகைச் சாமான்களும் ஷாப் சாமான்களும், உறுதிமிக்க வெங்கலப்பாத்திர வகையருக்களும், உத்திரவாதமுள்ள விவசாயக் கருவிகளும், உர வகையருக்களும், மருந்துகளும், உன்னத நவீன நாகரீக ஜவுளி தினுசுகளும் எங்கள் ஸ்டோரில் எப்பொழுதும் நியாய விலையில் கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் — தெரிவித்துக்கொள்கிறோம் —

★

*எங்கள் வாடிக்கைக்காரர்களுக்கும்*
*விவசாய நண்பர்களுக்கும் எங்களது உளங்கனிந்த*

குடியரசுதின வாழ்த்துக்கள்!

★

உரிமையாளர் :

**P. R. கருப்பையா நாடார் சன்ஸ்**

பட்டிவீரன்பட்டி.

குடியரசு தின வாழ்த்து!

உங்கள் தேவைக்கு! நல்ல ஜவுளிக்கு!

சிறந்த இடம்:

★

# ஓம் முருகா ஜவுளி ஸ்டோர்

எங்கள் ஜவுளிக்கடையில் எல்லாவிதமான மில், கைத்தறி ஜவுளிகளும்
B. & C. மில், B. W. C. S. மில் ஜவுளி ரகங்களும் குறைந்த விலையில் கிடைக்கும்.

★

**ஆ. பு. மு. புண்ணியராஜன் & சன்ஸ்**

ஜவுளி வியாபாரம் – பட்டிவீரன்பட்டி – மதுரை மாவட்டம்

## BOOKS, MAPS AND GLOBES IN TAMIL

| | | | |
|---|---|---|---|
| Maduram : | Gunaseela Kuberar, | Re. | 0—9—0 |
| „ | Rhyming Songs, | „ | 1—4—0 |
| Singh : | The Achievement of Man, | „ | 1-12—0 |
| A. S. Raghavan : | Tamil Essays, | „ | 1—8—0 |
| C. M. R. Chettiar : | A Book of Short Stories | „ | 1—0—0 |
| Perera : | Essentials of Teaching, | „ | 1—8—0 |
| Applachariar and Ramanujachariar : | Educational Psychology, | Rs. | 2-12—0 |
| Isaacs : | The Children We Teach, | „ | 2—4—0 |
| Sundaram, | Bharathi : His Life and Poetry | „ | 2—0—0 |
| Sundaram : | Beatiful Lanka, | Re. | 1-10—0 |
| Tamil Encyclopaedia, 10 Volumes | (Vols. 1—5 are ready) each | Rs. | 25—0—0 |

| | | | |
|---|---|---|---|
| Padmanabhan : | Nepolean Bonaparte | Re. | 1—0—0 |
| Murray, Gandhiji : | The Story of His Life | „ | 1—4—0 |
| Sykes : | Rabindranath Tagore | Re. | 1—50 np. |
| Hughes and Hughes : | Learning and Teaching | Rs. | 6—50 np. |
| Stories of Islam | Book I | | As. 5 |
| „ | „ II | | As. 7 |
| „ | „ III | | „ |

Bhatia : What Basic Education Means
Higham : Pioneers of Progress
Attwood : Louis Pasteur
Johnson : Marco Polo
Schweitzer : Out of My Life and Thought
} in the Press

10" Chalienge Clobe Wall Maps of India Asia and the World. } Will be ready Shortly

**ORIENT LONGMANS, 36-A, Mount Road MADRAS-2**



# கண்கள்

(ஸ்ரீ N. S. P. கிருஷ்ணமூர்த்தி – பழைய மாணவர்.)

பள்ளிக்கூடங்கள், வருங்கால சமுதாயத்தை வளமுள்ள சமுதாயமாக மாற்றி யமைக்க வேண்டிய மாணவமாணவிகளை மண்ணுலகிற்கு அளிக்க வல்ல திருத்தலங்கள். ஒரு நாட்டினுடைய வாழ்வும் தாழ்வும் முற்போக்கும், பிற்போக்கும் எழுச்சியும், வீழ்ச்சியும் அந்தநாட்டிலுள்ள பள்ளிகளின் அடிப்படைத் திட்டங்கள் என்று கூறுவது மிகையாகாது. அவைகள் இயங்கும் முறை இவற்றையே பொறுத்திருக்கின்றன. மேற்கூறிய பல்வேறு பாதைகளில் பள்ளிக்கூடங்கள் நாட்டினுடைய நலனில் நல்லதொரு இடம் பெற்றிருப்பதால் அவற்றினுடைய திட்டங்கள் எந்தமுறையில் தீட்டப்படவேண்டும் என்று தீர ஆராய வேண்டியது நம்முடைய இன்றியமையாத கடமைகளுள் ஒன்றாகும்.

எழுத்தாளர்களை எண்ணற்ற அளவிலே பெருக்கும் எந்திரமாகவே அமைந்துள்ளது இன்றைய கல்வி முறை. இந்நிலை ஏன் ஏற்பட்டது என்று உள்ளூர ஆராய்ந்து பார்க்க வேண்டியது நமது கடமை. அதாவது நம் நாடு பலநூறு ஆண்டுகளாக உடலுழைப்பை முக்கியமாக கருதாததே காரணமாகும். நமது நாட்டிலே வாழ்ந்த நல் அறிஞர்களுடைய கண்கள் மண்ணைக் காணவேண்டிய நேரத்திலே விண்ணைக் கண்டன. ஆகவே எங்ஙனம் உள்ள அறிவும் உடல் நலமும், ஒன்றையொன்று தழுவ வேண்டுமென்று எள்ளளவும் எண்ணினார்கள் இல்லை. ஆனால் காலம் மக்களுடைய உள்ளக் கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் பிரதிபலிக்கச் செய்யும் அற்புதமானதொரு மாயக்கண்ணாடி. அன்று வாழ்ந்த மக்களுடைய எண்ணங்கள் அவ்வாறிருந்தன. இன்று காலத்திற்கேற்ப கருத்துக்களை மாற்றி அமைப்பதுதான் அறிவுடைமையாகும். காலம் கற்பிக்கும் கருத்து வேறுபாடுகளை உணர வேண்டுமானால் உலகில் உள்ள வேறு நாடுகளின் வரலாற்றுச் சுவடிகளை சற்று புரட்டிப் பார்க்க வேண்டும். அவர்கள் காலத்திற்கேற்ப கருத்து வேறுபாடுகளை மாற்றி அமைத்து எவ்விதம் முன்னேறி உள்ளார்கள் என்பதில் சிறிது நேரம் சிந்தனை செலுத்த வேண்டும். விஞ்ஞானத்தின் விளிம்பைத்தொட விரட்டிக்கொண்டு செல்லும் விஞ்ஞானிகள் நிறைந்த நாடு என்று கூறப்படும் இரஷியா நாட்டின் கல்விமுறை ஏட்டுக் கல்வி, உலகியலறிவு இரண்டையும் தழுவியே அமைந்துள்ளது. அஃதேபோன்று அமெரிக்கா பரந்த பண்பு, சிறந்த எண்ணங்கள் இவற்றைக்கொண்ட மக்கள் வாழும் நாடு. ஆதலால் அங்குள்ள பள்ளிகளில் நூலறிவோடு, உடல் உழைப்பை உட்கருத்தாகக்கொண்ட தொழிற் கல்வியும் புகட்டப்படுகிறது. மேலைநாடுகளில் இவ்விரண்டையும் இரு கண்கள் போலக் கருதி காப்பாற்றி முன்னேற்றப்

பாதையில் முழங்கிச் சென்று, விஞ்ஞானம் என்னும் விளக்கின் ஒளியால் அஞ்ஞானம் என்னும் இருளை அகற்றி, எஞ்ஞான்றும் உலகம் விந்தையுறும் அளவிற்கு வாழ்க்கை எய்தி வருகின்றன. ஆகையால் அந்த நாடுகளை நல்லதொரு எடுத்துக் காட்டுகளாகக் கொண்டு நாமும், நம் நாடும் நல்லதொரு முன்னேற்றப்பாதையை வகுக்கவேண்டும் 'கல் தோன்றி மண் தோன்றா முன் தோன்றிய வர்களல்லவா நம் மக்கள்!' என்று பழமைகளின் பண்புகளைப் பார்த்துப் பெருமிதமும், கர்வமும் கொண்டு வாழ்நாட்களை வீண்நாட்கள் ஆக்காது, ஆக்க வேலைக் குதவும் கருத்துக்கள் எங்கெங்கு காணப்படுகின்றனவோ, அங்கெல்லாம் அவற்றை நடைமுறையில் கையாண்டு வெற்றி காண்பது தான் அறிவுடைமை.

பள்ளியில் பயிலும்போதே மாணவ,மாணவியர்கள் உடலுழைப்பின் உயர்வை உணர்ந்தால், உடல் வனப்புடன் உடல் வலிவும் பெறுவர். இக் காலத்திய மாணவ மாணவியரைப் போன்று உடையில் மட்டும் கவர்ச்சியைக் காணாது பழந் தமிழ்ப் புலவர் பெருமக்கள் பாடியதுபோன்று 'அல்லையாண்டமைந்த மேனிஅழகன், கல்லையாண்டுயர்ந்த தோளான்' என்றபடி வாழலாம். இயற்கை அன்னையின் பேரருளால் சிருஷ்டிக்கப் பட்ட இயற்கை வளம் மலிந்து கிடக்கும் எழில் மிக்க இன்ப ஊற்று நம் நாடு. இச் செல்வங்களை உவர்நிலத்தில் விதைத்த நெல்லாக்காது, நல்ல முறையிலே பயன்பெறச் செய்ய உடலுழைப்பு அவசியம். பள்ளிகளில் அதற்கு வேண்டியவை நிறுவப்படுமாயின் சாலவும் சிறந்தது. வருங்கால சமுதாயம் வளமுள்ள சமுதாயமாகத் திருத்தியமைக்கப்பட வேண்டுமானால், வருங்கால சமுதாயத்தில் 'யான் பெற்ற இன்பம் இவ் வையகம் பெறுக', என்ற தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்கள் பொலிவுடன் திகழ வேண்டுமானால், எதிர்காலசமுதாயத்தில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற ஏற்றத் தாழ்வுகள் இன்றி 'யாதும் ஊரே யாவரும் கேளிர்,' 'ஒன்றே குலம், ஒருவனே தேவனும்' என்ற அமரகவியின் கருத்துப் பொதிந்த எண்ணங்கள் எல்லோருடைய மனத் திலும் எதிரொலிக்க வேண்டுமானால், மக்கள் பிணக்கு பூசல்களை மறந்து, 'தோளோடு தோள் சேர்த்து முன்னேறு' என்ற பாரதரத்தினமாம் பண்டித நேருவின் பண்புள்ள வார்த்தைகள் பரிமளிக்க வேண்டுமானால், பழமையின் பண்பும், புதுமையின் புத்துணர்ச்சியும் இரண்டறக் கலக்கும் நிலையாகிய நூலறிவும் உடலுழைப்பும், பள்ளிக்கூட கல்வி முறையில் முக்கியத்துவம் பெறவேண்டும்.

அவ்வாறு முக்கியத்துவம் அளிக்கப்படுமானால் வறண்ட பாலைவனமாகக் காட்சி அளிக்கும் சமுதாயம் வளமிக்க வண்ணமலர்ச் சோலையாகத் திகழும். ஆகையால் 'உள்ளுவதெல்லாம் உயர் வுள்ளல்' என்ற பொய்யா மொழிப் புலவனும் வள்ளுவனின் வாக்கைக் கடைபிடித்து, அறிவிலும் உடல் உழைப்பிலும், உயர்ந்து முன்னேற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

—— : ——

---

"பிறர்மீது குறை கூறுவது யாருக்கும் பொருந்தாது. மற்று பிறரிடம் குணம் காண்பவன் தானே குணசீலன் ஆகிறான்".

"தான் கண்டுகொண்டிருக்கும் முடிவில்லாத கனவை மனிதன் வாழ்வு என்னும் கண்ணியமான பெயரிட்டு அழைக்கிறான்".

**Personalities from outside that Visited our School in Connection with Functions – 1957.**



SHRI S. MUTHU KONAR, B. A., L. T.,
(Head Master, Bd. High School, Batlagundu.)
*Presided over the L. D. S. Anniversary.*



SHRI A. VENKATASAMY, B. A., L. T.,
(Head Master, Basic Trg. School, Batlagundu.)
*Presided over the L. D. S. Inaugural Function.*



MRS. KAMALA SAMUEL,
(Asst. District Guide Commissioner.)
*Inspected the School Bulbul Flock.*

# Personalities from outside that Visited our School in Connection with Functions – 1957.



SHRI D. J. G. C. PANDIAN
( Inspector of Central Excise )
*Presided over the School Annual Sports 1957.*



DR. S. SENDHIVELU, B. SC., M. B. B. S.
( Poly Clinic, Pattiveeranpatti. )
*Delivered a Lecture on World Health Day.*



MR. A. C. MILLS, M. SC.,
( Agricultural Missionary, Batlagundu. )
*Presided over the*
*Sixth Form Pupil's Farewell Function.*

பட்டிவீரன்பட்டி, நாடார் சுந்தர விசாலாட்சி வித்தியாசாலா உயர்தரப் பள்ளியின் நிர்வாகியும் காரியஸ்தருமான

# உயர்திரு. ஊ. பு. அ. ர. சந்திரசேகரன் அவர்கள்

சென்னை மாநிலச் சட்டசபை அங்கத்தினர் ஆனமைபற்றி

**ஷ பள்ளி ஆசிரியர்களும், மாணவ-மாணவிகளும்**

பணிவுடன் வாசித்தளித்த

# பாராட்டு இதழ்.

**பாரோர் போற்றும் பண்புடையாள!**

தென்னகத்தின் கண்ணென விளங்கும் நம் மதுரை மாவட்டத்தில், நிலமகள் திலகமாய்த் திகழும் நிலக்கோட்டைத் தொகுதியில் 6-3-'57ல் நிகழ்ந்த சென்னை சட்டசபைத் தேர்தலில், பல்லாயிரக் கணக்கில் வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளீர்கள். தங்கள் வெற்றி கேட்டு நாங்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

**குணமென்னும் குன்றேறி நிற்கும் பெரியோய்!**

நீவிர் திருவும் கல்வியும் ஒருங்கே பெற்று, சால்பினிற் சிறந்த நற்குடிப் பிறந்தீர். உயிரினும் சிறந்த ஒழுக்கம் உடையீர். உள்ளத்தால் பொய்யாதொழுகி, உலக மக்கள் உள்ளத்து நிறைந்தீர். கலைபயில் தெளிவும், கட்டுரை வன்மையும், இன்முகச் செவ்வியும் இனிதே நிரம்பினீர். பாடறிந்தொழுகும் பண்புகொண்டுள்ளீர்.

**கல்வியே கண்ணெனக் கருதுநற் செல்வ!**

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பெருநோக்கோடு, நம்மூர்ப் பெருமக்கள் தோற்றுவித்துப் பேணிவந்த கல்விச் சாலைகளைப் பெருக்குவித்துப் புகழடைந்தீர். அதன்கண் கல்வியெனும் கண் திறக்கப்பட்டுப் பாரினில் பல்துறைகளிலும் சிறந்து வாழும் பலரும் அப்பள்ளிகளுக்கு நன்றி நவிலும் கடப்பாடுடையோர் அன்றோ!

**பணிபல புரிவதே பண்பெனக் கொண்டோய்!**

நமதூரில் நன்செய் விவசாயிகள் சங்கம் நிறுவினீர். பழனிமலைப்பழ உற்பத்தியாளர் சங்க அமைச்சராக இருக்கின்றீர், சென்னை மாநில விவசாயிகள் சங்கச் செயற்குழு உறுப்பினராகவும், பொருளாளராகவும் பணிபுரிந்து வருகின்றீர். காபி மார்க்கட்டிங் கமிட்டி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தொண்டாற்றுகின்றீர். மதுரை மாவட்டப் பூதானக் கமிட்டியின் அமைப்பாளராக அமர்ந்து, பூதானம் ஈந்து, புவியில் புகழ்பெற்றதோடு பலரையும் பூதானம் செய்யச் செய்து, சமதர்மக் கொள்கையைப் பரப்பி வருகின்றீர். இவ்வாறு வழிவழியாகத் தொண்டுசெய்யும் தங்களைச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்ததால் அப்பதவி பெருமையடைந்தது என்பது மிகையாமோ?

**கடமையே உயிரெனக் காக்கும் நற்றகையீர்!**

நாட்டு மக்களுக்குக் கிடைத்த சுதந்திரம் பயன்படக் கட்டாயக் கல்விமுறையைக் கொண்டுவருதல் வேண்டும். இன்பமறியா ஏழ்மையை நீக்கி, இந்திய நாட்டை இணையற்ற செல்வம் கொழிக்கும் சீர்மிகு நாடாகச் செய்தல் வேண்டும். படிக்க வசதியற்று, வாழ்நாளை வீணுக்கும் அனைவர்க்கும் உண்டியும், உறையுளும் ஈந்து கல்விகற்பிக்க வழிவகை செய்யவும், இவ்வகையில் ஏழ்மையையும், அறியாமையையும் போக்கவும் தாங்கள் தொண்டு புரிந்து பாரினில் பல்லாண்டு இனிதுவாழ எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

பட்டிவீரன்பட்டி,
25-3-1957.

தங்கள் அன்புள்ள,
நா. சு. வி. வி. உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களும், மாணவர்களும்.



# MEDIUM OF INSTRUCTION IN COLLEGES

## English or Regional Language.

In modern times there is a keen contest whether English or the regional language (Tamil) should be the medium of instruction in colleges. It is still an unsolvable one.

Some are of opinion that English should be the medium of instruction in colleges. They argue that English is an international language, and it is in use in every part of the world. With a knowledge of English we can travel the whole universe, they say. Though English is a foreign language it is greatly responsible for the improvement of the Indian Culture, Indian foreign trade and Indian civilization. Most of the important books and other sciences are written in English. If English is replaced by Hindi or any other regional language like Tamil, there is no unity, but diversity.

The other set of people are of opinion that Tamil should be the medium of instruction in colleges. They argue that it is the only language which has the singular advantage of being rich in literature and commanding wider circle of usage. Further they argue that in much as we are Tamilians, we can easily grasp every thing very quickly and precisely.

If we go through the arguments we come to the conelusion that though Tamil or Hindi has several advantages, English alone has the merit to be the medium of instruction in colleges. If not, higher education is of no use in future. Most of the living historians and politicians are of opinion that English should be the medium of instruction for higher education, though not in elementary education.

(S. Muppilia Pillai, VI Form.)



# MUTHU THE IDIOT

(V. Mayilan, IV Form B)



Muthu lived with his mother in a small village. He was so foolish that he could neither read nor write even a single sentence. One day his mother sent him to work. On that day he got four annas for his wage. He returned home placing the coins in his pocket, which was torn Reaching home, he found that the coins were missing. He told the matter to his mother His mother got angry with him and scolded him for his foolishness. She said, "Oh foolish Muthu! Whey did you not bring the coins in your hands?" Muthu said "Don't be angry with me mother. Hereafter I will do as you instructed".

The next day, he went to work. That day he got milk, instead of coins, as wage. He spilt the milk as he brought it home in his hands. Hearing this, his mother scolded him saying, "Oh Idiot, can't you bring the milk in a pot keeping it on your head?" Muthu said, "Mother, I will do like that hereafter."

On the third day he got a different work to do and got a different wage. That was an ass. Bearing the ass on his head in a large basin, he walked along the road. On his way there was a palace. The princess, standing on the balcony, looked at Muthu, carrying an ass on his head, that too in a large basin. That was indeed a great amusement to her. Therefore the princess, who remained mute so long out of sorrow, began to laugh her heart out. The king had already proclaimed to his subjects that any one who could make his daughter laugh and speak would be presented with a large some of money. Many people tried to make her laugh and speak, but no one succeeded. Now Muthu's stupidity had made her laugh and speak. The king came to know this, and summoned Muthu to his presence. When Muthu came before the king, he presented him with a pot of money. Muthu was amazed. He carried the pot of money on his head and reached home. Thus Muthu carried out his mother's instructions. He also became wise and rich.



# PONNAN'S FLUTE

(S. Vidhyavathi, III Form A)

Ponnan was fond of playing the flute. When he began to play, all the birds and animals gathered round him. Even the trees stood still. One day his flute was lost. "Alas! What shall I do?" he cried. At once all the animals gathered round him. When they saw that there was no flute in his hand, they guessed the reason for his melancholy mood.

"How can we help our friend Ponnan?" they all began to think. After sometime a tiger brought a small toy-gun and said "Ponnan, don't worry. Use this as a flute". A cow gave him an old cigar pipe. The elephant brought a bamboo. A snake gave a 'makudi' (snake charmer's pipe). A monkey took a reed and gave it to Ponnan. In a short time three was a lot of articles around Ponnan. But Ponnan didn't even look at them. So the birds and animals stood around him very sadly.

In the same forest where Ponnan was, there were also two hunter lads named Kali and Mari. They were naughty boys. They dind't like Ponnan because the animals and birds were very fond of him. So one night when Ponnan was sleeping, they took his flute and ran away. The next morning they began to play the flute. But no sound came out. They blew and blew. Still no sound came. Something was sticking inside. Two parrots were watching them. They knew that it was Ponnan's flute. So they tried to snatch it from them. But they drove the parrots away. Seeing this the monkeys climbed up the coconut tree and threw coconuts on them.

Now Kali and Mari were very much afraid. They ran away to their house. They tried to hide the flute in a wooden box. When they opened the box, a big rat came out of it. Seeing that all the birds and animals favoured Ponnan. they desired to return the flute to Ponnan, Mari said, "O Kali! Why should we keep this useless flute with us? Let us return this to Ponnan". Kali agreed. So they took the flute to Ponnan and begged pardon of him.

With great pleasure Ponnan began to play the flute. When he played, many bees came out of it. It was the reason way the flute was silent so long. Kali and Mari were surprised to see that even the bees helped Ponnan. They gave up their jealousy, and enjoyed the music.




In CARDAMOM cultivation, the chief enemy of the planters is an Insect pest known as Thrips. Get rid of this pest by dusting GAMAXENE an ICI product, available with us. For further particulars, please call on us.

**த்ரீப்ஸ்;** ஏலக்காய் மகசூலை மிகவும் பாதிக்கும். இந்தப் பூச்சியைக் கொல்ல **"கெமாக்ஸென்"** என்னும் மருந்தை உபயோகப்படுத்துங்கள். ஐ. ஸி. ஐ. கம்பெனியார் தயாரிக்கும் இந்த மருந்து எங்களிடம் கிடைக்கும்.

NITROGEN, PHOSPHORUS and POTASH are the three essential elements for healthy plant growth Available in RALLIS fertilisers in well proportioned forms for different kinds of crops. Mixed fertilisers for coffee, cardamom, plantains and fruit trees are available with us. For further particulars, please call on us.



**நைட்ரஜன், பாஸ்பரஸ்,** பொட்டாஷ் ஆகிய இம்மூன்று உரச் சத்துக்களும் தாவரங்களுக்கு மிகவும் அவசியம். இவைகள் எங்களிடம் கிடைக்கும்.

**ராலிஸ் கம்பெனி உரங்களில் சரியான விகிதங்களில் பல பயிர்களுக்கும் கிடைக்கும்.**

ஐ. ஸி. ஐ. பூச்சி மருந்துகளுக்கும் 'ராலிஸ்' கம்பெனி உரங்கள் தேவைக்கும்

## டபிள்யு. பி. ஆர்ஸி அன் கோ., பட்டிவீரன்பட்டி.

எங்களிடம் வாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

★

For ICI Insecticides and RALLIS Fertilisers Please call on us.

## W. P. ARCEE & CO., PATTIVEERANPATTI.

பட்டிவீரன்பட்டி

# நான்காம் ஆண்டுப் பொருட்காட்சி விழா

# 1958

இடம்: நாடார் சுந்தர விசாலாட்சி உயர்நிலைப்பள்ளி,

பட்டிவீரன்பட்டி

---

பத்திரகாளியம்மன் திருவிழாவையொட்டி சென்ற ஆண்டுகளைப் போலவே இந்த ஆண்டிலும் புஷ்பங்கள், கனி வர்க்கங்கள், காய்கறிகள், மலை விளைபொருள்களாகிய, காபி, ஏலம், இஞ்சி, மற்றும் புகையிலை, பெண்மக்கள் தம் வீடுகளில் தாமே செய்துள்ள பின்னல்கள், சித்திரத்தையல்கள், இதர அழகிய கைவேலைகள் முதலியவற்றைக்கொண்டு ஒரு கிராமாந்திரப் பொருட்காட்சியாக நடத்தப்படும்.

★

**ஆகையால், அனைவரும் காட்சிப்பொருள்களைப் பெரிய அளவிலும், சிறந்த முறையிலும் அனுப்பிவைக்க அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

★

**ஒவ்வொரு பகுதியிலுமுள்ள சிறந்த காட்சிப்பொருள்களுக்கு சென்ற ஆண்டுகளைப்போலவே இந்த ஆண்டிலும் பரிசுகள் வழங்கப்படும்.**

# செயற்கைச் சந்திரனில் சென்றோம்

( அ. அற்புதம் சாமுவேல், 6-ம் தருநிலை. )



"விஞ்ஞானம் நமக்கு விளைத்தவை விளக்க முடியாதவைகளாகயிருக்கின்றன. ஆமாம், ஐன்ஸ்டீன் ஆய்ந்துவெளியிட்ட அணுசக்தி மன்னுயிர்களைக்கொன்றுகுவிக்கும் சக்தியைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. ஆக்கவேலைக்கு அதன் உதவி பெரிதும் பயன்படுகிறது. முன்னது சொன்னதையே இந்நாளில் மூவல்லரசுகள் செய்ய முனைந்துள்ளன. இந்நிலை மாறுமா! நன்னிலை வருமா!." என்ற ஏக்கத்தோடு வெளியே கிளம்பினேன் வீட்டை விட்டு.

நரைமுடியுடையோர் ஒருபக்கம், நம்பிமார்கள் ஒருபக்கம் - நங்கையர் சப்தம் ஒருபக்கம் — என்னைப்போன்ற இளைஞர் கூட்டம் ஒருபக்கம். இவர்கள் ஏன் ஆகாயத்தை என்றுமில்லாமல் இன்று தொலைநோக்கிக் கண்ணாடிகளைக்கொண்டு உற்று நோக்கிக்கொண்டிருக்கிறார்கள்?, என்ற வினா என்னைக் காரணமறியத்தூண்டியது. வானத்தைக் கிழித்துக்கொண்டு வட்டமிட் டுக்கொண்டிருக்கும் தாரகையை - ஆமாம் சோவியத் யூனியன் படைத்த அந்தச் செயற்கை நிலவை-(ஸ்புட்னிக்) அதிசயத்தை நின்றுகொண்டு நோக்கிக்கொண்டிருக்கிறார்கள் என்ற விடையை எனக்கு நாளேடு சிறிது நேரத்தில் நவின்றது. நாய்களைக் கல்லால் அடிக்கும் கருணை உள்ளம்கொண்ட சிறார்கள்கூட ராக்கெட்டில் நிலவொடு வைத்து அனுப்பப்பட்டிருக்கும் "சின்னப்பெண்" (லெய்கா) என்ற நாய் தெரிகிறதா? என்ற ஆவலோடு ஆகாயத்தை உற்றுக் கவனித்துக்கொண்டிருந்தனர், தம்பக்கத்தில் நாய் நின்றுகொண்டிருப்பதை மறந்து.

உலகமே மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்திருக்கும் இந்நேரத்தில் நான் மட்டும் ஆனந்தம் கொள்ளாமல் இருப்பேனா? ஆயினும் என் உள்ளத்தில் கவலை மேற்கொண்டது. கவலையொடு ஆராய்ச்சிக் களத்தை நோக்கி நடந்தேன்.

ஆராய்ச்சிக் களமடைந்தேன். சிறிது நேரத்தில் நண்பர் வந்து சேர்ந்தார். "கவலை ஏன்? இந்த ஆராய்ச்சி உலையிலே?" என்றார். "அல்லும் பகலும் அயராது எதற்காகப் பாடுபட்டு வந்தோமோ - அதில் ரஷ்யா வெற்றி பெற்றுவிட்டதே!" என்றேன். "நண்பரே! நாயைத்தானே வைத்து அனுப்பியிருக்கிறது ரஷ்யா, இனி நாமே நமது ராட்சத விமானத்தில் செல்வோம்" என்றார் அவர். துணிவு ஆராய்ச்சியில் அவருக்குள்ள அவாவை அது வெளிப்படுத்தியது. ஒத்த கருத்தை உடையவரானோம். பன்னாட்கள் சலியா உழைப்பில் ஈடுபட்டோம். ராட்சத விமானம் அமைத்தோம். என் நண்பர் பயணத்திற்குச் சித்தமானார். உயிர்வளி - உணவு, இவைகள் கிடைக்கும் வண்ணம் அமைப்புகள் அமைக்கப்பட்டிருந்தன அவ் விமானத்தில்.

58 செ. மீட்டர் விட்டமும், 83·6 கிலோ கிராம் எடையும் உள்ள "ஸ்புட்னிக்" புதியதோர் சகாப்தத்தைத் துவங்கியிருக்கிற இந்நேரத்தில்

என் நண்பர் வளிமண்டலத்தின் உச்சிப் பகுதி நோக்கிப் பயணமானர் - இரவு 9 மணிக்குப் புறப்பட்டார். மறுநாள் காலே 'வானொலி' செய்தியைப் பரப்பியது. "ரஷ்யாவுடன் இந்தியா போட்டி போடுகிறது". இவ்விதம் தலேயங்கம் தீட்டின செய்தித் தாள்கள். வளிமண்டலத்தின் மேற்பகுதிகள் பற்றிய பூ பௌதிக விவரங்களே நாங்கள் அனுப்பிய சந்திரன் பதிவுசெய்யும் வண்ணம் அமைப்புடையதாக இருந்தது. காஸ்மிக் கிரணங்களே பூமியின் காந்தப்புலனின் இழுவிசையை-சூரியன் கதிர்வீச்சை - விண்கற்களின் வேகத்தை-அவற்றின் சக்தியை நண்பர்வாயிலாக அறிந்தேன். ஆராய்ச்சி விபரங்களேப் பூமிக்குத் தெரிவிப்பதற்கான ஒலிபரப்புக் கருவிகளும் அமைக்கப்பட்டிருந்தன, நாங்கள் அனுப்பிய சந்திரனில் செயற்கை நிலவு மண்ணிற்குத் திரும்பிவரமுடியாது. ஏன்? அடர்த்தி மிகமிக்க் குறைவான மேல் வளிமண்டலத்தில் தான் சுற்றுகிறது என்றாலும்கூட நாளடைவில் வேகம் குறைந்து பூமியின் காற்று மண்டலத்தின் கீழ்ப் பகுதிகளுக்கு இறங்கிவந்துவிடுவதால் காற்றுடன் உராய்ந்து மிகவும் சூடேறி இறுதியில் அவை எரிந்து போய்விடும்.

என் நண்பரும் செயற்கை நிலவுடன் வான வளி வெளியில் சுற்றிக்கொண்டிருந்தார். வான வெளியை உற்று நோக்கிக் கொண்டிருந்தது என் கண். திடீரென என் காதுக்கும் செய்தி - ஆம் இன்பச் செய்திதான். "சந்திரமண்டலத்தை அடைந்துவிட்டேன்" என்ற என் நண்பர் செய்தி என்னே இன்பக்கடலில் ஆழ்த்தியது. ஏடும் நாடும் போற்றின எங்களே, இந்தியாவை. "புறப்பட்டு வருக" என்ற என் நண்பர் செய்தி கேட்டேன். இரண்டு ராட்சத விமானங்களே ஒரு ராட்சத விமானத்தில் அடக்கி நான் புறப்பட்டேன்.

சின்னட்களுக்குப் பிறகு சந்திரமண்டலத்தை அடைந்தேன். நண்பரைக்கண்டேன்; மகிழ்வு கொண்டேன்; அளவளாவினேன் அதிக நேரம். பாந்தநிலம்—பார்வைக்குக் குளிர்ச்சியானது. அங்கு சென்றதும் எங்களுக்கு அதிகச் சக்தி பிறந்தது. சூரிய மண்டலத்தில் ஒரு மாத்தைத்தாண்டுவது கடினம்; ஆனல் சந்திர மண்டலத்தில் மலேயையே தாண்டும் சக்தி எங்களிடம் தோன்றியது.

பஞ்சம், பட்டினி, படுகொலே—ஆமாம் ஜனத்தொகை, ஜனநெருக்கம், ஜாதித் தொல்லேகள் இவைகள் மலிந்துள்ள மண்ணுலகில் அவைகள் நிலவி வருகின்றன. இந்நிலேமாற, இழிநிலே போக்க நெடுநேரம் ஆய்ந்தோம். மக்களேச் சந்திர மண்டலத்தில் குடியேற்றி, சாதியற்ற ஒரு சமுதாய அமைப்பை ஏற்படுத்தி, நீதியை நிலேநிறுத்த விரும்பினேம். மக்கள் எப்படி வாழ்தல் வேண்டும்? என்னென்ன வழிகள்மூலம் மக்கள் இடுக்கண்களே அகற்ற முடியும்? என்பனவும்—இன்னேரன்ன பிறவும் பற்றி ஆய்ந்தோம். எங்களுடைய திட்டங்களே இந்திய அரசாங்கத்திற்கு அளிக்க விரும்பினேம்.

எழில்மிகு பூமியை நோக்கி விரைந்து வந்தோம். வாயுவேகம், மனேவேகத்தில் வந்த எங்கள் ராட்சத விமானத்தில் திடீரென ஒரு அதிர்ச்சி. தொப்பென நான் தலேகுப்புற விழுந்தேன். எங்கே? பூமியில். ஆனல் ராட்சதவிமானத்திலிருந்து அல்ல — கட்டிலிலிருந்துதான். அப்பொழுதுதான் தெரிந்தது நான்கண்டது கனவு என்று. ஆம் உணர்ந்தேன் அதை.

படுக்கையிலிருந்து எழுந்த நான் என்கனவு பலிக்குமா? என்ற ஏக்கத்தோடு நின்றேன். ஏன் முடியாது? சாதியொழித்து, சன்மார்க்சம் நிலவி, இந்தியா சுபிட்சப் பாதையில் சென்றால்—ஆம், வறுமை என்ற பெரிய பூதம் நம் நாட்டை விழுங்காமல் இருந்தால், விஞ்ஞானம் வளர்ந்து ஒளி விட்டால்—ஏன் முடியாது?

# OUR SCHOOL DRAMATIC GROUP, 1957.




பள்ளி ஆண்டு விழாவில் பங்குபெற்ற மாணவர்கள்

★



பள்ளி ஆண்டு விழாவில் பங்குபெற்ற மாணவிகள்

**FIRSTS' IN THE ANNUAL EXAMINATION, 1957— ஆண்டுத்தேர்வில் முதன்மையாகத் தேறியவர்கள்**



P. தங்கையா, S. S. L. C. பரீட்சை



A. அற்புதம் சாமுவேல், V A



N. இரத்தினவேலு, IV C



M. புன்னைவனம், III B



K. பிறைமதி, II A



D. சாயிபாபா I B

# ஜான்ஸியின் வீரம்



'தோன்றிற் புகழொடு தோன்றுக! அஃதிலார் தோன்றலின் தோன்ருமை நன்று.' புகழுடன் தோன்றிப் புகழுடன் வாழ்ந்து மங்காது மறைந்த ராணி லட்சுமிபாயின் வரலாறு வீரம் செறிந்த ஒரு தியாகக் காவியம்.

லட்சுமிபாய் காசியில் தோன்றி வளர்ந்தாள். அவருடைய இளமைத் தோழர் நாணு சாகிப்பும், தாந்தியா தோபேயும். இளைஞன் நாணுவும், சிறுமி லட்சுமியும் ஒன்ருக வாட் பயிற்சியும் குதிரை யேற்றமும் பயின்றவர்கள். தேச சரித்திரத்தில் சுடர் விடடுப் பிரகாசித்த அவ்விரு மாணிக்கங்களும் சின்னஞ்சிறு வயதில் இருந்தே ஒருவரை ஒருவர் உடன் பிறந்தவரைப்போல் நேசித்தார்கள். இளைஞன் நாணு குதிரை ஏறி லட்சுமியின் வருகைக்காக காத்திருப்பான். இடையில் சிறுவாள் தொங்கச் சிவந்த மேனி இன்னும் சிவக்கத் தலைமயிர் காற்றில் பறக்க நாலுகால் பாய்ச்சலில் குதிரை மீது வருவாள் லட்சுமி. அப்போது அவளுக்கு வயது ஏழு. நாணுவுக்கு வயது பதினெட்டு.

சில வருடங்கள் கழிந்து லட்சுமிபாய் ஜான்ஸி மன்னனை மணந்து ஜான்ஸி ராணியாளுள். திருமணமாகிய சில வருடத்தில் லட்சுமி பாயின் கணவன் பிள்ளை இல்லாது இறந்து விட்டான். தத்துப் புத்திரனை அங்கீகரிக்க ஆங்கில அரசாங்கம் மறுத்துவிட்டது. ஜான்ஸி ராஜ்யத்தை சேர்த்துக்கொள்ள ஆங்கிலேயர்கள் திட்டம் வகுத்தார்கள்.

வீறிட்டு எழுந்தாள் லட்சுமிபாய். "என்னுடைய ராஜ்யத்தை விட்டுக் கொடுப்பதா? ஒருக்காலும் முடியாது" என வீரமுழக்கம் செய்தாள். கணவனின் மரணத்திற்குப்பின் ஜான்ஸி நாட்டுப் பொறுப்பைத் தானே ஏற்றுக்கொண்டாள். ஆங்கிலேயர்கள் ஜான்ஸிக் கோட்டையை ஆக்கிரமித்தனர். அந்த அநீதியை எதிர்த்து மக்களை எழச் செய்யத்தக்க தருணத்தை எதிர் நோக்கி இருந்தாள் ராணி லட்சுமி. 1857 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் தேதி கான்பூர் நகரம் பீரங்கிப்புகை மண்டலத்தால் மூடப்பட்டிருந்த பொழுது மின்னலைப் போல் பாய்ந்து வந்து புரட்சி அரங்கில் குதித்தாள். புரட்சி வீரர்கள் ஜான்ஸிக் கோட்டையைக் கைப்பற்றினர். ஆங்கிலேயரின் ஆதிக்கம் அழிந்தது. ஜான்ஸியின் மாநிலம் விடுதலை அடைந்தது.

அச் சமயத்தில் இந்தியாவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யமே ஆடிக் கொண்டிருந்தது. கான்பூரிலும், லட்சுமண புரியிலும், மீரத்திலும், டெல்லியிலும் மக்கள் விடுதலைக்காக எழுந்தனர்.

ஆயிரமாயிரம் விடுதலைக் குரல்களுக்கு ஆதார சுருதி போன்று ராணி லட்சுமியின் வீர கர்ஜனை கேட்டது.

1857 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் தேதி போர் ஆரம்பித்தது. இரவும், பகலும் பீரங்கிகளும், துப்பாக்கியும் வெடிகளும் முழங்கின. புழுதியும் புகையும் ஆகாயத்தில் நிரம்பின. குதிரைகளின் குளம்புச்சப்தம் பல மைல்களுக்குக் கேட்டது. தளராத உறுதியுடன் லட்சுமிபாய் போரைத்தொடர்ந்து நடத்தினுள். ஆண் உடை தரித்துக் குதிரைமீது ஏறிப் போர் வீரர்களுடன் கலந்து, வீரத்தையும் உற்சாகத்

தையும் பரப்பினாள். வாளை வீசிக்கொண்டு தன்னுடைய குட்டியைக் காப்பாற்ற விரையும் வேங்கையைப் போல் போரில் குதித்தாள். அழகிய வதனத்தில் வீரம் ததும்ப, மீன்போன்ற விழிகளில் தீப்பொறி பறக்க, வனப்பும், வீரமும் ஒருங்கே அமையப் பெற்ற உருப்போன்ற ஜான்ஸிராணி போர்க்களத்தில் வீராவேசத்தை உண்டு பண்ணினாள்.

ஆங்கிலேயர்கள் பிரதம வாயிலையும், கொத்தளங்களையும் தாக்கினார்கள். குண்டு மாரி பொழிந்தது. பீரங்கிகள் நெருப்புக் கோளத்தை கக்கின. லட்சுமியின் வீரர்கள் பலமாகத்தாக்கி ஆங்கிலேயர்களைப் பின்வாங்கச் செய்யும் சமயத்தில் தூரத்திலிருந்து சோகக் குரல் ஒலித்தது. தென்புற வாயில் வழியாக ஆங்கிலேயர்கள் கோட்டைக்குள் புகுந்து விட்டார்கள். கோட்டை மதில்மேல் நின்று கொண்டிருந்த இராணி இக்காட்சியைப் பார்த்தாள். அவளுடைய கண்களிலே நீர் ததும்பியது. தாங்க முடியாத துயரம் நெஞ்சை அடைத்தது. தனது வெண் குதிரை மீதேறித் தன்னுடைய தத்துப் புத்திரனைத் தன்னுடன் பட்டுத் துணியால் கட்டிக்கொண்டு பொறுக்கி எடுத்த சில வீரர்களுடன் அவள் புறப்பட்டாள். ஜான்ஸிக் கோட்டையை விட்டு வெளிக்கிளம்பித் தாந்தியாவின் சிப்பாய்களை உதவிக் கழைக்கச் சென்றாள்.

102 மைல்கள் சவாரி செய்து, கல்பியை அடைந்தபின் அக்குதிரை துவண்டு விழுந்து இறந்தது.

கன்னோஜில் நடந்த போரிலும், கல்பியில் நடந்த போரிலும் 150 ஒட்டகங்கள் கொண்ட ஆங்கிலேய புரட்சி வீரர்களைத் தோற்கடித்த ஜான்ஸிராணி இன்னும் நன்னம்பிக்கையை இழக்கவில்லை. குவாலியர் கோட்டையைக் கைப்பற்றி அதைத் தன் தலைநகராக்கிக் கொண்டு ஆங்கிலேயர்களுடன் மீண்டும் போர் தொடுத்தாள். கோட்டையின் கிழக்கு வாயிலைக் காத்து நின்றாள், லட்சுமி பாய். ரோஸ் என்ற ஆங்கிலேயரின் ஒட்டகப்படை மற்றொரு வாயிலைத்தாக்கிக் கோட்டைக்குள் நுழைந்தது. ஆங்கிலக் குதிரை வீரர்கள் லட்சுமியைச் சூழ்ந்துகொண்டனர். அவளுடைய ஒரு வாள் ஒன்பது வாளுக்குப் பதில் சொல்லியது. ஆனால்—

அந்தோ! பரிதாபம்! லட்சுமியின் வலது புறத்திலும், மார்பிலும் குண்டுகள் பாய்ந்தன. வீரத்தின் பிறப்பிடம் சாய்ந்தது. வீர ரத்தம் சொட்டச் சொட்டச் சந்திரராவ் பக்கத்திலிருந்த குடிசைக்குத் தூக்கிச் சென்றான். இரத்தத்தில் நீராட்டப்பட்டிருந்த அவளுடைய உடலிலிருந்து வீர ஆவி பிரிந்தது. அடிமைத்தனத்தின் தீண்டலால் அவளுடைய புனித வீர உடல் மாசு படுமுன் தகனக்கிரியை நடத்தினான் சந்திரராவ்.

ராணி லட்சுமிபாய் ஒழுக்கத்தின் இருப்பிடம், வீரத்தின் திரு உருவம், பாரதப் பண்பாட்டின் அழியாத ஓவியம். 23வயது நிரம்பாத அவ்வீர மங்கை இந்திய மக்களின் உள்ளத்தில் நிரந்தரமான இடம் பெற்றுவிட்டாள்.

என்னே ஜான்ஸி ராணியின் வீரம்!

— ப. கிருட்டிணசாமி, நான்காம் தகுதிலை.

# "நான் கண்ட விழா"

உலகின்கண் பற்பல நாடுகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும், நாகரிகம், பழக்க வழக்கம், நடை, உடை பாவனை முதலியவை களில் சிற்சில விஷயங்களில் வேறுபட்டிருக் கின்றன. வழிபாடு விஷயத்தில் பெரும்பாலும் சில வித்தியாசங்கள் தான் உண்டு. தமிழ் நாட் டில் கும்பகோணம், ஸ்ரீரங்கம், விருதுநகர், அழகர்கோவில் முதலிய இடங்களில் திருவிழா ஏறக்குறைய ஒரே மாதிரி யாகவே இருக்கிறது. இதோடு அய்யம்பாளையத்தையும் சேர்த்துக் கொள்ளலாம். மேலே கூறிய இடங் களில் எல்லாம் திருவிழா மிக விமரி சையாக நடக்கும்.



நம் சென்னைராஜ்யத்தில் மதுரை மாவட்டத்தில் உள்ள மலை சம்பந்த மான தொழிலில் சிறந்தது பட்டிவீரன்பட்டி ஒன்று, அய்யம்பாளையம் இன்னொன்று அய்யம் பாளையத்திலுள்ள கோவில்களில் முத்தா லம்மன் கோவில் சற்றுப் பெரிது. இக்கோவி லில் ஆண்டிற்கோர்முறை திருவிழா நடக்கும். இவ்வருடம் நடந்த திருவிழாவில் உள்ளூர்க் காரர்களைத் தவிர அயலூர்க்காரர்களும் பங்கெடுத்துக்கொண்டனர்.

முதல்நாள் இரவு வெளியூர்களில் இருந்து வருபவர்கள் யாவரும் வண்டிகளைக் கட்டி வந்துகொண்டிருந்தனர். வரும்பொழுது வண்டியோட்டும் வாலிபர்கள் மிக விரைவாக வண்டியை ஓட்டினர்கள். சித்தூர், நெல்லூர், சித்தையன்கோட்டை முதலிய ஊர்களி லிருந்து வருவோர்க்கு மோட்டார் வசதியிருந் தாலும், இப்படி எல்லோரும் வண்டிகளைக் கட்டி வருவதுதான் மிகவும் பிடித்தமானது. இருபது, இருபத்தைந்து வண்டிகள் ரயில் வண்டிகளைப்போல் தொடர்ச்சியாக வந்தன. சிறிது பணம் உள்ளவர்கள் நல்ல மாடுகள் பூட்டிய வில் வண்டிகளில் வந்தனர். மற்றவர் கள் சாதாரணக் கூட்டு வண்டியிலேயே வந்தனர். ஆனல், அவர்களும் வில் வண்டி களின் வேகத்தை விட்டுக்கொடுக்கவில்லை. வண்டி இரவில் அதிகத் தூரம் வந்ததால் குழந்தைகளும், பெண்களும் நன்கு தூங்கி விட்டனர். ஆண்கள் மட்டுமே விழித்து வந்தனர். வண்டிகள் யாவும் சித்தூரைத் தாண்டிவிட்டன. மணி சுமார் மூன்றரை இருக்கும். பனிக்காற்று வீசிக்கொண்டிருந்தது. வண்டியோட்டுபவர்கள் அதையெல் லாம் பொருட்படுத்தாது காதை மறைத்து 'மப்ளர்' கட்டிக்கொண்டு வெற்றிலையை வாய்நிறையக்குதப்பிக் கொண்டு வந்தனர்.

கோழி கூவுவதற்கும் அவர்கள் அய்யம் பாளையத்திற்குள் நுழைவதற்கும் சரியாக இருந்தது. அவர்கள் நேராகச் சந்தைப் பேட்டையை அடைந்து அங்கு தங்கள் வண்டி களைக் கழற்றிவிட்டு மாடுகளைப் பிடித்து ஏர்க் காலில் கட்டிவிட்டு மேலே கட்டியிருந்த வைக்கோல், புல்கட்டை எடுத்து மாடுகளின் முன் போட்டனர். நடந்துவந்த களைப்பினல் மாடுகள் படுத்துக்கொண்டு புல்லைத் தின்ன ஆரம்பித்தன. பின் யாவரும் தங்கள் பொட்டலங்களை எடுத்துக்கொண்டு ஆற்றுக்குச் சென்றனர். வருண பகவானின் கருணையினல் வறண்டிருந்த மலைப்பகுதிகளிலும், நாட்டுப் புறங்களிலும் நல்ல மழை பெய்ததின் காரண மாக மணல் எப்போதும் கிடக்கும் மதுரா நதி யில் புனல் தெளிவாய் ஓடிக்கொண்டிருந்தது. இரவுக் குளிர்ச்சியினல் நீர் சிலுசிலுத்திருந்தது. அதில் ஆண்கள் ஒருபுறமும், பெண்கள் ஒரு புறமும் நீராடினர். அம்மனைத் தரிசிக்க

யாவரும் பரிசுத்தமாய் செல்லவேண்டு மென்பதற்காகவே அப்படி நீராடினர். பின் யாவரும் தங்கள் பொட்டலங்களில் இருந்த புது புடவைகளையும், வேஷ்டிகளையும் உடுத்தினர். பெண்கள் மஞ்சளிட்டுக் குளித்துக் கரையில் அடர்ந்து வளர்ந்து வாசனை வீசிக் கொண்டிருந்த தாழம்பூக்களைப் பறித்துக் கொண்டையில் செருகிக்கொண்டனர். நாகரீகத்தின் உச்சியை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும் இந்த இருபதாம் நூற்றுண்டிலே முகத்திற்கு ஸ்னே, பவுடர் பூசாமல் மஞ்சளிட்டு வாசனைத் திரவியம் உபயோகிக்காமல் சந்தனம் பூசி, காகிதப்பூ வைக்காமல் நறுமணம் கமழும் வண்ண மலர்களைத் தலையில் சூட்டிப் பண்டு மக்கள் வாழ்ந்ததை ஒத்தே இவர்கள் வாழ்க்கையை நடத்தினர்.

வரும் வழியில் சந்தைப் பேட்டையின் வாயிலில் திருவிழாவிற்காக மதுரையிலிருந்து வளையல்காரர்கள் வந்து கடை வைத்திருந்தனர். அக்கடையில் பெண்கள் வந்து கைநிறைய வளையல் அணிந்தனர். பின் சந்தையில் தங்கள் இருப்பிடத்தை அடைந்து காலை உணவைப் பொட்டலத்திலிருந்து எடுத்து உண்டனர். பின் யாவரும் கடைகளில் சென்று பழம், தேங்காய் முதலியவைகளை வாங்கிக்கொண்டு கோவிலுக்குச் சென்றனர். வழியில் ஓர் இடத்தில் ராட்டினங்கள் சுற்றிக்கொண்டிருந்தன. சிறுவர்கள் இதில் ஏறவேண்டும் என்று அடம் பிடித்தனர். பிறிதொருபுறம் புல்லாங்குழலையும், மர வண்டியையும் தூக்கிக்கொண்டு வந்த வியாபாரிகளைப் பார்த்துக் குழந்தைகள் வாங்க ஆசைப்பட்டார்கள். வேடம் தாங்கி வந்தவர் பலர் பணம் கேட்டுக்கொண்டு வந்தனர். இதோடு பிச்சைக்காரர்கள் வேறு தங்கள் வறுமையினல் கையேந்தி பிச்சை கேட்டனர். ஊரில் இருந்து வந்தவர்களில் பலர் ஏழைகளாயிருப்பினும், தாங்கள் திருவிழாவிற்காகச் சேர்த்து வைத்த பணத்தை மிச்சம் பிடிக்காமல் சிறுவர்கள் கேட்டதை யெல்லாம் வாங்கிக் கொடுத்தனர். பிச்சை கேட்போருக்கும், மற்றும் பலருக்கும் தங்களால் இயன்றவரை பணம் கொடுத்தனர். வழியில் கூட்டம் மிகுதியாக இருந்ததால் அடி அடியாகத்தான் நகர முடிந்தது. வாத்தியக் கோஷ்டியினர் தங்கள் வாத்தியங்களை இடைவிடாமல் வாசித்துக் கொண்டு தெருக்களைச் சுற்றி வந்தனர். இவ்வளவு இடைஞ்சல்களிடையே கோவிலை அடைந்தனர். பின் முத்தாலம்மனை வணங்கிக் காணிக்கை செலுத்திவிட்டுப் பின் திரும்பினர். வரும்வழியில் அரசாங்க ஆபீஸின் சார்பில் ஓர் விவசாயக் கண்காட்சி இருந்தது. அதனுள் சென்று அங்கே இருக்கும் தானிய வகைகளையும், அதற்கு இடைஞ்சலாயிருக்கும் பூச்சிகளையும் அதைப் போக்கும் மருந்துகளையும் பார்த்தனர். பின், பழ வகைகள் பல வந்து அலங்காரமாக அடுக்கப்பட்டிருந்தன. ஏலம், ரப்பர், காப்பி, போன்ற மலைப் பொருட்கள் மலையிலிருந்து வந்திருந்தன. இதையெல்லாம் பார்த்துவிட்டு பகல் பன்னிரெண்டு மணிக்குத் தங்கள் இருப்பிடத்தை அடைந்தனர். பின், உணவைத் தயாரித்துச் சாப்பிட்டுவிட்டுக் குழந்தைகளை தொட்டிலில் இட்டுத் தாலாட்டி உறங்கச் செய்துவிட்டு மர நிழலில் படுத்துப் பெண்கள் தூங்கினர். ஆண்கள் யாவரும் ஆற்றங்கரைக்குச் சென்று, சீட்டாடியும், குண்டு விளையாடியும் பொழுதைக் கழித்தனர். பின் மாலை நேரமானதும் மறுபடியும் நிகழ்ச்சிகள் தொடங்கிவிட்டன.

பெண்களும் சிறுமிகளும் வரிசை வரிசையாகப் பால் குடம் எடுத்தனர். சிலர் முளைப் பாலிகை எடுத்தனர். அதற்குப் பின்னல் சிலர் குடுகுடுப்பைக்காரன் வேடம், கிருஷ்ணர் வேடம், முதலிய வேஷங்களைப் போட்டுக் கொண்டு வந்தனர். இதனல், அய்யம்பாளையத்தின் முக்கிய வீதிகள் எல்லாம் கலகலப்பாக இருந்தன. இருட்ட ஆரம்பித்ததும் கரகம் ஆரம்பித்தது. கரகக்காரர் தம் திறமைகளை நன்கு காட்டத் தொடங்கினர். மற்றோர்புறம் 'வள்ளி திருமணம்' நாடகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. சுமார் ஒன்பது மணிக்குப்போல் நாடகமும் ஆரம்பமானது. நாடகம் நன்ருக இல்லை என்ருலும் மோசம் என்று சொல்வதற்கில்லை. சுமாராக இருந்தது. பின் யாவரும் இருப்பிடத்தை

# மணலாற்றின் மகிமை



காலை மணி ஆறு இருக்கும். சேகர் படுக்கையில் தூக்கம் வராமல் ஏக்கம்மேலிட புரண்டு கொண்டிருந் தான். செந்நிறச்சேவல் தன் கழுத்தை நீட்டிக் "கொக்கரக்கோ" எனக் கூவிச் செங்கதிரவனை அழைத்தது. அந்த நேரத்தில் ஆதவன் அடிவானத்தில் தன் செந் நிற ஒளிக்கற்றைகளைச் செலுத்தினன். இதைக் கண்ட உழுது விதை விதைத்து உறுபயன் விளைவிக்கும் உழவர்கள் கழனி சென்றனர். சேகர் தன் படுக்கையை விட்டெழுந்து கடவுளைத் துதித்து ஆற்றங்கரையை அணுகி ஞன்.

சேகருடைய நண்பர்களாகிய சுந்தரும், குமாரும் சேகரை எதிர்பார்த்தவண்ணம் ஆற்றங்கரையிலுள்ள அழகான ஆலமரத்தின் அடியில் அமர்ந்திருந்தனர். சேகர் வந்ததும், மூவரும் ஆற்றங்கரையில் அமைந்திருக்கும் அழகான புற்றரையில் படுத்துக்கொண்டு தம் மூளைக்கு எட்டும் கருத்துக்களை வசனங்களாக வும், பாடல்களாகவும் எடுத்துரைக்க ஆரம் பித்தனர். சேகர் தான் காட்டிலே கண்ட காட்சிகளை எடுத்துரைத்தான். சுந்தர் மேனாட்டின் மேன்மையையும், நம் நாட்டின் நாகரிகத்தையும் எடுத்துரைத்தான். குமார் நம் தாய் நாடு சுதந்திரம் அடைந்ததைப்பற்றியும், கருணையின் இருப்பிடமாகிய காந்தி அஹிம்சை என்ற ஆயுதங்கொண்டு அடக்கு முறையை எதிர்த்ததையும், அதற்கு உற்ற துணையாக இருந்த வீரர் சுபாஷ் சந்திர போஸின் உன்னத வீரத்தையும், இரும்பு நெஞ்சம் படைத்த படேலின் பண்பாட்டை யும், ஆசியாவை ஒளி வீசச் செய்தது மட்டு மல்லாமல் அன்றைய உலக சமாதானத்திற் காகப் பாடுபட்டுக்கொண்டிருக்கும் நேர்மை யின் சிகரம் நேருவையும் பற்றி மிகவும் ஊக்கத்துடன் பேசினன். மணி ஏழாகிவிட்டது.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

அடைந்து படுத்துத் தூங்கினர். அயலூர்க் காரர்களினூடேயே நானும் இருந்தேன். அவர் கள் யாவரும் வண்டிகளைக் கட்டிக்கொண்டு புறப்பட்டு விட்டார்கள். ஆனல், நான் மட்டும் என் நண்பரது வீட்டில் தங்கியிருந்து இரண்டாம் நாள் பார்த்துவிட்டு ஊர் திரும்பி னேன். திரும்பும்பொழுது சாயுங்கால நேர மாகி விட்டது. வழியில் கண்ட நண்பர்கள் யாவரும் மஞ்சள் நீர் தெளிக்க ஆரம்பித்து விட்டனர். முற்காலத்தில் தமிழ் நாட்டில் நீர் விழா நடந்ததைப்பற்றி உதயணன் கதையால் அறியலாம். அதைப் போன்றே இதுவும் இருந்தது.

இதனல், தூய ஆடைகள் யாவும் மஞ்சள் நிறமாயின. எல்லோரும் மாறி மாறித் தெளித்ததால் ஏறக்குறைய எல்லோர்மீதும் இவ்வடையாளம் இருந்தது. பின், சிறிது நேரத்தில் சாமியைத் தூக்கிக்கொண்டு ஊர் வலம் வந்தனர். அப்போது வாண வேடிக்கை கள் பல இருந்தன. பின், நானும் எனது ஊருக்குப் பயணமானேன்.

— நா. இராசசேகரன், 6-ம் தகுநிலை, பள்ளி மாணவத் தலைவன்.

பொன்னிற வெயிலில் நீண்ட தோகையை விரித்தாடும் மயில், காதுக்கு இன்னிசை விருந்தளிக்கும் குயில், அழகான சிவந்த அலகுகளையுடைய பசுங்கிளிகள், படையை நடத்திச் செல்வதுபோல் பறந்து செல்லும் பறவையினங்கள், வர்ண முயல்கள் முதலியவைகளைக் கண்டு, செயற்கையழகைவிட இயற்கையழகே சிறந்தது என்று நினைத்தான். முன்னொரு நாள் தான் வேட்டையாடச் சென்ற இடத்தில் ஓர் அருவி அழகாகச் 'சோ'வென்ற சத்தத்துடன் விழுந்துகொண்டிருந்தது அவனுக்கு நினைவிற்கு வந்தது. அவ்வருவியிலிருந்து வரும் தண்ணீர்தான் மணல் நிறைந்த மணலாற்றுத் தண்ணீராகும். அதுவல்லவா இயற்கையின் இருப்பிடம் என்று நினைத்தவண்ணம் மூவரும் எழுந்து அருவி உள்ள இடத்தை நோக்கி ஆற்றுப்படுகை வழியே நடந்து சென்றனர்.

அங்கு எங்கு நோக்கினும் வானை முட்டி வளர்ந்த மரங்களடர்ந்த வனம். பூச்செடிகளும், பலா மரங்களும் நிறைந்த அம்மலைச் சாரலில் அருவி 'ஒல்'லெனும் ஓசையுடன் விழுந்து கொண்டிருந்தது. ஒரு பக்கத்தில் அவ்வாற்றின் நீரினல் வளர்ந்திருக்கும் வாழை மரங்கள். அவ்வாழை இலைகள் அகலமாகவும், செழுமையாகவும் இருப்பது அவற்றின் செழிப்பை விளக்கின. சில விடங்களில் வாழைக் குலைகளிலுள்ள காய்கள் கனிகளாகி மஞ்சள் நிறத்தையடைந்து தொங்கின. மற்றொரு பக்கம் அடி முதல் நுனி வரை பழுத்த பழங்கள் நிறைந்த பலா மரங்கள் இருந்தன. இக்காட்சி யாராவது அவ்வழியே சென்றால் "எடுத்து உண்ணு என்று அழைக்காமல் அழைப்பதை"ப் போன்றிருந்தது. நிழல் நிறைந்த மரங்களடர்ந்த சில விடங்களில் வாசனை வீசும் ஏலச் செடி எழிலுடன் காணப்பட்டது. இன்னும் சில விடங்களில் சிவப்பு நிறத்தை உடைய ஆரஞ்சுக் கனிகள் நிறைந்த மரங்கள் அமைந்திருந்தன. எங்கு நோக்கினும் பூச்செடிகள் நிறைந்திருந்தன. அப்பூக்களில் உள்ள தேனை அருந்திய வண்டின் கூட்டம் அங்குமிங்கும் ரீங்காரமிட்டுக்கொண்டு சுதந்திரமாகத் திரிந்தன. அங்கு வாழும் மக்களிற் சிலர் தேன் பெட்டி தயார் செய்து அப்பூச்செடிகளினிடையில் வைத்துத் தேனை எடுத்து நல்ல ஊதியம் பெறுகின்றனர். இன்னும் மாதுளங்கனியின் மகிமையையும், எலுமிச்சங்கனியின் எழிலையும் கண்ட சேகர், இப்படி வனப்புடன் திகழும் காட்டின்கண் ஊர்ந்து செல்லும் அவ்வாற்றின் கரையில் தான் அமர்ந்திருப்பதையும் மறந்து இறும்பூது எய்தினன். அவ்வாற்றில் எக்காலத்திலும் தண்ணீர் தடைபடாமல் சென்றுகொண்டிருக்கிறது. எல்லாக் கவலைகளையும் மறந்து அவ்வியற்கைக் காட்சிகளை கண்டுகொண்டிருந்த சேகருக்குத் திரிகூடராசப்பக் கவிராயர் இயற்கைக் காட்சிகளை வர்ணித்த பகுதி நினைவிற்கு வந்தது. அந்தக் கவிராயர் பாடிய கனவுப் பாட்டு இங்கு நனவாகிவிட்டதை எடுத்துக் காட்டுவதைப்போல் இவ்விடம் விளங்குகிறது என்று மணலாற்றின் மகிமையைப் பற்றி மகிழ்ச்சியுடன் நினைத்தவண்ணம் வீடு வந்து சேர்ந்தான்.

— ப. சு. சண்முகநாதன், 5-ஆம் படிவம், ஆ. பிரிவு.

**Sports Equipment**
**for all sports**




*Additions:*

Crest Badges,
Citizenship Badges,
Maps, Charts, Books,
PRIZE CUPS
MEDALS & TROPHIES

## FOOT BALLS

T. Shape in all sizes our pride
(Eng. Chrome & Hood Leather.)

## CRICKET

"HIT HARD" The Tough Bat with
Spring Handle.
ROYAL CROWN" the best in balls

## HOCKEY

Remember "VICTORY" & "QUEEN"
the choice of champions.

## BADMINTON

Buy our "MADURAI SPECIAL" & you
buy the best in rackets.

## VOLLEY BALLS

Our Double Patent the much talked
over ball in TAMILNAD & ANDRA DESA

**NETS for all games our speciality.**

## IN SERVICE

FOR ALL SPORTS EQUIPMENT

**1913-1958.**

Worthy of your confidence for quality goods
and FAIR PRICES.

***Catalogue & Estimates on request.***

*

# POPLI BROTHERS

**SPORTS SPECIALISTS**

76-77, West Tower St., MADURAI. (S. I.)
★ Phone: 453

350-351, Main Road, VISAKHAPATNAM.
(Andhra) Phone: 198

# JEGASELVAN & CO.

EDUCATIONAL PUBLISHERS.



R. V. Puram
NAGERCOIL
Phone 154.

Teppakulam
TIRUCHY-2.

***Quality Books*** Approved by the Madras Text Book Committee for Class use

| | | | |
|---|---|---|---|
| MOOVAR TAMIL VACHAGAM (General & Special) by Vidwan G. Vilvapathy & two others | ... | for Forms I to III |
| WARDHA HINDI BHARATI by C. J. Ahalya Devi, B. A. | ... | for Form I |
| THE WARDHA ENGLISH READERS by A. V. Tirumalaiswami, B. A., L. T. | ... | for Form I |
| MY NEW ENGLISH READER by G. M Martin, B. A., L. T., & Sundararaj Paul | ... | for Forms I to IV |
| SAMOOHA ARIVU NOOL by M. R. Srinivasan, B. A., L. T. | ... | for Forms I to VI |
| SEIMURAI GANITHAM by T. K. Ramanathan, B. A., L. T. | ... | for Forms I to III |
| PODU VIGNANAM by V. S. Krishnaswami, B. A., L. T. | ... | for Forms I to III |

Specimen copies will be sent to institutions for favour of perusal and prescription on receipt of requisition

## WARDHA PUBLISHING HOUSE

EDUCATIONAL PUBLISHERS

POST BOX 420 :: TRIPLICANE :: MADRAS-5.



# புத்தக இன்பம்

"கவி நிறைந்த நூல் இன்பமயமன்றோ" எனக் கவிஞர் ஒருவர் கூறியுள்ளது நோக்கத் தக்கது. நூல்கள் கவி இன்பம் பெற்று மிளிருமேல் அவையுள்ள நிலையம் மனத்தையும் அறிவையும் ஒருவழி படுத்தும் இன்பப் பூங்காவாகும். நூல்கள் நிறைந்த ஒரு நூல் நிலையத்தில் நுழைந்தால் உலகக் கவலைகளை அறவே மறந்து உள்ளத்திற்குகந்த ஒரு புதிய உலகில் புகுவதாக உணர்வோம்.

சில வேளைகளில் சதா உழன்றுகொண்டிருக்கும் இவ்வுலகம் சலிப்பைத் தருகின்றது. ஜனங்களின் வெறும் பேச்சும் வீண் சண்டைகளும் வெறுப்பை உண்டாக்குகின்றன. ஆதலால் அறிஞர்கள் நூல் உலகிற் புகுந்து நுண்ணிய பொருள்களை ஆய்ந்து நுகர்கின்றனர். நூலைப்பற்றி மாண்டெயின் என்னும் பெரியார், "எனது முதிர்ந்த வயதிலும், நான் தனித்திருக்கும் வேளையிலும் நூல் எனக்கு இன்பம் அளிக்கின்றது. சோம்பேறித்தனத்தால் உண்டாகும் மனப் பாரத்தை ஒழிக்கின்றது. யான் விரும்பாத நண்பர்களின்றும் நீங்கி இருக்க அது உதவி செய்கின்றது. எனது வாழ்க்கையின் பிரயாணத்தில் எனக்கு அது இதமளிக்கும் கட்டுச்சோறாகப் பயன் படுகிறது" எனப் புகழ்ந்துள்ளார். பிரெஞ்சு நாட்டு நூலறிஞர் ஒருவர், "நூல் என்பது ஒரு மாயசூத்திரம். அதனின்றும் பல தோற்றங்கள், பல உருவங்கள், பல சிந்தனைகள் முதலிய யாவும் தோன்றி மனத்தைக் கலைத்து இதயத்தைப் பண்படுத்துகின்றன. நூல் என்பது சென்றகால உலகிற்கும் ஏனைய சிறந்த உலகங்களுக்கும் நம்மைத் தூக்கிச்செல்லும் ஒரு மாயக் கருவியாகும்" என்று கூறுகின்றார்.

தெய்வீக மளிக்கும் நூல் நிலையத்திலே நாம் புகுந்து படித்தால் நம்மிடத்திலுள்ள கீழ்மையான, நிலையற்ற, அற்பமான குணங்கள் யாவும் மறைகின்றன. நித்தியமான அற்புதமான பல சிறந்த குணங்கள் நமது மனதில் வளர ஆரம்பிக்கின்றன. ஒவ்வொரு மனிதனது இதயத்திலும் தெய்வத்திருவொளி திகழ்கின்றது. நூல்நிலையம் மனித உலகிற்கு அளிக்கும் உதவியாதெனின் வாழ்க்கையையும், சிந்தனைகளையும் சதாரண மக்களது அன்றாடவாழ்க்கையில் நடைபெறும் வேலைகள் அவர்களுடைய எண்ணங்கள் செய்கைகள் முதலிய வற்றையும் நம்மோடு சம்பந்தப்படுத்துவதாகும். நம்முடைய வாழ்க்கை நன்றாக நடைபெறுவதற்கு நம்முடைய சொந்த அறிவும், அறிஞர்களுடைய போதனைகளும் அவசியமாகும். அதனால் நாம் அறிவை வளர்ப்பதற்கு நூல் பல கற்கவேண்டும்.

ஆயிரக்கணக்கான நூல்களுள்ள ஒருநூல் நிலையத்தில் இன்னநூல்களைத்தாம் படிக்கலாம் என்று தேர்ந்தெடுப்பது கஷ்டமாகும். படிப்பவர் புத்தகங்களை தேர்ந்தெடுப்பதில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். எல்லா மனிதர்களும் எல்லா நூலையும் படித்துவிட முடியாது. ஒரு குறிப்பிட்ட நூல்களிலிருந்து தான் மனிதன் தனக்குத் தேவையான மன உணவை உட்கொள்ள முடியும். மனோநிலைக்குப் பொருத்தமான நூல்கள் அவன் மனத்தை வளர்ச்சியுறச் செய்கின்றன. "நாம் படிக்கவேண்டிய புத்தகமே நாம் படிக்கவேண்டிய புத்தகம்" என்று ஒரு பெரியார் கூறியுள்ளார். நாம் முதலில் சிறந்த நூல்களைப் பயிலவேண்டும். இல்லையானால் நாம் அவற்றைப் படிக்கச் சந்தர்ப்பம் கிடைக்காது. ஆகவே முதலில் நாம் எவையெவை நல்ல நூல்கள் என்று தீர்மானிப்பது கஷ்டமானது. அதற்கு நூல் ஆராய்ச்சியில் அனுபவம்வாய்ந்த அறிஞரது அபிப்பிராயத்தைக் கைக்கொள்ள வேண்டும்.

நூல்களைப்படிக்க விரும்புவன் சோம்பேறியாகவும், பயங்கொள்பவனாகவும், நூலைக்கண்டு அஞ்சுபவனாகவும் இருக்கக்கூடாது. நூல்நிலையத்திலிருந்து நூலாராய்ச்சி செய்யப்புகுவோன் சுறுசுறுப்பு, துணிவு இவைகளை உடையவனாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அவன் நூல்களாலாகும் இன்பத்தை அடைய முடியும்.

— R. காளிமுத்து, ஆறாம் படிவம்.

# மேலூரில் நம் தேசீய துணைப்படை மாணவர்கள்

ராஜன்: அண்ணே! எங்கே போய்விட்டு வருகிறீர்கள்?

சேகர்: நானு தம்பி? மேலூரில் நடந்த A. C. C. 'கேம்பி'ற்குப் போய் வருகிறேன்.

ராஜன்: ஏண்ணே! இந்த A. C. C. என்றால் என்ன?

சேகர்: அதுதான் தம்பி, நம்முடைய பள்ளியில் இருக்கும் தேசியத் துணைப் படைத் திட்டம்தான் அது.

ராஜன்: ஓகோ! மறந்து விட்டேன். ஆமா, எத்தனை நாள் தங்கினீர்கள்?



சேகர்: பத்துநாட்கள் தம்பி.

ராஜன்: பத்துநாட்களாக அங்கு என்ன செய்தீர்கள்?

சேகர்: பத்துநாட்களாக ஒரு நீண்டசாலை அமைத்தோம்.

ராஜன்: எங்கிருந்து எது வரையில்?

சேகர்: மேலூரில் இருந்து சுகாஞ்சான் பட்டி வரையில்.

ராஜன்: ஆமாண்ணே, உங்கள் முகாமில் என்ன செய்தீர்கள்?

சேகர்: காலையில் எழுந்திருப்போம்.

ராஜன்: இருண்ணே, காலையில் எத்தனை மணிக்கு எழுவீர்கள்?

சேகர்: காலையில் ஐந்தே முக்கால் மணிக்கு தம்பி.

ராஜன்: எழுந்து என்ன செய்ய வேண்டும்?

சேகர்: முதலில், கடவுளைத் துதிக்க வேண்டும்.

ராஜன்: பிறகு,

சேகர்: இரண்டாவதாக வெளியில் சென்று இயற்கை நியதிகளைக் கழித்து விட்டுப் பின் பல் துலக்கிக்கொண்டு வரவேண்டும்.

ராஜன்: வந்து?

சேகர்: ஒவ்வொருவரும் தம்முடைய செம்புகளை எடுத்துக்கொண்டு ஒவ்வொருவராக சென்று காப்பி வாங்கி அருந்துதல் வேண்டும்.

ராஜன்: பின் என்ன செய்ய வேண்டும்?

சேகர்: பின்பு, வேண்டிய சாமான்களை எடுத்துக்கொண்டு வரிசையாய் ஒருவர் பின் ஒருவராய்ச் செல்லவேண்டும்.

ராஜன்: சென்று எல்லோரும் கும்பலாக ரோடு போடுவீர்களாக்கும்!

சேகர்: இல்லைதம்பி, ஒவ்வொரு பள்ளியிலிருந்து வந்த மாணவர்களுக்கும் இவ்வளவு இடம் எனவும் ஒதுக்கி வைத்திருப்பார்கள். அதில் வேலை செய்ய வேண்டும்.

ராஜன்: ஆமா, எத்தனை மணிக்கு வேலை தொடங்குவீர்?

சேகர்: ஆறு மணிக்கெல்லாம் தொடங்கி விடுவோம்.

ராஜன்: சரி, எத்தனை மணி வரையில் செய்வீர்?

சேகர்: பதினொன்றரை மணி வரையில்.

ராஜன்: ஐயோ, அண்ணே!

சேகர்: என்ன தம்பி!

ராஜன்: பதினொன்றரை வரையிலா சாப்பிடாமல் இருப்பீர்கள்?

**சேகர்:** இல்லே தம்பி, எட்டு, எட்டரை மணிக்கெல்லாம் வேலே செய்யும் இடத்திற்கு சாப்பாடு கொணர்ந்து கொடுப்பார்கள்.

**ராஜன்:** ஓகோ! அப்படியா, வேலே முடிந்ததும் சும்மா யிருக்கவேண்டியதுதான்.

**சேகர்:** ஆமாம், பன்னிரண்டு மணிவரை.

**ராஜன்:** ஓகோ! சாப்பாட்டு நேரமோ!

**சேகர்:** எப்படி தெரிந்துகொண்டாய்?

**ராஜன்:** ஆமாம், இதெல்லாம் தெரியாமலா இருப்பார்கள்! சரி அப்புறம் என்ன செய்வீர்கள்?

**சேகர்:** மூன்று மணிவரை சும்மாதான் இருக்கவேண்டும். பின், மூன்று முதல் நாலு மணி வரை ட்ரில் செய்யவேண்டும்.

**ராஜன்:** ஆமாண்ணே, விளேயாட முடியாதா?

**சேகர்:** நான்கு மணி முதல் ஐந்து மணி வரை விளேயாடலாம் தம்பி.

**ராஜன்:** குளிக்கப் போக மாட்டீர்களா?

**சேகர்:** ஐந்து மணிக்குச் செல்வோம் தம்பி.

**ராஜன்:** இரவில் என்ன செய்வீர்?

**சேகர்:** எட்டு மணிக்குச் சாப்பிடுவோம். ஏதாவது சிறு கலே நிகழ்ச்சி நடைபெறும். பின்பு, படுக்கச் செல்வோம்.

**ராஜன்:** ஆமாண்ணே, இப்படி முகாம் போடுவதால் என்ன பயன்?

**சேகர்:** என்ன பலனு? இப்படிப்பட்ட முகாம் போடுவதால் மாணவர்களின் ஒற்றுமை ஓங்கி விளங்கும். ஒருவர்க்கொருவர் சகிப்புத் தன்மையும் ஏற்படும். ஏழை, பணக்காரன் என்ற பேதமை மறையும். வேலேயே இன்ன தென அறியார்க்கு ஓர் அரிய சந்தர்ப்பம். பொறுப்புணர்ச்சி போன்றவையும், உடல் வலிமையும் ஏற்படும்.

**ராஜன்:** இத்தேசீயத் துணைப் படையினுல் நமக்கு என்ன லாபம்?

**சேகர்:** இதில் சேர்வதினுல் உடலுக்கு உறுதியும், பல நல்ல பழக்கங்களும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போன்றவையும் ஏற்படும். இது ஓர் ராணுவப் பயிற்சி போன்றதும் கூட. இதனுல் நமக்கும், நம் நாட்டிற்கும் அநேக நன்மைகள் ஏற்படும்.

**ராஜன்:** ஆமாண்ணே! நம் பள்ளியில் ஏ. ஸி. ஸி. ஆபீஸர் யார்?

**சேகர்:** தெரியாதா? நம் உடற்பயிற்சி ஆசிரியர் ஸ்ரீ வி. தங்கமணி அவர்கள்தான்.

**ராஜன்:** அப்படியா! நானும் இன்றே இவ்வியக்கத்தில் ஒருவனுகப் பங்கெடுத்துக் கொள்ள அவரிடம் போய்த் தாக்கல் செய்து கொள்ளப் போகிறேன் அண்ணே.

**சேகர்:** சரி தம்பி.

**ராஜன்:** நீங்கள் ஊரில் இருந்து வந்து வெகு நேரமாக என்னேடு பேசிக்கொண் டிருந்துவிட்டீர்கள் அண்ணே.

**சேகர்:** நல்லது தம்பி, நான் போய் வருகிறேன். வணக்கம்!

**ராஜன்:** சரியண்ணே, போய் வாருங்கள். வணக்கம்!

— *ச. கு. கருப்பையா, 5-ம் படிவம், ஆ. பிரிவு.*

# என்ன – கட்டை!



அப்பா: ஏண்டா கழுதை மாதிரி ஊரைச் சுத்திண்டிருக்கே? காலாகாலத்திலே வீட்டிலே போய்ப் படியேண்டா. மூஞ்சியும் **மொகரக் கட்டையும்** பாரு.

விருந்தாளி: எனக்காக ஒண்ணும் பண்ண வேண்டாம். நான் **ஒண்டிக்கட்டை**தானே? வத்தக் குழம்பு வச்சு சாதம் வடிச்சா போதும்.

உபாத்தியாயர்: ஏண்டா கொறப்பய மாதிரி விழிக்கிறே? நாளைக்கும் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் முழிச்சா, **மணிக்கட்டை** உடைச்சுடுவேன்.

பெரியவர்: நான் அப்பவே அடிச்சிண்டேன். கேட்டாத்தானே? காலாகாலத்திலே அவனுக்கு ஒரு **கால்கட்டைக்** கட்டியிருந்தா இப்படி நடந்திருக்குமா?

அம்மா: பிள்ளையாரே! என் பையனுக்கு வேலை கிடைக்கட்டும். **கொழுக்கட்டை** நைவேத்தியம் பண்றேன்.

நாத்தனார்: அம்மா, மன்னியைப் பாரேன். **மரக்கட்டை**யாட்டமா நிக்கறு!

அனுதாபம்; இந்த வீட்டிலே ஒரு **கிழம்கட்டை** இல்லாப்போனது உங்களுக்கெல்லாம் எவ்வளவோ கஷ்டம்.

ஆறுதல்: நீ ஒரு **அதிர்ஷ்டக்கட்டை.** இல்லேன்னா உன்னைவிடக் குறைச்ச மார்க்கு வாங்கினவனுக்கெல்லாம் வேலைகிடைச்சுடுத்து. உனக்கு மட்டும் கிடைக்காமல் போயிட்டுதே.

அடையாளம்: அவதான் அம்மா, **கட்டை குட்டை**யா மூக்கும் முளியுமா இருப்பாளே அவதான்.

பரிகாசம்: பாவம், பச்சைக் கொழந்தை! வாயிலே **கட்டைவிரலைக்** கொடுத்தாக் கடிக்கக்கூட தெரியாது!

கெடுதல்: நான் ஒரு நல்ல காரியம் செய்யப் போனேன். அந்தப் படுபாவி நடுவிலே வந்து தேருக்கு **முட்டுக்கட்டை** போட்ட மாதிரி நின்று விட்டான்.

சுருதி; மெதுவாப் பேசேன். **நாலரைக் கட்டை** சுருதியிலே ஏன் கத்தறே?

அளவு: இந்தக்காலத்திலே வர்ர வேஷ்டியெல்லாம் ஒரே **அகலக்கட்டை**யான்னு இருக்கு.

வாயாடி: அவன் ரொம்ப வாயாடிடா. கப்பி ரோட்டுலே **கட்டைவண்டி** போற மாதிரி கடமுட கடமுடன்னு கத்திண்டே இருப்பான்.

பயில்வான்: என்னமோ நம்மகிட்டே ரொம்ப வாலை ஆட்டினா வாலை அறுத்து **கர்லாக்கட்டை**யா உருட்டிப்பிடுவேன் ஆமா.

சாமியார்: என் பேருங்களா? இந்தக் **கட்டை**க்கு 'ஊரு' 'பேரு'ன்னு இருக்கவா செய்யுது! ஏதோ 'சுப்பையா'ன்னு சொல்லுவாங்க.

நான்: இந்தக் **கட்டை** ஏதோ தொண தொணன்னு சொல்லிக்கிட்டே இருக்குதே என்று நீங்கள் முணுமுணுக்கிறது என் காதுக்கு கேக்குது. இதோ நிறுத்திப்புடுறேன்.

— S. ராஜாமணி, 5-ம் படிவம், அ. பிரிவு



S. S. L. C. PUPILS (1957–58) பத்தாம் வகுப்பு மாணவ, மாணவிகள்

★



வகுப்பு மாணவத் தலைவர்களும் உப தலைவர்களும்.
Class Pupil Leaders and Assistant Leaders (Boys)

EDITORS & ARTISTS OF CLASS MAGAZINES – வகுப்புப் பத்திரிகை ஆசிரியர்களும், ஓவியர்களும்.



★



Prize Winners in the Wild Life Week Competitions – வனவிலங்குப் போட்டியில் பரிசுபெற்றவர்கள்

# வாழ்வளிக்க வந்த நல்வழி

(கி. ஜனார்த்தனன், 6-ம் தருநிலை.)

மக்களின் வறுமையைப் போக்க மனிதன் தனது சக்தியைப் பயன்படுத்த வேண்டும். ஏழைகளின் இன்னல்தீர இயந்திரப் போட்டிகளை ஒழிக்க வேண்டும். இதற்கு என்ன வழி? சுலபமான வழி ஆம்! அம்பர் சர்க்காதான். சுதந்திர இந்தியாவின் கோடிகோடி மக்கள் வறுமையினின்றும் நீங்க வேண்டும். அதற்கு சுலபமான ஒரே வழி காந்தி மகான் காட்டிய கைராட்டை வழியேயாகும்.

நம் நாட்டை வளம் கொழிக்க வைக்க இருக்கும் திட்டங்களிலே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் இத்திட்டத்தை நாடெங்கும் கையாள வைக்கும் ஒரு பெரிய திட்டத்தை அகில இந்திய காந்தி கிராம கைத்தொழில் போர்டார் வகுத்துள்ளார்கள். இதன் உதவியால் ஐம்பது லட்சம் ஏழை மக்களுக்கு வேலை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அம்பர் சர்க்காவில் நூற்பதற்கு மூன்று மாத காலம் பயிற்சி தேவை. இப்பயிற்சியைக் கொண்டு நாள் ஒன்றுக்கு 12 அணா முதல் 1½ ரூபாய் வரை ஒரு ஆள் சம்பாதிக்கலாம்.

காந்தி மகாத்மா 'ராட்டை சுழற்றியே நாட்டைப் பெறுவோம்' என்று கூறினார். அவ்வாறே நம் நாட்டுக்கு சுதந்திரம் வாங்கித் தந்தார். அந்த ராட்டையின் முன்னேற்றமே "அம்பர் சர்க்கா". இந்த அதியமான அம்பர் சர்க்காவைக் கண்டு பிடித்தவர் திருநெல்வேலியைச் சார்ந்த ஏகாம்பரம் என்ற ஒரு தமிழ் இளைஞராவர். அவரது பெயரின் ஒரு பகுதியை "அம்பர்" என்ற பெயரோடு சர்க்காவுக்குச் சூட்டி அழைக்கிறார்கள்.



இச்சர்க்காவின் அமைப்பு: இதன் நீளம் 28", அகலம் 16", உயரம் 21" கனம் 26 பவு. மரத்தாலே அமைக்கப்பட்ட இச் சர்க்காவில் அதிக சிக்கல்கள் ஏதுமில்லையென்றே கூறலாம்.

சாதாரண கைராட்டைக்கும், அம்பர் சர்க்காவுக்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. நமக்கு இஷ்டமான கனத்தில் எந்த நம்பர் நூல் வேண்டுமானாலும் நூற்றுக்கொள்ளலாம். அம்பர் சர்க்காவில் நூற்கப்படும் நூல் சன்னமாக ஒரே மாதிரி இருக்கும். கைத்தறி நெசவிற்கு அளிக்கப்படும் மில் நூல்களைக் காட்டிலும் இந்த நூலின் தரம் உயர்ந்தது.

தற்போது இச்சர்க்காவில் பலபல மாடல்கள் வெளி வருகின்றன. அம்பர் சர்க்காவின் விலை மதிப்பு 110 ரூ. முதல் 130 ரூபாய் வரையாகும். இந்த சர்க்காவை உபயோகிப்பதன் மூலம் கிராமங்களில் தச்சர்கள், நெசவாளர்கள் மற்றும் உதவியாளர்கள் நூற்போர் ஆகிய ஐம்பது லட்சம் மக்களுக்கு பிழைப்பு ஏற்படுகிறது. இவ்வளவு சுலபமான முறையை மக்கள் யாவரும் ஆதரிப்பார்களா!

# இன்ப நினைவுகள்

(ஓரங்க நாடகம்)

இடம் ;- பாண்டியனூர் திடல்.

காலம் ;- மாலை.

பாத்திரங்கள் ;- மகிழ்மாறன், மணிமாறன், திருமாறன், நெடுமாறன்.

மகிழ்மாறன் ;- என்ன நண்பர்களே! கல்விப் பயணச் சுற்றுலா'' சென்று திரும்பினீர்கள். எங்கெங்கே சென்றீர்கள்? ஏதேது கண்டீர்கள்? நான் தான் வரமுடியாமல் போய் விட்டேன். நீங்களாவது கண்டவற்றை அப்படியே நேரில் நானே பார்த்த மாதிரி மகிழ்ச்சி கொள்ளும் விதத்தில் சொல்லுங்கள்.

நண்பர்கள் ;- மகிழ்! கேளப்பா! நாங்கள் பல ஊர்களும் சென்றோம். அணைக்கட்டுகள், ஆலைகள், சமுதாய நலத்திட்டப் பகுதிகள், இன்னும் பள்ளிப் படிப்புக்கு வேண்டிய எல்லாவற்றையும் பார்த்தோம். நமது ஆசிரியர்களும் எல்லாவற்றையும் நல்ல விளக்கமாக எங்களுக்கெல்லாம் எடுத்துரைத்தார்கள். நாங்களும் மனமாற அனுபவித்தோம்.

மகிழ்மாறன் ;- வேறு ஏதாகிலும் செய்திகளுண்டா? தயவுசெய்து சொல்லுங்கள். எனக்கும் கேட்க விருப்பமாக இருக்கிறது.

நண்பர்கள் :- ஆமாம் மகிழ். நாங்கள் சுற்றுப்பயணம் செய்துவிடடுத் திரும்பி வந்த போது நமது ஊருக்குச் சமீபம் உள்ள வத்தலக்குண்டு உயர்நிலைப் பள்ளியில் புதிதாக மாணவர்களின் பிற்கால நன்மைக்காகப் "பொறியியல்'' பயிற்சித்துறையும் "செக்ரேடேரியல்'' துறைப்பகுதியும் போதிக்க ஆரம்பித்திருக்கின்றார்களாம். அதற்கென்று ஒரு கட்டிடம் கட்டிக்கொள்வதற் கென்றும் உபகரணங்கள் வாங்கிக் கொள்வதற் கென்றும் ஒரு பெருந் தொகையை மதுரை மாவட்டக்கழகம் ஒதுக்கி உதவியிருக்கின்றதாம். நமது சிற்றூர் வட்டாரத்திலேயே அதுதான் முதலாவதாகுமாம்!



மகிழ்மாறன் :- தோழர்களே! மகிழ்ச்சி, மகிழ்ச்சி. அப்படியா! அப்படியென்றால்அங்கு பயிலும் மாணவர்கள் கல்லூரி சென்று படிக்கும்போது நல்ல முறையில்தேர்ச்சிபெறுவதற்கு இது மிகவும் உறுதுணையாக இருக்குமல்லவா? சரி, இதை நான் என் தந்தைக்கு உடனடியாகத் தெரிவிக்கவேண்டும். ஏன் என்றால் இந்தமாதிரி செய்திகளை அவர் விரும்பி பிறர்மூலம் தெரிந்து கொள்ள ஆசைப்படுவார். அப்போ நாம் மீண்டும் இதே இடத்தில் கூடுவோம். கட்டாயம் வந்து சேருங்கள். வணக்கம்!

நண்பர்கள் :- சரி மகிழ்! வணக்கம்! வருகிறோம்.

(நண்பர்கள் மூவரும் பேசிக்கொண்டே செல்கின்றனர்)

"பாரு! மகிழ் இரவெல்லாம் தூங்காமல் இதே நினைவாக கனவு கூடக்காண்பான். இப்படியாகக்கண்ட கனவுகளையே நாளை நம்மிடம் வந்து உற்சாகமாகக் கூறுவான்.''

(எல்லோரும் பிரிந்து செல்கின்றனர்)

(மறுநாள் காலை, பாண்டியனூர் திடலில், நண்பர்கள் நால்வரும் சந்திக்கின்றனர்.)

நண்பர்கள் :- வா! மகிழ்மாறு! என்ன சேதி? தந்தையிடம் சொன்னாயா? நீயுங்கூட நேற்றையிலும் இன்று உற்சாகமாகக் காணப்படுகிறாய். தந்தை என்ன பதில் சொன்னார்? விபரமாகச் சொல்லு. உன்னிடம் உள்ள மகிழ்ச்சி தரும் செய்தியை எங்களிடமும் தான் கொஞ்சம் சொல்லேன்!

மகிழ்மாறன் ;- "தோழர்களே! என்ன சொல்லுவேன். எனக்கு என்னதான் சொல்வது என்று தெரியவில்லை. பூராவையும் சொல்ல முடியுமா! பறந்து விடுவேனோ என்று கூடத் தோன்றுகிறது. ஆஹா! ஆஹா!! எல்லாம் இன்ப நினைவுகள்! ஆமாம் நண்பர்களே! எல்லாமே இன்ப நினைவுகள் தான்!!

(கைதட்டி ஆடுகிறான்)

**நண்பர்கள் :-** அடே மகிழ்! என்னப்பா. நாங்கள் இருப்பதுகூட ஞாபகமில்லாமல் ஆடு கின்றாயே. என்னப்பா இன்ப நினைவுகள்? தயவு செய்து சொல்லப்பா.

**மகிழ் :-** என்னை எல்லோருமாக உட்கார வைபுங்கள். இல்லாவிடில் மறுபடியும் நான் எழுந்து உற்சாகத்தில் குதிக்க ஆரம்பித்து விடுவேன்.

( எல்லோரும் உட்காருகின்றனர். )

**மகிழ் :-** தோழர்களே! இங்கிருந்து வீடு சென்றேன். என் தந்தையைக் கண்டேன். நீங்கள் சொன்னவற்றை யெல்லாம் அவரிடம் கூறினேன். அவர் என்ன வென்றால் எனக்கு மேல் ஆனந்தமாகி கையைத்தட்டி உரக்கக் கத்தினார். பின் "அடே மகிழ்! ஒரு குவளை குளிர்ந்த நீர் கொடு. `நீ சொன்னவற்றைக் கேட்டுஎன்மனம், ஏன் இந்த உடம்பே சூடேறி விட்டது'' என்று கூறிப் பின் தண்ணீர் குடித்து விட்டுப் பின்வருமாறு சொன்னார்:- அடே மகிழ் மாறு! இனிமேல் வருங்காலம் வளமானதாக வும், நாடே குதூகலமானதாகவும் தாண்டா இருக்கும். ஏனெனில் வருங்கால சந்ததி எல் லாம் பொறியியல் நுணுக்க நிபுணர்களாகவும், தொழில் நுணுக்க நிபுணர்களாகவுமே ஆக்கப் படுவார்கள்'' என்று பலவும் சொன்னார். நான் அதே நினைவாகச் சென்று தூங்கினேன். கனவு கூடக் கண்டேன்.

**நண்பர்கள் :-** நாங்கள் நினைத்தமாதிரி நீ கனவு கண்டாயா என்று பார்ப்போம். முதலில் அந்தக் கனவை எங்களிடம் தயவு செய்து கூறுகின்றாயா ?

**மகிழ் :-** சொல்லுகிறேன் கேளுங்கள். நம் பள்ளியிலும் பொறியியல்துறை, தொழில் நுணுக்கத்துறை பிரிவுகள் ஏற்படுத்தி, நாம் எல்லாம் பயின்று கல்லூரி சென்று, மேற்படிப் புப்படித்துப்பட்டம் பெற்று, கல்லூரியை விட்டு வெளியேவந்து, சமுதாய நலத்திட்டம்போன்ற திட்டங்களில் ஊதியம் பெறாத ஊழியனாகிப் பணியாற்றி, நமது மருத (மதுரா) நதியில் கோம்பை அடிவாரத்தில் ஒரு தேக்கம் தேக்கி நீரைப்பெருக்கி, அணைக்கட்டு மூலம் புன்செய் மேட்டு நிலங்களையெல்லாம் தண்ணீர்பாய்ச்சிக் காடுபோல் இருந்திருந்த நிலங்களை தோட்டங் களாக்கி, விவசாயத்தைப் பெருக்கி, உணவுப் பொருள் பற்றுக்குறை போக்கி, தொழில் நுணுக்க நிபுணர்கள் மூலம் பொதுநிதி திரட்டி, ஆலைகள் நிறுவி, தேக்கத்தின் மூலம் கிடைத்த நீரில் விவசாயம் செய்து, பருத்தியை அதிக அளவில் உற்பத்தியாக்கி, ஆடைப் பஞ்சத்தைப் போக்கி, இவற்றிற்கெல்லாம் போக மிகுந்த தண்ணீரைக் கொண்டு விவசாயத்திற்காகாத தரிசு நிலங்களைக் காடுகளாக்கி, கட்டிடத்திற் கும், மற்ற பல வேலைகளுக்கும் உதவும் தேக்கு போன்ற மரங்களை உறபத்தி செய்து, வீடுகள் கட்டி உதவி, வீட்டுப் பஞ்சத்தையும் போக்கி, மக்கள் எல்லாம் முகமலர்ச்சியுடன் இந்த "இன்ப நினைவு" நாளை ஒரு திருநாளாகக் கொண்டாடுவது போலவும், நாம் அதில் ஊர் வலம் வருவது போலவும், அதிலே மக்கள் எல்லாரும் கூடி நம்மைக் கௌரப்படுத்தியது போலவும், இதற்காக மக்கள் எல்லாம் தூங் காமலிருந்து வாசல் மணபெருக்கி, மாக்கோல மிட்டு, நீராடி, புது ஆடை உடுத்தி பொலி வுடன்நின்று ஊர்வலத்தினரை ஆரத்தி எடுத்து, இனிமேல் இந்த வளம் இடையூறு ஒன்றும் ஏற்படாதவாறு இருக்கவேண்டும் என்று வாயார வாழ்த்தி ஆனந்தக்கண்ணீர் பொழிந் ததுபோலவும், நமது இளம் பிள்ளைகள் தெரு வெல்லாம தோரணங்கள் கட்டினதையும், முகரம் வெற்றி முழக்கமிட்டதையும், அன்று மாலை பொதுமக்கள் மத்தியில் இதே திடலில் அன்று போலவே என்றும் சாதியற்ற சமுதாயத் தினராக ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற குறிக்கோளுடனும் ஏற்றத்தாழ்வற்ற பிரிவினராக வாழ்ந்து மற்றைய நாட்டுக்குமுன் மாதிரியாக இருந்து வாழ்வது என்று சூலுரைத் ததையும், தெரு வெல்லாம் தமிழ் முழக்கம், ஆட்சியே தமிழ் மொழியில் நடைபெற்று மக்கள் மகிழ்ச்சியிலேயே வாழ்வதையும், கண்டேனப்பா கண்டேன். இன்னும் கனவு முடிவதற்குள் விடிந்துவிட்டது. என் செய்வேன் !

**நண்பர்கள் :-** அப்பப்பா! நாங்கள் நினைத்த மாதிரியே நீ கனவு கண்டுள்ளாய். உன் இன்ப நினைவு செயலாகும்படி எல்லோரும் பாடு படுவோம். வணக்கம் !

— **N. விஜயசேகரன்**, 5-ம் படிவம் வி. பிரிவு.

# பெண் கல்வி

பெண் கல்வி என்பது தாய்மையின் கல்வி ஆகும். தாய்மைக் குணங்கள் அனைத்தும் இயற்கையில் அமைந்தவர்கள் பெண்களே. கல்வி கற்று, கற்றவைகளை நடைமுறையில் செயற்படுத்தும் போது கையாளும் அன்பு, தயை, தாடசண்யம், பொறுமை இவைகளோடு குடும்பம் நடாத்துதல், பிள்ளை வளர்த்தல், சிக்கனத்தோடு வாழுதல் இன்னும் பிற அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளில் பயன் படுத்தப்படும் முறைகள் அத்தனையுமே பெண் களிடமிருந்து கற்றவையே. ஆகவே, பெண்கள் கல்வி கற்று, அதன் யபனை வெளியில் சொல்லும்போது பெருமையாகப் "பெண் கல்வி" கற்றதனால் உலகு நன்கு வாழ்கிறது என்பதி னும் பெண்களிடம் இருந்து கற்றதையே கல்வியாகப் போதிக்கப்படுவதுதான் கல்வியாகும். ஆகவே, கல்வி என்பது பிறரால் போதிக்கப் படுவதை ஏற்றுக்கொள்வது மட்டுமல்ல. போதனையோடு அனுபவத்தை ஒன்றுபடுத்தி செயல் படுவதில் முன் மாதிரியாக விளங்கும் ஒருவரையே கற்றவர் என்று கருதத் தகும். அந்த வரிசையில் தாய்மார்களே தங்களுடைய அனுபவத்தோடு கல்வி கற்ற அனுபவத்தையும் கலந்து நாட்டுக்கு நல்லது செய்வோம் என்ற உறுதியோடு இன்றைய சட்ட மன்றங்களிலும், வழக்குத் துறைகளிலும், ஆசிரியத் தொழிலி லும், மருத்துவத் தொழிலிலும் ஈடுபட்டு பண்டையத் தமிழ் இலக்கியப் பண்பாட்டின்படி "தலை மக்கள்" நெறி என்ற வழக்கை இன்றைய நம் போன்ற இளம் சந்ததியார் களுக்கு காட்சிக் கடலாகத் திகழுகின்றனர். இந்த ஒரு பெருமையே வரலாற்று நிகழ்ச்சி களில் பெண் கல்வி கற்றதால் ஆய பயன் கண்டோம் என்று பொன்னேடுகளும், நன்னு டைய சான்றோர்களும் சரித்திரமாக்கி விடுவர். இந்த சான்றுகள் நம்மின் பின் சந்ததியார்க்கு வீர வரலாறாக, வீர காவியமாகப் பயன்பெறும். இதே பயனால் அன்னவரும் பயன் பெறுவர். ஆகவே, ஆண்களைவிடப் பெண்கள் கல்வி கற்பதில் நல்ல பலன் கிடைக்கும் என்று தெரிய வருகிறது. கல்வி கற்பதென் பது, கல்வி கற்றதனால் நல்ல உடை உடுத்திக்கொள்வது, அதிகம் செலவு செய்வது, வேண்டாத பொருள்களை விரும்பிவாங்குவது, தனக்குச் சமமான இன்னொரு பெண் வாங்குவதை, அனுபவிப் பதை தாம் மேற்கொள்வது, தாம் கற்ற கல்விக்குமேல் படித்த ஆணையே மணப்பது, அல்லது பணவசதி உடைய வரையே மணப்பது என்பன போன்ற தாய்மைக்குப் புறம்பான எண்ணங்கள் மனதில் எழுவது தவறாகும். கற்றதனால் எளிய வாழ்க்கை, சுத்தமாக, சிக்கனமாக வாழ்தல், கணவனின் பழுவில் தானும் பங்கேற்றுக் கொள்ளுதல், ஒரு பெரிய தெருவானால் அந்தத் தெருவின் ஒரு பகுதி நன்மைக்கு, பொதுப் பணிக்குத் தன்னை அர்ப்பணித்தல் இத்தனையும் ஒரு நாளில் இன்னின்னவற்றிற்கு இவ்வளவு நேரம் என்று கணித்து செயல்படவேண்டும். ஆகவே, பெண் கல்வி கற்று, குடும்பம் நடாத்தப்



புகுந்தால் கற்ற பெண்ணின் முதற் கடமை (Budgeting) வாழ்க்கை முறையைக் கணித்துக் கொள்வதாகும். உதாரணமாக, வருவாய் ஒரு குறிப்பிட்ட தொகையானால் வருவாயைக் குடும்பச் செலவு இவ்வளவு, படிப்பு வசதி, உடுப்புப் போன்றவற்றிற்குத் தொகை ஒதுக்கி பிற்காலத்திற்கு சேமிப்பு இவ்வளவு, வைத்தியத்திற்கென்று இவ்வளவு என்பதான வகைகள் பிரிக்கப்பட வேண்டும். அப்போது தான் வருவாய்க்குகந்த செலவு மேற்கொள்ளப் படும். பண்டைக்கால இலக்கியங்கள் அத்தனையுமே பெண்களையே இலக்கணமாக வைத்துக் காவியங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. இவை அனைத்தும் இலக்கிய காலப் பெண்கள் அவ்வளவு பேரும் கல்வி கற்று, கற்ற படி ஒழுகி இருப்பதினால் மட்டுமே போற்றப் பட்டிருக்கின்றார்கள். ஐவகை நிலத்தைப் பற்றிய காவியத்தில்கூட

*"இன்னபல் வளர்த்ததாகி யியற்கையி னியல் பியாவும்*
*மன்னிய குறிஞ்சி முல்லை வளமிலி மருத நெய்தல்*
*அந்நெறியமைந்த செல்வத் தைந்நிலக் கிழமை தாங்கித்*
*தன்னிகரிலாத மேன்மைத் தமிழகம் பொலிந்ததம்மா"*

என்ற செய்யுளிலிருந்து காணக் கிடக்கின்றது. பெண்கள் மூலமாகவே வீர உணர்வும் கல்வியாகப் போதிக்கப்பட்டிருக்கிறது. உதாரணம் பெற்ற மகனுக்கு இன்னலென்று கேட்ட தாய் இன்னல் விளைவிப்பது ஒரு பெரிய கூட்டம் என்று தெரிந்திருந்தும் வீர உணர்வோடு கூட்டத்தினுட் புகுந்து மகனைக் காப்பாற்றினாளாம். அதையே

*"ஆவி சுமந்து பெற்ற அன்பனுயிர் காப்பதற்கு*
*கோவித்த தாயின் எதிர் கொல் படைதான் என்*
*செய்யும்"*

என்ற செய்யுள் விளக்குகிறது. நாமும்கூட நிகழ்ச்சிகளில் பார்ப்பதுமான கோழிக் குஞ்சை வானத்தில் வட்டமிடும் பருந்து தூக்கிப் போக வந்தால், பருந்து நினைத்தால் கோழியையும் கூட சேர்த்துத் தூக்கிச் செல்லும் வலிமை உடையதாக இருந்தும் குஞ்சைக் காப்பதற்கு பருந்தையே எதிர்த்து விரட்டும் உணர்வையும் செய்யுளாக

*"கோழியும் குஞ்சுதனைக் கொல்லவரும் வான் பருந்தை*
*சூழ்ந்து எதிர்க்க அஞ்சாத தொல் புவியில்*
*ஆடவரைப் பெற்றெடுத்த தாய்க்குலத்தை, பெண்*
*குலத்தைத்"*

தாழ்வாக எண்ணுதல் மாறுதல் பெறவேண்டும். ஆகவே இன்று உலகம் இயங்குவதே பெண்கள் கல்வியின் மூலமே என்பதாகும். முன்பெல்லாம் அடுப்பூதும் பெண்களுக்குக் கல்வி எதற்கென்ற நிலை மாறி, பெண்களும் கட்டாயம் கல்வி கற்க வேண்டும் என்ற நிலை வந்தது பெருமைப்பட வேண்டியதொன்றாகும்.

— *க. பிறைமதி, 3-ம் தகுநிலை, அ. பிரிவு.*





Designs by our pupils — நமது மாணவர் தீட்டிய சித்திரங்கள்.

# வெள்ளியருவி

★



பழம் பல கொழிக்கும் பழ மரங்களையும், கண்ணுக்கினிய காட்சிகளையும் கொண்டது கொடைக்கானல் மலைச்சாரல். இம்மலையைக் கண்டுபிடிப்பதற்கு முன்னதாக நடந்த கதை இது. இம்மலையை முதன்முதலில் பார்த்தார் ஆராய்ச்சியாளர்கள். அவர்கள் மனதிலே ஓர் எண்ணம். அதாவது, 'இம் மலை இவ்வளவு உயரமாக இருக்கிறதே! இதன் உச்சியை அடையவேண்டும்; இம்மலையை நன்கு ஆராய வேண்டும்' என்பதேயாகும். மலை என்ருல் வன விலங்குகள் நிறைந்திருக்கும் என்பதை அறிவார்கள். ஆகையால் தக்க சாதனங்களுடன் புறப்பட்டனர் மலையை ஆராய.

ஒவ்வொரு இடமாகத் தங்கித் தங்கிச் சென்ருர்கள். ஆனல், அவர்கள் அடைந்த கதி மரணம். ஆம், கொடிய மிருகங்களுக்குப் பலியானுர்கள். இந்தக் கோஷ்டியைத் தொடர்ந்து பல கோஷ்டிகள் வந்தன. இவர்களில் பலர் மாண்டனா. இருந்தாலும் சலிக்கவில்லை மற்றவர்கள். இப்படியாகக் கொஞ்சம் கொஞ்சமாய் முன்னேறலானுர்கள்; பல வன மிருகங்களைப் படம் எடுத்தனர். காட்டெருமைக் கூட்டங்கள். அவைகள்தான் எங்கு பார்த்தாலும் அதிகமாகக் காணப்படுபவை. அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது முன்னேறினர் உச்சியைப் பிடிக்க ஒரு கோஷ்டியினர். அக்கோஷ்டியிலும் பலர் மாண்டனர். இருவரே மீண்டனர். இவர்கள் அதற்காகச் சலிக்கவில்லை. ஆனல் இவர்கள் ஆராய்ச்சி உள்ளம் சற்றுக் கலை உள்ளமாக மாறியிருந்தது இம்மலைக் காட்சியினல்.

இயற்கைக் காட்சிகளை ரசித்து அவைகளைப் படம் எடுத்துக்கொண்டும், தங்களுக்கு வரும் ஆபத்தை தடுத்தும், எதிர்த்தும் இப்படியுமாக முன்னேறினுர்கள். மலையின் முக்கால் வாசி தூரம் வந்திருப்பார்கள். அங்கே பிரமித்து நின்றுவிட்டார்கள். அங்கே அவர்கள் கண்ட காட்சி வேறு ஒன்றுமில்லை. ஒரு பெரும் பாறைதான் கோட்டைச்சுவர்போல். ஆனல், வழவழப்பாக அல்ல—கரடு முரடாக — நின்றுகொண்டிருந்தது. ஒருவன் சொன்னுன், "வா வேறு பக்கமாகப் போவோம்". மற்றவன், "இந்தப் பாறை வழியாக மேலே ஏறி என்ன இருக்கிறது என்று ஆராய்வோம்". "சரி". மேலே ஏறினுர்கள் கரடு முரடாக அமைந்திருந்த கற்களைப் பிடித்துக்கொண்டு. "உம்" இன்னும் கொஞ்சம் தான், ஏறிவிட்டார்கள். அங்கே அவர்கள் கண்ட காட்சி மனத்தை அள்ளும்படியாக தெள்ளிய நீரோடை ஒன்று சென்றுகொண்டிருந்தது. அதில் களைப்புத் தீர நீர் பருகினுர்கள். அது நீரல்ல! தண்ணீர்! குளிர்ந்த நீர்! அவர்கள் கலையுள்ளம் கற்பனையில் இறங்கியது. ஏன்? இந்த நதியை இப்படித் திருப்பி இந்தப் பெரிய பாறை வழியாக விட்டால் என்ன? ஒரு பெரும் நீர் வீழ்ச்சியாகக்-கண்கொள்ளாக் காட்சியாக-இருக்குமல்லவா? ஒருவருக்கொருவர் தங்கள் யோசனையைத் தெரிவித்துக் கொண்டனர்.

"ஆமாம்! அப்புறம் நாம் எப்படிக் கீழே இறங்குவது".

"தண்ணீரைத் திருப்பிவிட்டு அணைகட்டுவோம். நாம் கீழே இறங்கியதும் தண்ணீர் தானுகவே பொத்துக்கொண்டு வந்துவிடும்".

"சரி". அப்படியே செய்தார்கள். ஆனல் அவர்கள் கீழே இறங்கும்பொழுது நடுவழியே உடைந்தது அவர்கள் அணை. தண்ணீர் கொட்டிற்று நீர்வீழ்ச்சியாக. அவர்களுக்கோ ஒரு பக்கம் சந்தோஷம், ஒரு பக்கம் கவலை. அது ஒரு காட்டாறு போலும் திடீரென்று வெள்ளம் பெருகியது. அவர்கள் கவலைப்பட்டபடியே அவர்களையும் சேர்த்து அடித்துக் கொண்டு சென்று விட்டது அந்தக் கோர

# இஞ்சி விவசாயம்

## விதைக்கு இஞ்சி எடுத்து வைக்கும் விபரம்



செந்தாழை நோவு குருத்துப் புழு உள்ள இஞ்சிகளை விதைக்கு எடுத்து வைத்தல் கூடாது. பழுதில்லாத இஞ்சியாகப் பார்த்து காட்டில் இருக்கும் இஞ்சியைத் தை மாதம் வெட்டி வீடு கொண்டுவந்து சேர்க்கவேண்டும். வீடு கொண்டு வந்த இஞ்சியைத் தீ, புகைப் படாமலும், மழையில் நனையாமலும், குடிசைகளில் வாழைப்பட்டையில் பண்டையம் கட்டியும் அதில் பந்தோபஸ்தாக வைக்க நினைத்தால் இஞ்சி பூராவும் தட்டிவிட்டு இஞ்சியின் மேலே காய்ந்த வாழைச் சருகுகளைப் போட்டு மூட வேண்டும். பின்பு மாசி மாதத்தில் இருந்து இஞ்சி போடுவதற்கான நிலங்களைப் பார்த்து வைக்கவேண்டும். இஞ்சி போடுவதற்கு மரம், செடி, கொடிகள் அடர்ந்த காடாக இருப்பது நல்லதாகும். காடுகளிலுள்ள மரம், செடி, கொடிகளைக் காட்டில் இடை வெளி தெரியாமல் பரப்பவேண்டும். பின்பு இவைகள் காய்ந்தவுடன் தீ வைப்பார்கள். மாலை ஐந்து மணிக்குத்தான் தீ வைப்பார்கள். தீ வைக்கும் போது காட்டைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் பவுண்டு கட்டுவார்கள். அப்படிப் பவுண்டு கட்டத் தவறினல் அடுத்த காடுகளில் தீ பிடித்து விடும். அப்பொழுது அவர்களுடைய விவசாயத்திற்குப் பழுது ஏற்படும். தீ வைக்கும் சமயம் காடுகளின் நான்கு பக்கங்களிலும் ஆட்கள் கையில் பசுமையான இலை தழைகளை வைத்துக்கொண்டு நிற்கவேண்டும். தீ அடுத்த காட்டில் பிடித்துக் கொள்ளுவதாக வைத்துக் கொண்டால் எப்பக்கம் தீ பிடிக்கிறதோ அப் பக்கம் இருப்பவர் தன் கையிலிருக்கும் இலை தழைகளைத் தீமேல் அடித்தால் தீ அணைந்து

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளம். அந்த பாறையின் உச்சியிலிருந்து நீர்வீழ்வதை - அந்த நீர்வீழ்ச்சியை - அந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் காணுமலே ஆனல், பிறர் காணும்படியாகச் செய்துவிட்டு மாண்டனர் அந்தக் கலையுள்ளம்கொண்ட ஆராய்ச்சியாளர்கள். எத்தனை எத்தனையோ பேர் உயிர்விட்டனர் இந்த மலையில். ஆனல், அவர்கள் மரணமெல்லாம் எனக்குப் பெரிதாகத் தெரியவில்லை. ஏனே இவர்கள் மரணம் மட்டும் என் மனத்தை உருக்குகிறது. ஏன்? இவர்கள் தங்களை அறிமுகம் செய்துகொள்ளாமலே இறந்துவிட்டனர். யாருக்கும் தெரியாது அவர்கள் மரணமோ, அந்த அருவி செயற்கை அருவி என்பதோ. அந்தோ! அக்கலைவாணர்கள் மாண்டனர். ஆனல், அக்கலை மாண்டுவிடவில்லை. இன்றும் கண்கூடாக இருக்கிறது அந்த அருவி. அதன்பின் சென்றவர்கள் எல்லோரும் அந்த அருவியைக் கண்டார்கள். மனம் மகிழ்ந்தார்கள். அதற்குப் பெயரிட்டு அழைத்தார்கள். இப்பொழுதும் கொடைக் கானலுக்குப் போகும்போது காண்கிறேமே ஒரு அருவியை, அந்த அருவிதான் வெள்ளி அருவி.

(இது ஒரு கற்பனைதான்)

— R. இராஜேந்திரன், 6-ம் தகுதிலை

விடும். மரம், செடி, கொடிகள் வெந்த சாம்பல் தான் இஞ்சி விவசாயத்திற்கு ஏற்றதாகும். அதனுல் மரம், செடி, கொடிகள் அடர்ந்த காடுகள் நல்லதாகும். இஞ்சி போடுவதற்கு மரம், செடி, கொடிகள் அடர்ந்த காடுகள் இல்லாவிட்டால் உழவு காடுகளிலும் இஞ்சி விவசாயம் பண்ணலாம். உழவு காடுகளில் ஊரடிக் குப்பைகளைப் போட்டோ, வாழைத் தோட்டங்களில் உள்ள வாழைச் சருகுகளைக் கட்டிக்கொண்டு வந்து கட்டு கட்டாகக் காடு பூராவும் பரப்பி தீ வைக்கலாம். எப்படியும் இஞ்சி விவசாயத்திற்குத் தீ வைக்கத்தான் வேண்டும். இஞ்சி போடுவதற்குப் பருவமான மாதம் சித்திரை மாதம். வைகாசி மாதங்களிலும் இஞ்சி போடலாம். சித்திரை மாதத்தில் மூலநட்சத்திரம் பார்த்துப் போடும் இஞ்சிதான் நல்ல பலன் தரும். காட்டில் தீ வைத்து முடிந்தவுடன் மறுநாள் குச்சி கோல்களையும், கற்களையும், அகற்றி விடவேண்டும். காடுகளில் கிடக்கும் கற்களையும் பொறுக்கிக் கரையோரங்களில் போடவேண்டும். இஞ்சிக்குப் பருவ மழை பெய்தவுடன் தீ வைத்த காட்டில் ஒரு அடி ஆழம் பதிய மண்வெட்டியால் வெட்ட வேண்டும். இடைவெளி தெரியாமலும் வெட்ட வேண்டும். தீவைத்த பிறகு மீதி இருக்கும் கட்டை நிலத்தை வெட்டும்போதே கட்டாயம் வெட்ட வேண்டும். நிலம் வெட்டிய பிறகுக் கட்டியாகக் கிடக்கும் கட்டிகளை குச்சியால் தட்டி உடைத்துப் போடவேண்டும். அப்படி உடைககும் போது வேர், குச்சி, கற்களையும் பொறுக்கிக் கரையோரங்களில் சேர்த்துக் கரையை உயர்த்த வேண்டும். நிலம் வெட்டிய பின்பு பருவ மழை பெய்தவுடன் கட்டைகள் விடுபட்டிருந்தால் அவைகள் தளிர்த்து விடும். இவைகளைப் போக்கு என்று சொல்லுவார்கள். பிறகு அதை மண்வெட்டியால் வெட்டி எறிய வேண்டும். பின் விதைக்கான இஞ்சியை முளைக் குறுத்து ஒடிந்து விடாதபடிக் கணுக்கணுவாக ஒடிக்கவேண்டும். மிகவும் பொடிப் பொடியாக ஒடிக்கக் கூடாது. இஞ்சி போடும்போது நிலத்தைக் கோதுவதற்கு ஒரு ஆளும் இஞ்சி போடுவதற்கு ஒரு ஆளும்வேண்டும். இஞ்சி போட்ட மறுநாள் நல்ல மழை பெய்யவேண்டும். இஞ்சி போட்ட 25ம் நாள் காடு பூராவும் இஞ்சி முளை கிளம்பிவிடும். மாதம் இருமுறை மழை பெய்ய வேண்டும். சிறு கொத்துக்களால் மாதம் ஒரு முறை களை யெடுக்க வேண்டும். செந்தாழை நோவு, குருத்துப்புழு, விழுந்திருந்தால் மழை பெய்யும் சமயங்களில் கமெக்ஷன் மருந்து அடிக்கவேண்டும். இஞ்சி தூர் ஒன்றுக்கு 6கிலோ முதல் 25கிலோ வரை இருந்தால் மணு 1-க்கு ஏழுமணு ஆகும். 6கிலோ முதல் 15கிலோ வரை இருந்தால் மணு 1-க்கு மூன்று மணுமுதல் நான்கு மணு வரை ஆகும். இஞ்சியைத் தை மாதம் வெட்டி விடவேண்டும். நாம் இஞ்சி விதைத் தைமாதம் எடுக்கும் சமயம் நல்ல விலைக்குப் போகவில்லையானுல் இஞ்சியை எடுக்காமல் அப்படியே விட்டு விடலாம். பிறகு மழை பெய்யப்பெய்ய திரும்பவும் இஞ்சி தளிர்க்க ஆரம்பிக்கும். அப்பொழுது நல்ல பலன் கிடைக்கும்.

இன்றைய உலகில் வாழும் மக்களுக்கு எங்குபார்த்தாலும், வாய்வுக்குத்து,வயிற்றுவலி, மண்டைக்கனம், வயிற்று எரிச்சல், வயிற்றுப் பொருமல் என்று சொல்லுகிருர்கள். இவைகளுக்கெல்லாம் மருந்து இஞ்சி அல்லது சுக்கு என்று சொல்லுகிருர்கள். அண்மையில் வந்த இன்புளுயன்சா என்ற காய்ச்சலுக்கு இஞ்சி அல்லது சுக்கு இவைகளுடன் இன்னும் பல வகையான சாமான்களைச் சேர்த்துக் காய்ச்சி கசாயம் போட்டுச் சாப்பிட்டார்கள். இந்தக் காய்ச்சல் சமயம் சுக்குக் கசாயம் இல்லாத வீடே இல்லை என்று கூடச் சொல்லலாம். இதற்கு இஞ்சி மிகவும் பயன் பட்டதாகவே சொல்லலாம். இஞ்சி மலை விவசாயத்தில் மிகவும் முக்கியமான பொருள் என்றே சொல்லலாம்.

— N. *ராஜபுஷ்பம், 6-ம் தகுதிலை.*

# மாலை வருணனை



“மாலைக்காற்று மருந்து என்பது பழமொழி. உண்மையில் உடலுக்கு மட்டுமல்லாமல் மனதுக்கும் மருந்தாக உள்ளது மாலை. அமலன் படைப்பின் அழகெல்லாம்கொண்டு பூரணப் பொலிவுடன் பிரகாசிப்பது மாலை நேரம். வாழ்க்கையில் இன்பத்துடன் துன்பமிருந்தால் தான் அதில் சுகமுண்டு. உற்சாகத்துடன் கழிக்கப்படும் பகலும் சந்தடியடங்கச் சோகத்துடன் வரும் இரவும் சந்திக்கும் மாலை இன்ப வேதனை நிறைந்திருக்கிறது. மாலையில் வானத்தில் தோன்றும் வர்ண ஜாலங்களிலும் இயற்கை வனப்பிலும் உள்ளத்தைப் பறிகொடுத்து ரஸிகர்கள் தம்மை மறந்திருப்பர். பல புலவர்களால் வியந்து பாராட்டப்பட்டிருப்பது மாலை நேரம். ஒவ்வொரு இயற்கைப் பொருளும் தம் இயற்கை வனப்பை வெளிப்படுத்தி இறுமாந்து மாலை இள வெயிலில் மிளிரும். நகரத்தில் மாலை நேரம் சந்தடியுடனிருக்கும். ஆலைத் தொழிலாளி தன் வேலையை முடித்துவிட்டுத் தன் மனைவி, மக்களைப் பார்க்க விரையும் காட்சியையும், பள்ளிச் சிறுவர்கள் கையிலே புஸ்தகத்துடன் சிறையிலிருந்து விடுபட்ட கைதியைப்போல ஆனந்தத்துடன் செல்லும் காட்சியையும் காணலாம். பெண்கள் சிலர் கோவிலுக்கும், சிலர் சினிமாவுக்கும் மாலையில் கிளம்புவர். பாலர்கள் புஸ்தகத்தை எறிந்து விட்டுக் கையில் பம்பரமும், கோலியும் எடுத்து வெளிவந்து விளையாடக் கிளம்புவர். ஆலைகளிலும், மற்றக் காரியாலயங்களிலும் வேலை செய்யும் மக்களுக்கு விடுதலை அளித்து உலலாச மூட்டுவதும் மாலை நேரம். நகரத்துக் கூட கோபுரங்களின் கலசங்களின் மீதும், பொன் முலாம் பூசித் தங்கமயமாக்கும் நேரமும் அதுவே. நகரத்தில் வீடுகள்மேல் கம்பத்தில் பறக்கும் மூவர்ணக் கொடிகள் நகரத்திற்கே மாலையில் ஓர் அழகைத் தருகின்றன. ஒவ்வொரு பொருளும் சுதந்திரமாக இருந்தால் தான் அதிலும் வனப்புண்டு. அழகெல்லம் அளக்கும் கூண்டு போன்ற நகரத்திற்கும் ஒவ்வொரு இயற்கைப் பொருளும் தன் பொலிவை விளக்கும் காட்சிக்கும் எல்லையில்லா வேற்றுமையுண்டு. நகரத்தின் அருகில கடற்கரை இருந்தால் அதற்குத் தனி அழகு உண்டு. மாலையில் கடற்கரையில் வீடுகட்டும் சிறுவர்களையும், சிப்பி பொறுக்கும் பாலர்களையும் உலாவவரும் ஏராளமான மக்களின் கூட்டத்தையும் காண்பது மிக அழகாக இருக்கும்.

சூரியனது அந்தஒளியில் மின்னும் முத்துக் கோர்வை போன்ற அலைகளையுடைய நீலக் கடலானது, பொன் போன்று பிரகாசிக்கும் விந்தையையும், தூரத்தில் வானமும் கடலும் சேர்வது போன்றுள்ள இடத்தில் ஒளி வெள்ளத்தில் முழுகும் கதிரவனின் காட்சியையும் காணுவது மிக அற்புதமாயிருக்கும்.

ஒரு சமயம் வேறொரு கிராமத்திற்குச் சென்றிருந்தேன். இயற்கை அன்னையின் அரவணைப்பில் கட்டுண்டு கிடந்த ஒரு கிராமம் அது. ஊரைச் சுற்றி வயல்களும், மாந்தோப்புகளும், தோட்டங்களும் நிறைந்து இருந்தன. ஊரை வளைத்தாற்போல் பொன்னி ஓடிக் கொண்டிருந்தாள். அன்று மாலை உலாவச் சென்றேன். பொன்னிநதியில் பரிசலோட்டுபவர்களின் ஓடப்பாட்டு காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது. காவேரி மணற்பரப்பு பொன் தூள்கள்போல் மின்னின. இதனால் இந்நதிக்கு பொன்னி என்ற பெயர் பலவிதத்திலும் தகும் என எண்ணினேன். தூரத்தில் இரண்டு பாறை போன்ற குன்றுகளிருந்தன. அங்கு சென்றேன். இப்பாறைகளுக்கு நடுவில் தண்ணீர் தேங்கி இருந்தது. உயரமாயிருந்த பாறையின் மீது ஏறினேன். இயற்கையே தன்னை அனுபவிக்க வந்தவர்களை உபசரித்து உட்காரச் சௌகரியமாக இடம் அமைத்திருந்தாள். அதில் உட்கார்ந்து கொண்டேன். எதிரே, என்ன அற்புதமான காட்சி! அந்தச் சூரியனின் பொற்

# மழை ஏன் பெய்தது?



ஆகா! என்ன அற்புதம்! என்ன பிரமாதம், இது தேவலோகம் போல் அல்லவா இருக்கிறது? ஆம் இது தேவலோகமேதான். தேவலோகத்தில் தீபாவளி கொண்டாடு கிருர்கள். எல்லா தேவர்களும் வந்து கூடி விட்டார்கள். இன்னும் தேவேந்திரன் வரவேண்டியதுதான் பாக்கி. அவனும் வந்து விட்டான். தேவர்கள் எல்லோரும் தேவேந்திரனுக்குக் காணிக்கைகளைச்சமர்ப்பிக்கின்றனர். பூலோகத்தில் உள்ள மக்களும் அங்கு வந்துவிட்டார்கள். அங்கேயும் கூட பூலோகத்திலிருந்து பட்டாசு வெடிகளைத் தருவிக்கிருர்கள். எல்லோரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் காட்சியளிக்கிருர்கள். எல்லோரும் அதிகாலையில் எழுந்து விட்டார்கள். கங்கா ஜலத்தில் ஸ்நானம் செய்து புத்தாடை அணிந்து சந்தோஷமாக இருக்கின்றனர். சிறுவர்கள் பட்டாசுகளைக் கொளுத்தி சந்தோஷமாக கொண்டாடினுர்கள். அவர்கள் நிறைய பலகாரங்கள் செய்து தங்கள் உறவினர்களுடன் பரிமாறி உண்டார்கள். இந்திரன் மற்றவர்கள் எவ்வாறு கொண்டாடுகிருர்கள் என்று பார்க்க வெண் யானையில் மிக்க அலங்காரமாக பவனி வருகிருன். பிறகு எல்லோரும் ஓர் இடத்தை அடைகிருர்கள். அங்கே சிவபெருமான் மிக்க அலங்காரத்துடன் விளங்குகிருர். எல்லோரும் சிவனை வணங்கிவிட்டுத் தங்கள் இடத்திற்குப் போகிருர்கள். நாமும் அவரை வணங்கி தீபாவளி கொண்டாடுவோமாக! என்ன நண்பரே! நின்று விட்டீர்? இன்னும் பார்க்கலாம். இந்திர சபையில் நாட்டியம் நடக்கிறது, வாரும் போகலாம். சூரியதேவன் தேவலோகத்தை பிரகாசிக்கச் செய்கிருன். மன்மதன் தேவலோகத்தை ஒரு சோலைபோல் அழகாக அமைக்கிருன். எங்கும் பூமாரி பொழியச் செய்கிருன். எல்லோரும் மிகுந்த சந்தோஷத்துடன் காட்சியளிக்கிருர்கள். அங்கே நம்முடைய பிரதமர் நேரு, நிதிமந்திரி டி. டி. கே. எல்லோரும் புடைசூழ வருகிருர்கள். அவர்கள் மிகுந்த வருத்தத்துடன் காணப்படுகிருர்கள். தேவேந்திரன் அதற்குக் காரணம் கேட்கிருர். "எங்கள் நாட்டில் மக்கள் உணவுக்காக கஷ்டப்படுகிருர்கள்'' என்கிருர் நேரு. இதைக் கேட்டதே தேவேந்திரன் வருணனுக்கு உத்தர விட்டார். ஆகையால்தான் இப்பொழுது மழை சோவென்று பொழிகிறது. நாமும்பிறருக்குதவி செய்து தீபாவளியைக் கொண்டாடுவோமாக.

— A. K. N. ஜெயக்கர், 3-ம் தகுநிலை, ஆ. பிரிவு.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

கிரணங்கள் கொன்றை மரத்துப் பூக்களைத் தங்க மயமாக்கிக்கொண்டிருந்தது. கண்ணுக்கெட்டியதூரம் பசும் வயல்கள். அந்தக்கிரணங்களால் மரகதம்போல் மின்னின. நடுவேயுள்ள வாய்க்காலிலுள்ள தண்ணீரில் சூரிய ஒளி விழுந்தது. வெள்ளியை உருக்கிவிட்டாற்போல் தண்ணீர் நெளிந்து சென்றுகொண்டிருந்தது. கண்மாய்க் கரைக்கும் கீழே கதிரவன மறைந்துகொண்டிருந்தான்.

காவேரி ஆற்றிலிருந்து பெண்கள் இடுப்பில் குடத்துடன் வந்துகொண்டிருந்தனர். பொன்னி தன் நிகரில்லாள்போல் குதித்துக்கொண்டு தன் அலைக் கரங்களை வீசிக் கோவில் படித்துறையைத் தடவிக்கொண்டு பாய்ந்து கொர்ண்டிருந்தாள். தூரத்தே இரண்டொரு ஓடங்கள் வந்துகொண்டிருந்தன. கோவில குளத்திலுள்ள தாமரைகளில் வண்டுகள மயங்கிக் கிடந்தன. அன்னம்போன்ற வெண்ணிறமான வாத்துக்கள் ஒதுங்கியும், ஓடியும் மிதந்தன. ஒரு சிறு மரத்தைத் தடவிப்படர்ந்திருந்த முல்லைக்கொடி தன மணமிக்க மலர் இதழ்களை விரித்துக்கொண்டிருந்தன. பச்சை வயல்களின் நடுவே ஒரு புருக்கூட்டம். அதில் என்ன அழகு! செயற்கையால் இவ்வழகைத் தோற்றுவிக்க முடியுமா? ரஸிகனுக்கு அக காட்சியைப் பார்க்க ஆனந்தம்! ஆனுல் பாடுபட்டுப் பயிரிட்ட குடியானவனுக்கு அதைக் கண்டால் எவ்வளவு கோபம்! அவன் ஓடி வந்து அந்தப் புருக்களின் மீது கல்லை விட்டெறிந்தான். திடீரென அவைகள் ஆகாயத்திலே கிளம்பின. அதிலும்தான் என்ன அழகு! பச்சைக் கடலுக்குமேல் வெண்ணிறப் புருக்கள் பறந்தன. அது இன்னும் என் மனதில் அழியாத ஓவியமாய் இருக்கிறது.

— V. R. B. பாஸ்கரராஜன், 4-ம் படிவம், இ. பிரிவு.

AUXILIARY CADET CORPS (1957-58) துணைப் படை வீரர்கள்



PUBLIC L
28 JAN 195
MADRAS

★



BOY SCOUTS (1957—58) சாரணப் படை வீரர்கள்



CUBS ( 1957-58 ) பாலவீரர்கள்

★



Junior Red-Cross Group (Boys) 1957-58 இளைஞர் செஞ்சிலுவை வீரர்கள்

# புதுமைகள் சில



நமது மாபெரும் தலைவர் நேருஜி ஜப்பானுக்குப் போயிருந்தார்கள் அல்லவா? அதை நினைத்தபோது ஜப்பானைப்பற்றிய சில புதுமைகள் நினைவுக்கு வந்தன. அவற்றை இங்கே கூறுகிறேன். நான் இங்கே எழுதியிருப்பதெல்லாம் நான் புத்தகங்களில் வாசித்ததும், பிறர் சொல்லக் கேட்டதும்தான். என் சொந்தக் கற்பனையல்ல.

ஜப்பானில் தீப்பெட்டித் தொழில் அதிகமாம். அநேகமாக எந்த விளம்பரங்களுக்கும் தீப்பெட்டிகளில் விளம்பரத் தாள்களை ஒட்டி அவைகளை இனமாக வழங்குவார்களாம். வீட்டை விட்டு வெளியேறினால் மறுபடி வீட்டிற்கு வருவதற்குள் ஐந்தாறு தீப்பெட்டிகளை இனமாகக் கொண்டுவரலாமாம்.

ஜப்பானில் பத்திரிகைக்காரர்கள் தங்கள் தினசரிப் பத்திரிகைகளை விளம்பரப்படுத்த பக்கம் பக்கமாக கண்ணாடிபோட்டுத் தெருவில் மாட்டி வைப்பார்களாம். பத்திரிகைகளைப் பணம் கொடுத்து வாங்கிப் படிக்க முடியாத ஏழைகள் அப்பத்திரிகைகளை இலவசமாக வாசித்துக்கொள்வார்கள்.

தான் மேல் நாடுகளில் கண்ட சில புதுமைகளை என் சித்தப்பா என்னிடத்தில் கூறியிருக்கிறார்கள். ஒன்று, கிரீஸ் நாட்டில் சினிமா படங்களைத் திறந்த இடத்தில்தான் காட்டுவார்களாம். இரண்டு அல்லது மூன்று அடி உயரமுள்ள கோட்டைச் சுவர்தான் அடைப்பாக இருக்குமாம். தெருவில் போகிறவர்கள் ஐந்து நிமிஷம் நின்று படம் பார்ப்பார்களாம். மனதுக்குப் பிடித்தால் டிக்கெட் வாங்கிக்கொண்டு அடைப்புக்கு உள்ளே சென்று படம் பார்ப்பார்களாம். இல்லாவிட்டால் நிற்காமல் போய் விடுவார்களாம். பரம ஏழைகள் தவிர, கண்ணியமுள்ள யாரும் வெளியே நின்று காசு கொடுக்காமல் சினிமா பார்க்கமாட்டார்களாம். எப்படி!

இன்னொன்று, அதே நாட்டில் மணி சொல்வதற்கென்று தெருவுக்குத்தெரு டெலிபோன் இருக்குமாம். அது ஐந்து நிமிஷத்திற்கு ஒரு முறை மணி சொல்லிக்கொண்டே இருக்குமாம்.

அமெரிக்காவில் சுடுபானங்களையும், குளிர் பானங்களையும் விற்கும் இயந்திரம் தெருக்களில் இருக்குமாம். அதற்குரிய துட்டைப் போட்டுவிட்டு பொத்தானை அமுக்கினால் விரும்பிய பானம் கிடைக்குமாம்.

மேல் நாடுகளில் பல இடங்களில் தெருக்களின் ஓரங்களில் பத்திரிகைகள் மற்றும் விலை பொருள்கள் வைக்கப்பட்டிருக்குமாம். சொந்தக்காரர்கள் அங்கு இருக்கமாட்டார்களாம். வேண்டியவர்கள் துட்டைப்போட்டு விட்டு பொருளை எடுத்துச் செல்வார்களாம்.

இவை போல எத்தனையோ புதுமைகளைச் சொல்லலாம். இடமில்லை, எனவே நிறுத்திக் கொள்கிறேன்.

— S. மோஹன்குமார், 2-ம் படிவம், ஆ. பிரிவு.

—:—

# உடைந்த உள்ளம்



சரளாவின் வீட்டில் ஒரே அமர்க்களமாய் இருந்தது. சரளாவின் 31ம் ஆண்டு நிறைவு பிறந்தநாள் கொண்டாட்டம். கூட்டம் முடிந்து அறையில் வந்து உட்கார்திருந்தாள். அவள் மனம் ஓர் நிலையில் இல்லை. அவளோ ஓர் பெரிய 'ஸ்டார்.' அவள் ஏன் கவலைப்பட வேண்டும்? வீடு பெரியது. ஆயிரம் ஆயிரமாகப் பணம். வேளைக்கு வேளை நல்ல ஆகாரம். பின் ஏன் கவலைப்படவேண்டும்?

9 வருடங்களுக்கு முன்னால் நடந்த சம்பவத்தை அவள் மனம் நாடியது. அவள் எஸ். எஸ். எல். சி. வரையும் கஷ்டப்பட்டு படித்தாள். பின் நடராஜனை மணந்து துன்பப் பட்டாள். ஒரு வேலையும் இல்லை. இரண்டே வருடத்தில் அவள் கணவன் காசநோயால் இறந்தான். இறந்த மறுநாள் சிசுவை ஈன்றெடுத்தாள். குழந்தைக்குக் கோமதி என்ற பெயர் கொடுத்தாள். பின்பு அவள் பிச்சை எடுக்கு நிலைமை வந்துவிட்டது. ஒரு நாள் அவள் பிச்சை எடுக்கும் பொழுது சினிமா டைரக்டர் ஒருவர் அவளைப்பார்த்து, "நீ சினிமாவில் சேருகிறாயா?" என்று கேட்டார். உடனே அவள் அவளுடைய வறுமையை எண்ணி சினிமாவில் சேர்ந்தாள். ஒவ்வொரு நாளும் டைரக்டர் அவள் வீட்டிற்கு வந்து "உன் குழந்தையை எங்காவது விட்டுவிடு, அது உனக்கு முட்டுக் கட்டையாக இருக்கிறது" என்று சொல்லிவந்தார். இதனால் அவளுடைய மனம்மாறி வாழ்க்கைக்கு இடைஞ்சலாக இருந்த கோமதியை சித்திரைத் திருவிழாவில் விட்டு விட்டு வந்துவிட்டாள். கோமதிக்கு அப்பொழுது 4 வயது.

"வெளியே போ" என்ற வேலைக்காரியின் சப்தம் கேட்டது அப்பொழுதுதான் அவள் சிந்தனையினின்று விழித்து வெளியே எட்டிப் பார்த்தாள். அங்கே வயசான குருடனும் ஒரு சிறுமியும் நின்றுகொண்டிருந்தார்கள். உடனே அவள் ஓடிப்போய் சிறுமியைக் கூப்பிட்டு வந்தாள். வந்து உணவு கொடுத்தாள். உடை கொடுத்து அனுப்பினாள். "சிறுமிக்கும் அந்த கிழவனுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? ஒரு வேளை அவள் நமது மகளாய் இருப்பாளோ" என்று நினைத்துக் கொண்டு பிச்சைக்காரர்கள் தெரு முழுதும் சுற்றினாள். அந்தச் சிறுமியையும் காணோம். மனநிலை சிறிது அமைதியாய் இருக்க கடற்கரைக்குச் சென்றாள். அங்கே அவள் கண்டது அவளைக் கலங்கவைத்தது. உடனே ஓடிப்போய், "அந்தக் குழந்தை யார்?" என்று கேட்டாள். உடனே அவன் சொன்னான், "அவள் பெயர் கோமதி. சித்திரைத் திருவிழாவில் கண்டெடுத்தேன்" என்று சொன்னான். உடனே அவள் 'ஆ, அது என் குழந்தை' என்று சொல்லி அவள் கதையையும் சொன்னாள். இதை அருகில் நின்றுகொண்டு கேட்ட கோமதி "தாத்தா" என்று சொல்லிக்கொண்டு தாத்தாவிடத்தில் உட்கார்ந்தாள். சரளா "கண்ணே" என்று சொல்லி அவள் கையைப் பற்றினாள். அந்தச் சிறுமியோ கையை விடுவித்துக்கொண்டு அவள் கொடுத்த ஆடையையும் உணவையும் திருப்பிக் கொடுத்து விட்டாள். உடைந்த உள்ளத்துடன் சரளா தன் வீட்டுக்குப் போனாள். தான் பெற்றெடுத்த குழந்தைச் செல்வத்தைக் கைவிட்ட அவளுக்கு இனி கோமதிமீது உரிமை ஏது?

— A. கிரேஸ், 2-ம் படிவம், அ. பிரிவு.

Junior Red-Cross Group ( Girls ) இளைஞர் செஞ்சிலுவைச் சங்க வீராங்கனைகள்



★



BULBULS ( 1957–58 ) வீர பாலிகைகள்

## Editors & Artists of Class Magazine (Girls' Sections)

பத்திரிகை ஆசிரியரும், ஓவியரும். (பெண்கள்)





Class Pupil Leaders & Asst. Leaders

வகுப்பு மாணவ தலைவிகளும், உப தலைவிகளும்



Best in Handicrafts

சிறந்த கைத்தொழிலாளர்கள்

# என் பாடசாலை மணி



"டிங்டாங் டிங்டாங்" கென்றொலிக்கும் மணியே, இங்கித ஓசையுடன் தொனிக்குதே உன் செய்தி! எங்கெங்கிருப்பினும் அங்கங்கே கேட்குதே! மங்காத ஓசை மறக்க முடியாதே! ஆம், நம் பாடசாலைமணி அதிகாரத்தோடும் சக்தியோடும் ஒலித்து, படிப்போரையும், படிப்புவிப்போரையும் ஆட்டுவிக்கும் ஆற்றல் வாய்ந்தது. இதில் ஐயம் எதுவும் உண்டோ! சிந்தித்துப் பாருங்கள்! அப்பப்பா! பகல் முழுவதும் அந்த வாயில்லா மணி நமக்கிடும் கட்டளைகள்தான் எத்தனை? யாருக்கும் கீழ்ப்படியாத பிடாரிக் குணம் படைத்தவரும் இந்த மணியோசைக்குக் கீழ்ப்படிந்துதானே நடக்கவேண்டும்! மணியோசை மாணவர்களின் மனத்தை உணர்வுறச் செய்கிறது. ஆசிரியர்களைத் தட்டி எழுப்புகிறது, "குறித்த நேரத்தில் குறித்தஇடத்திற்குச் செல். குறித்த காரியத்தைச் செய். காலத்தை வீணாக்காதே" என்று தெளிவாகவும் தீர்க்கமாகவும் கூறுகிறது அல்லவா? "பாடசாலை நேரம் படிக்கப் போ, சோம்பித் திரியேல். உடற்பயிற்சி செய் இரவில் படிக்கவேண்டிய பாடங்களைப்படி" என்ற கருத்துக்களைத் தெளிவாக நீங்களும் நானும் அறியச் சொல்லுகிறதல்லவா! மணியோசைக்குக் கீழ்ப்படிந்து குறித்த நேரத்தில் குறித்த காரியம் செய்ய வேண்டுமென்று பழக்கப்பட்டு விட்டபடியால் நேரந்தவறாமை என்னும் சீர்குணம் நமது வாழ்க்கையில் ஊறிவிட்டது அல்லவா! இவ்வாறு அனேக மாணவர்களின் வாழ்க்கையைச் செம்மைபடுத்தி நல்வாழ்வு அருளிய அருமை, பெருமை மிகும் எம் பாடசாலை மணியே! நீ நீடூழி வாழ்க! உன்னால் உயர்வடைந்த மாணவர் யாவரும் வாழ்க!

— M. சந்திரசேகரன், 1-ம் படிவம், லி. பிரிவு.

★ ★ ★

# நீல ஒளி



ஓர் அரசன் ஒரு வீரனை அடித்து விரட்டி விட்டான். அவன் பசியால் வாடி வதங்கி ஒரு காட்டிலுள்ள குடிசைக்கு வந்து சேர்ந்தான். அக்குடிசையில் ஒரு தேவதை இருந்தாள். அத்தேவதையினிடம் கொஞ்சம் சாப்பாடும் இரவு தங்குவதற்கு இடமும் பணிவுடன் கேட்டான். அத்தேவதை, "ஒரு நிபந்தனை உண்டு. அதை நிறைவேற்றி விட்டால் இன்று தங்கலா" மென்று சொன்னாள். "அந் நிபந்தனை என்ன கூறுங்கள்?" என்றான் வீரன். ஒரு கிணற்றில் 'நீல ஒளி' உள்ளது. அதை எடுத்துக்கொண்டு என்னிடம் கொடு என்று அவள் சொன்னாள். வீரன் கிணற்றில் இறங்கி நீல ஒளியை எடுத்துக்கொண்டு பாதிக் கிணற்றுவரை வந்தான். அத்தேவதை "நீல ஒளியைக் கொடு" என்று கேட்க, அவன் கொடுக்க முடியாதென மறுத்து விட்டான். உடனே தேவதை அவனைக் கிணற்றில் தள்ளிவிட்டாள். அவன் நீல ஒளியின் உதவியால் மேடேறிவந்து அத்தேவதையைக் கிணற்றில் தள்ளிவிட்டு அவளிடம் உள்ள பொருட்களை எல்லாம் எடுத்துக்கொண்டு, அரசனுக்குப் பல துன்பங்களைக் கொடுத்தான். அவ்வரசன் தன் பிழையை மறந்து தன் மகளையும் வீரனுக்குக் கலியாணம் செய்து கொடுத்து அரசுரிமையும் கொடுத்தான். வீரன் சுகமாய் வாழ்ந்தான். கதை எப்படி இருக்கிறது?

P. சுப்பிரமணி, 1-ம் தகுநிலை, ஆ. பிரிவு.

# The Story of Money.



'GREECE'. Do you know this country? The Greeks had a goddess called 'Janano Monido'. They had a beautiful temple for her. Crowds of peiple visited this temple everyday. They poured their prayers there and wanted to earn the blessing of Janano Monido. For this, the Greeks put gold at her feet and worshipped.

Many years later, there was a good lot of gold inside the temple. The King saw all this gold and was glad to ask people to use it up in good ways.

Then each Greek took some gold and said, "This is Janano Monido's blessed gold". Some Greeks said, "It was Monido's gold and I shall have the best of luck".

The Greeks went to the shops and said, "Here is Monido. Take it for you. Will you please give me that thing instead?".

After a century, they changed the name 'Monido' into 'Monic'. Then Monic became very important in Europe. And now this has got the name 'money' everywhere.

Do you know this story?

P. THILAGAMOORTHY, Form II C.

★ ★ ★



# BEWARE OF PICK POCKETS

NANDI is a little VILLAGE. KUPPAN lived there. He was a GARDENER. His wife was KUPPAYEE. Once he went to MADURAI. He must go by TRAIN. So he went to the STATION. He bought a TICKET. He had 100 RUPEES with him. He never went by train before. That was his first JOURNEY. Kuppan got into a CARRIAGE. He saw a NOTICE. It read "BEWARE OF PICK-POCKETS". He was afraid. He went into the next carriage. There was also the SAME notice. He went into the third carriage. He saw the same notice. He went into the NEXT carriage. He saw the same notice. EVERYWHERE he saw the same notice. This frightened him. He thought "There are pickpockets. WHY should I LOSE my MONEY? I must run HOME now SAFELY". So saying Kuppan returned home.

S. DHEENADAYALAN, Form I C.

*You Bargain - -*

*- - When You buy the best*

BUY

# SOCIAL STUDIES RECORD BOOKS

FOR FORMS I TO VI

*By*

S. P. ATHISAYAM SAMUEL, B. A., L. T.,

(Headmaster, Ambrose High School, Megnanapuram)

★

THEY ARE THE BEST

# JAYA BHARAT PUBLISHING HOUSE

EDUCATIONAL PUBLISHERS

12, FRANCIS JOSEPH STREET, Post Box No. 1514. MADRAS-1.

★

Books approved by the Madras T. B. C. according to the Revised English Syllabus.

1. PRISONER TO PRIME MINISTER By Rev. R. S. Macnicol, M. A. (A Life of Jawaharlal Nehru) For English Nondetailed study in Higher Forms.
2. JEAN VALJEAN By Victor Hugo. For English Nondetailed Study in Forms III & IV.
3. STORIES OF RIGHT CONDUCT. (Junior & Senior) For Forms III, IV & V.
4. STORIES OF NOBLE CHARACTER. (Junior & Senior) For Forms III, IV & V.
5. STORIES OF GREAT IDEALS (Junior & Senior) For Forms III, IV & V.
6. ADVENTURES ROUND THE WORLD. For Higher Forms.
7. JAYA BHARAT HINDI KITABS. For II & III Forms Class use.

# P. R. KARUPPIAH NADAR & CO.

PATTIVEERANPATTI

★

*Proprietors of:*

## The Joseph Coffee Curing Works, Pattiveeranpatti

Agents: COFFEE BOARD Cardamom Auctioneers & Suppliers of STANES Fertilisers for Coffee, Cardamom, Paddy etc.

★

## The Joseph Coffee Grinding Works,

**108, 109, Big Bazaar, TIRUCHIRAPALLI**

Suppliers of Raw, Roast and Ground Coffee Renowned for Purity and Quality.

★

## M/s. Xavier Transport, Pattiveeranpatti

Palani Hills Transporters.

★

*BRANCH:*

# M/s. P. R. KARUPPIAH NADAR & CO.

Fruit Commission Agents & Coffee Wholesale Dealers

**Nelpettai Street - - TIRUCHIRAPALLI.**

## பள்ளிக்கு வாழ்த்து



கனிவுடன் அகத்தில் நல்ல கண்ணெனும் கல்வி யீந்தாய்.
இனிமையும் எழிலும் பண்பும் இலங்கிட வைத்தாய் வாழ்வில்
நனிமலர்க் கல்விக் காட்டின் நறுமணம் வீசச் செய்த
வனிதையாம் செல்வீ! என்றும் வாழிநீ வாழியம்மா!

பரிவுடன் ஈன்றெடுத்துப் பாரினில் பண்பால்வாழத்
தெரிவுறும் கல்வி யூட்டித் திகழ்ந்திடச் செய்தாய், எங்கள்
அறிவிலாத் தன்மையோடு ஆழ்துயர் துன்பம் யாவும்
மறிந்திடச் செய்தாய். என்றும் வாழிநீ வாழியம்மா!

மொழி யறிவோடு கூட முந்து விஞ்ஞானம் தன்னை
வழியெனும் கலைகளாகும் வீரஞ் சொல் காவிங்க்கள்
கழி மிகு நீதி யாவும் கற்பித்தே உலகில்வாழும்
வழி யெலாம் வகுத்தே யீந்தாய் வாழிநீ வாழியம்மா!

உயர்ந்த நற் கலைகளோடு உலகிடைச் சிறந்துவாழ
அயர்விலா ஒழுக்கம் கல்வி ஆய்குணம் ஒழுங்கும் ஊட்டி
மயலினைப் போக்கும் நல்ல மாண்பெனும் விளையுள் தோன்றும்
வயலென வாழும் தாயே! வாழிநீ வாழியம்மா!

நன்றுறப் பிரிவதால்நாம் பிரிவதில் தவறுமுண்டோ!
இன்றுறும் நிகழ்ச்சி தன்னை என்றுமே மறவோம் உன்றன்
மின்னிடும் கீர்த்தி எங்கும் மேவிடச் செய்வோம் பண்பு
மன்னிய எங்கள் தாயே! வாழிநீ வாழியம்மா!

— P. இராமசாமி, 6-ம் படிவம்.

## பள்ளிக்குப் பிரிவு



ஒன்றானோம் எல்லோரும் உள்ளமே மகிழ்ந்தோம்
கண்டார் போற்றும் கவின்பெறு பள்ளியின்
எண்ணில் பெருமையை இயம்பவும் ஒல்லுமோ?
காலையிலே ஒன்றாகிக் கல்வியினைப் பயின்றே
மாலையிலே விளையாடி மதுகையும் பெற்றிருந்து
பெற்றோரும் மனமகிழப் பீடழிக்கும் அறியாமை
தோற்றோடும் எதிரியெனத் தொலைவிலே நின்றொழியக்
கல்வியினைக் கற்றோம்நாம் கரைகாணா நெடுந்துயராம்
பிரிவுதான் வந்ததுவே பெருந்துயரம் உற்றோமே.
ஐயோ! நினைத்தால் அகமும் நோவுது
பொய்யோ இல்லை புனைந்துயரம் தானில்லை
கொடியவர் கூறும் கடுஞ்சொல் பொறுத்துத்
துறைபல புகுந்து தூயறிவு தான்பெற்றுக்
கறைபல போக்கிக் கலங்கரை விளக்கமாய்
நானில மெங்கணும் நற்புகழ் நாட்டி
வாழவே நினைக்கிறோம், வழிகூற வேண்டுகிறோம்.

— V. இராமசாமி, 6-ம் படிவம்.



# "உண்மைச் சுடரொளியே!"

[பள்ளி நிர்வாகிக்கு வாழ்த்து]

உச்சிக் கமலத்திலே — துலங்கும்
உண்மைச் சுடரொளியே!

அச்சத் துயர் நீங்க — இதயத்தில்
அபயக் கதிர் பரப்பாய்!

இமய வெண்பனிமேல் — எவரெஸ்டென
இலங்குந் தலைவரே!

அமர கங்கை போல் — உம் ஈகை
ஆடித் தவழாதோ!

மனித வாழ்வெல்லாம் — விஞ்ஞான
மாறுதல் பெற்றிடவே!

இனிய உள்ளத்துடன் — நீரும்
இன்பம் பெற்றிடுவீர்!

மன மயக்க மின்றிச் — சாதி
மத மயக்க மின்றித்

தினமும் மக்களிடம் — தொண்டாற்றும்
திலக! வாழிய நீர்.

— M. குருமகாராஜன், 6-ம் படிவம்.

★ ★ ★

# இயற்கையின் பொன்மொழி



நிமிரும் மலைநல் மறை கூறும்
நீ எனைப் போலவே நிமிர்ந் தேநில்.
நீள்கடல் கூறும் அலை மோத,
நின்மனம் ஆழம் ஆக்கிடு வாய்.
துள்ளி விழுந்தே துருவிடும் அலைகள்
தவழ்ந்து கூறிடும் சொற் கேளாய்.
உள்ள மதனில் உற்சாகம் நிரப்பி
உயர்ந்த வாழ்வினைப் பெற்றிடு வாய்.
பரந்த மாநிலம் பண்புடன் கூறும்
பாரந் தன்னைச் சுமந்திடு வேன், [கொண்டு
பயந்தனைப் போக்கிப் பொறுமையைக்
பயன்தரும் வாழ்வினை அடைந்திடு வாய்.

நீல வானப் பரப்பது கூறும்
நீள்நெடு உலகில் வாழ்ந்திட வே
என்னைப் போலப் பரந்த புகழை
என்றும் உலகினில் பெற்றிடு வாய்.
இவ்வுரை களைநாம் இனிதே போற்றிச்
செவ்வி தாகவே செய்லாற் றின்
இப்புவி யதனில் செப்பரும் புகழொடு
தப்பெது மின்றியே வாழ்ந்திட லாம்.

— M. ஜான் செல்வராஜ், 5-ம் படிவம்.

# என் வரலாறு



நவரத்தினங்களில் நானும் ஒருவன். என் நிறம் வெண்மை. நான் ஒளி வீசும் தண்மையன் என்னை மங்கையர்கள் விரும்பி மாலையாகவும் பிற பணிகளாகவும் தொகுத்து அணிவர். மன்னரின் மகுடத்தில் நான் பெருமையுடன் இருப்பேன். என் பிறப்பு விநோதமானது. முத்துச்சிப்பியின் உள்ளே இருப்பேன். கடற்கரையிலும் ஆறுகளிலும் கிளிஞ்சல்கள் காணப்படும், இருகிளிஞ்சல்கள் ஒன்றன்மீது ஒன்று பொருந்தி இருப்பதே சிப்பி எனப்படும். இச் சிப்பியின் உட்புறத்தில் ஒரு பூச்சி இருக்கும். சிப்பிக்குள் மணல் நுழைந்து விட்டால் பூச்சி வெளிவர இயலாது. அப்பொழுது அது சிப்பியினுள்ளே சுற்றிச் சுற்றிப் புரளும். அவ்வாறு அது புரளும்போது ஒருவகையான திரவம் தோன்றும். அத்திரவம் மணலுள் கலந்து இறுகும். அவ்விதம் இறுகின பொருள்தான் நான் (முத்து) நான் இறுகுவதற்கு ஐந்தாண்டுகளாகும்.

சிப்பியே என் வீடு. பாறையைப்போன்ற பல மலைகள் கடலினுள்ளே உண்டு. கடலுக்குள் ஆழம் உள்ள இடங்களில் நூறு அடிக்குள் எங்கள் வீடுகள் இருக்கும். மனிதர்கள் எங்களை அங்கே இருக்கவிடமாட்டார்கள். படகுகளில் போய் உள்ளே மூழ்கி எங்களை வெளியே சேர்ப்பார்கள். இதை முத்துக்குளித்தல் என்பார்கள். முற்காலத்தில் முத்துக்குளிப்பது வெகுகஷ்டம் நீரினுள்ளே நீண்டநேரம் மூச்சு அடக்கும் திறமை உள்ளவர்களே இத்தொழில் செய்வார்கள். முத்துக் குளிப்பவர் ஒரு காலில் கனத்த கருங்கல்லை உறுதியான கயிற்றினால் கட்டிக்கொள்வர். மற்றொரு காலில் சிப்பி பிடிக்கும் வலையையும் கட்டிக் கொண்டு மூழ்குவர். தண்ணீரின் உள்ளே தரை மட்டத்திற்குச் சென்றதும் காலில்உள்ள வலையை கழற்றி கழுத்தில்மாட்டிக்கொண்டு அதில் எங்களை வாரிப் போடுவர். நீருக்குள் மூச்சை அடக்கிக் கொண்டு இருப்பர். மூச்சை அடக்க முடியாத நிலையில் இருந்தால் காலில்உள்ள கல்லை அவிழ்த்து விடுவார்கள். அவர்களைப் படகுகளில் சிலர் கயிற்றினால் பிணைத்துக்கொண்டிருப்பர். அக்கயிறுகளை அவர்கள் பிடித்துக் கொண்டு நீர் மட்டத்திற்கு வருவார்கள்.

இக்காலத்தில் அவ்வளவு கஷ்டம் ஒன்றும் இல்லை. நீரில் மூழ்குவோர் இரப்பர் ஆடைகளை அணிந்துகொண்டு நீரினுள் மூச்சு விடுவதற்குத் தேவையான இயந்திரங்களின் உதவியால் எங்களை எடுக்கிறார்கள்.

நாங்கள் கடலிலிருந்து வெளியே வந்ததும் எங்களைப் பூமிக்குள் புதைத்து வைப்பார்கள். அப்பப்பா! கடலில் நீருக்குள் அமுங்கிக்கிடந்தோம். விடுதலை கிடைத்தது என்று மகிழ்ச்சி அடைந்தோம். ஆனால் மீண்டும் நிலவறையில் சிறைவாசம், அதுமட்டும் அன்று. கொதிக்கும் நீரில் எங்களைப் போட்டுச் சுத்தம் செய்வார்கள். பின்பு சிப்பிகளை அறுத்து எங்களை எடுப்பார்கள். எங்களில் சிலர் சிறியவர்களாகவும் பெரியவர்களாகவும் இருப்போம். எங்களை வணிகர்கள் மொய்த்துக்கொள்வர். ஏலத்தில் எங்களை விலைக்கு வாங்கிக்கொள்வர். பின்பு ஆண்களுக்கும் பெண்களுக்கும் பயன்படுகிறோம்.

நாங்கள் உண்டாவதைப்பற்றி முற்காலத்தில் வரலாறும் உண்டு. மழை பெய்தவுடன் சிப்பிகள் நீர்மட்டத்திற்கு மேலே வரும்பொழுது மேல் ஓடுகள் திறந்திருக்கும். அதனால் மழைத்துளி சிப்பியினுள்ளே புகும். அம் மழைத்துளிகளே நாங்கள் என்று எங்கள் பாட்டி சொல்லக் கேட்டிருக்கிறேன். நாங்கள் சிங்களத்திற்கு அருகிலுள்ள கடலுக்கும் தூத்துக்குடிக்கு அருகிலுள்ள கடலிலும் வாழ்கிறோம்.

நீங்கள் என்னை விரும்புகிறீர்கள் அல்லவா? உங்களில் யாருக்கெல்லாம் முத்து என்ற பெயர் இருக்கிறது? சொல்லுங்கள் பார்க்கலாம்!

— P. மாரிமுத்து 1-ம் படிவம், டி. பிரிவு.

# வாழ்வளிக்கும் வளர்கலைகள்

(நமது பள்ளியில் நடைபெறுவன)

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்." — என்ற

நீதிக்கிணங்க, உழைப்பின் அருமை எங்கும் போற்றப்படுகிறது.

ஏட்டுக் கல்வியுடன், தொழில் கல்வியும் பெறுவதுதான் நாட்டுக்குநலம் பயக்கும் என்பது உலகறிந்த உண்மை. ஆகவே கல்வி நிலையங்கள் அனைத்தும் வாழ்வினுக்கு வழிவகுத்துக் கொடுக்கும் பயனுறு கல்வி பயப்பனவாக இருத்தல் அவசியம்.

இப்பள்ளியின் மாணவ மாணவிகள் அறிவித் துறையன்றி ஏனைய கலைநுணுக்கம், தொழில் நுணுக்கம் ஆய துறைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

**அவற்றிற்கென வகுக்கப்பட்டுள்ள சில கழகங்களும் அவற்றின் செயல்முறைகளும்**

1. **நாடகக்குழுவும், நடனக்குழுவும்:** மாணவர்களும், மாணவிகளும் இதில் சேர்ந்து நாடகங்களில் நடிக்கவும், நடனம் ஆடவும் பயில்கின்றனர். பள்ளி விழாக்கள் தோறும் இவைகளைக் குழந்தைகளும், பெற்றோர்களும் கண்டு களிக்கின்றனர். இளம் மாணவ மாணவிகள் தங்களுக்குள்ள கலை உணர்ச்சியை வெளிப்படுத்த இவை நன்முயற்சிகளாகும்.

2. **அறிவு வளர்ச்சிக் கழகங்கள்:** மாணவிகளுக்காவும், மாணவர்களுக்காகவும் தனித் தனியே, மேல் வகுப்புகளுக் கென்றும், கீழ் வகுப்புகளுக் கென்றுமாக இக்கழகங்கள் அமைக்கப்பட்டுப் பணி புரிந்து வருகின்றன. நற்கருத்துக்கள் செறிந்த சொற்பொழிவுகள் ஏற்படுத்தப்பட்டு அதிலே மாணவ மாணவிகள் பங்கெடுக்கும் வாய்ப்பும் பெறுகின்றனர். இதன் மூலம் அவர்களுக்குத் தங்களது நாவண்மை, சொற்றிறம், கருத்துச் செறிவு இவைகளை வெளியிட நல் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது.

3. **இளைஞர் செஞ்சிலுவைச் சங்கமும், இளஞ் சிறுமியர் சங்கமும்:** இளைஞர் இதயத்திலே சேவை மனப்பான்மையைத் தோற்றுவித்து 'இயன்றவரை செய்' என்ற தத்துவத்தை ஊட்டுவதே இவைகளின் நோக்கமாகும். இதன் பயனை குழந்தைகள் கண்கூடாக அறிந்து உற்சாகத்துடன் பணிபுரிந்து வருவது போற்றத்தக்கதாகும்.

4. **சாரணர் இயக்கமும், குருளையர் இயக்கமும், வீர பாலிகைகள் சங்கமும்:** 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற பெரு நோக்கம் கொள்ளச்செய்யவும், மனிதாபிமானத்தை வளர்க்கவும் இளஞ்சிறார்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள இயக்கங்களாகும். சுற்றுலாக்கள் செய்வதும், சுகாதாரத்துக்கான சேவைகள் செய்வதும், கட்டுப்பாடு, ஒழுக்கம் முதலியவற்றை வளர்ப்பதும் இவற்றின் அலுவல்களாம்.

5. **பள்ளித் தோட்டம்:** மாணவர்கள் உபயோகமான வழியில் பொழுது போக்குவதற்கான திட்டம் இது. ஓய்வு நேரங்களில் அவர்களே தங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிலங்களில் வேலை செய்வதும், பயிர் செய்வதும் பார்க்கக் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது.

6. **நூல் நிலையம்:** பள்ளியின் உயிர் நாடியாகத் திகழ்வது நூல் நிலையமாகும். நூல்கள் பொது நூல் நிலையத்தில் ஆண்டுதோறும் புதிது புதிதாகச் சேர்க்கப்பட்டு வருகின்றது. படிப்பில் ஆர்வமிக்க மாணவர் தொகையும் பெருகி வருகிறது. அத்துடன் ஒவ்வொரு வகுப்புக்கும் தனித்தனி நூல் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் பயன் அளவற்றதாயுள்ளது.

7. **சிறு தொழில்கள்:** சிறு தொழில்களின் மேன்மை யாவரும் அறிந்ததே. ஜெர்மனி, ஜப்பான் போன்ற நாடுகள் இதற்கு எடுத்துக்காட்டு

(முன் பக்கத் தொடர்ச்சி)

கள். நம் பள்ளியிலும் தச்சு வேலை மாணவர்களால் உற்சாகமாகச் செய்யப்பட்டு வருகிறது. தங்களுக்கு உபயோகமான அநேக மரச்சாமான்களைச் செய்யும் ஆற்றல் பெற்றுள்ளார்கள்.

சிறுமிகள் வாழ்க்கையில் மிகவும் தேவைப்படுகின்ற தையல் வேலை, பின்னல் வேலை, சமையல் வேலை முதலியனவும் திறம்படக் கற்பிக்கப்படுகின்றன.

8. **படக்காட்சி:** கண்ணால் பார்த்து அறிவது வெகு சுலபம். ஆகவே பாட சம்தமான விஷயங்களைச் சினிமாக்கள் மூலம் காட்ட சினிமா யந்திரம் வாங்கப்பட்டுள்ளது. எல்லா வகுப்பினருக்கும் இப்படக்காட்சி காட்டப்படுகிறது. இதில் குழந்தைகள் அளவற்ற உற்சாகம் காட்டி, மிகப்பயனை அடைகிறார்கள்.

9. **தேகப் பயிற்சி:** உடற்கூறு பயிற்சி ஆசிரியர்கள் பலதிறப்பட்ட பயிற்சிகளையும், விளையாட்டுகளையும் கற்றுத் தருகிறார்கள். அவர்கள் சிரத்தையை மேலும் வளர்க்கப் போட்டி விளையாட்டுக்கள் அவ்வப்போது நடத்தப்பட்டும் வருகின்றன.

10. **பள்ளியின் துணைப்படை: (A. C. C.)** 'T,he Price of peace is Continual watchfulness'. என்றபடி நல்வாழ்வுவாழ நாம் சமாதானத்துடனும், பகையின்றியும் வாழவேண்டும். ஆகவே நாட்டைக் காக்கும் சக்தி ஒன்று வேண்டும். அதற்கு உறுதுணையாயிருக்கவே பள்ளிகளில் துணைப்படைப் பயிற்சி முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் நம் மாணவர்கள் உற்சாகமாகப் பங்கெடுத்துக்கொண்டு அநேக உருப்படியான நிர்மாண வேலைகளையும் செய்து வருகின்றனர்.

ஜெய் ஹிந்த்!



# हमारा स्कूल

(Shri S. Soumyanarayanan, Hindi Pandit.)

स्कूल हमारा सुन्दर भाई
इसमें पढना अति सुखदाई
खेल कूद है नहीं लडाई
पाठ गान हैं हमें मन भायी
ठीक नौ बजे यहाँ मैं आता,
दिन भर पाठ में मनको लगाता;
साढे चार को घर को निकलता
"अच्छा लडका"—नाम भी पाता
"निकला सूर्य"—यह चिन्ह हमारा
जिसकी रोशनी धीलपर घेरा
जिसको देखकर उडती मन में
तेज़ी दीसी की वीर तरंगे।
स्कूल में आकर पंलि बाधकर
पालन हारेका नाम पुकारते
नीति रीति से वर्ग में जाकर
भाषा गणित विज्ञान सीखते
अध्यापकों की इज्जत करते,
उनके प्यार को पाते रहते,
देशके सचे सेवक बनते
देश पिता के आशिष पाते
नाम न अब तक सुना न तुमने!
एन. एस. वी. वी. शाला यहाँ का
लडकों का तो सुधार क्षेत्र है
त्याग प्रेम का सुन्दर केन्द्र है.



# भक्त नंदनार।

(M. Muniyappan, IV Form C.)

नंदनार पंचम वर्ण में पैंदा हुआ। असने चिदंबर के आदनूर नामक ग्राम में जन्म लिया था। उसे हमेशा भगवान नटराज से बडी भक्ति थी। एक जमीन्दार के पास वह खेती बारी का काम करता था। वह अपने को हमेशा शुद्ध रखता था। अपने मित्रो से सफाई के बारे में बोलता था।

वह बहुत चाहता था कि चिदंबर में जाकर भगवान नटराज के दर्शन करे। मालिक के यहाँ अपने मित्रों को ले जाकर चिदंबर जाने के लिए अनुमती मांगी। उस समय मिरासदार बोले "तुम कैसे चिदंबर जाओगे? तुम लोगोंने अछूतों की जाति में जन्मि लिया है। मंदिर के अधिकारी व पूजारी तुझे अन्दर न जाने देंगे। खेती बारी के काम को कौन करेंगे? बेचार। नंदन बडा असंतोष हुआ और उसने विनय से दुबारा वर मांगा। अजी! हम तीन दिनों में वापस आयेंगे। आकर पूरा काम करेंगे। मिरासदार ने उनको मना किया। इस लिये नंदन उदास था।

नंदन ने रात ही रात भगवान की कृपा से खेती बारी के अधूरे काम को पूरा कर दिया। भगवान नटराज मालिक के स्वप्न में बोले "अरे! मेरे कई भक्तों में नंदनार एक परम भक्त है। मंदिर में जाने से उसे क्यों रोका?" मिरासदार ने डरकर नंदन को चिदम्बर जाने की अनुमति देदी। नंदन झट अपने मित्रों को लेकर चिदम्बर गया। नंदन के चिदंबर आने की बात जानकर सब पुजारियों के बीच में खलबली हुई। नंदन को रोकने को उन्होने भी बडी कोशिश की। लेकिन उसी रात को प्रधान दीक्षितर के स्वप्न में भगवान नटराज ने आकर कहा। "अरे! मेरा भक्त नंदन अपने मित्रों के साथ आ रहा है। उन्हे मंदिर के अन्दर जाने की अनुमति दो। ऐसा न करोगे तो मुझे बडा गुस्सा आ जायगा।

दूसरे दिन नंदन आया। उसको दीक्षितर ने मंदिर के अन्दर जाने की अनुमती दी। नंदन अन्दर जाकर नटराज मूर्ती के सामने नटराज के दर्शन किये।



# बडी हुई सूण्ड

(Shri V. Thangasami—Physical Education Teacher.)

एक गांव में एक हाथो था। वह सब जानवरों से सवाल करता था। वह पहले मगर को देखना चाहता था। रास्ते में पहले पहल ऊटंको देखा। हाथो ने पूछा "तुम्हारा गर्दन क्यों लम्बा है?" ऊटं ने पूछा "तुम्हारी नाक क्यों छोटी है?" फिर हाथो मगर को देख ने के लिए समुद्र के किनारे पर गया। वहां खोखले से एक नाग निकला। हाथो ने पूछा कि मगर कैसा होगा? नाग ने कहा कि किनारे के पास एक मगर है। हाथो वहां गया; हाथो को नहीं मालूम था कि वह जिसको देख रहा है, वही मगर है। मगर से ही हाथो ने पूछा वह "मगर कैसा होगा?" मगर ने जवाब दिया "पास आओ बताऊंगा।" ऐसा कहकर हाथी की सूण्ड को खींचते हुए पानी में डूब ने लगा। हाथी को दर्द हुआ। तब नाग ने कहा "तुम सूण्ड को ऊपर खींचो" तुम बच जाओगे। हाथो ने ऐसा ही किया। कुछ देर तक दोनों में लडाई होती रही। फिर मगर ने थक कर सूण्ड को छोड दिया जब सूण्ड बाहर आया, तब हाथी ने देखा कि उसकी सूण्ड बहुत लम्बी हो गयी है।

# GEMS AMONG OUR BOYS 1957--58 மாணவ மணிகள் (ஆண்கள் பகுதி)



Best in Handicrafts – சிறந்த கைத்தொழிலாளர்கள்



Best Orators – சிறந்த பேச்சாளர்கள்



Best Athletes – சிறந்த விளையாட்டுக்காரர்கள்

# GEMS AMONG OUR BOYS 1957--58 மாணவ மணிகள் (ஆண்கள் பகுதி)



Class Librarians – நூல்நிலைய காப்பாளர்கள்



Best Artists – சிறந்த ஓவியர்கள்



Best Singers – சிறந்த பாடகர்கள்



Best Actors – சிறந்த நடிகர்கள்

# தவற்றைக் கண்டுபிடி (நிரூபணத்தில்)

( Shri. S. Thiagarajan B. A., B. L. Mathematics Master )

1. கற்பிதக் கொள்கை :




ABC ஒரு முக்கோணம்

AB > AC.

நிரூபிக்க: AB = AC

அமைப்பு: ∠BACயின் இரு சம வெட்டிவரை. அது BCஐ Dயில் வெட்டட்டும். ADயைச்சேர். Dயிலிருந்து AB, ACகளுக்கு DE, DF என்ற குத்துக்கோடுகளை வரை.

நிரூபணம்: △ AED, AFDகளில்

∴ { AD — பொது.
∠EAD = ∠FAD (அமைப்பு)
∠AED = ∠AFD (அமைப்பு)

∴ △ AED ≡ △ AFD (ஒரு பக்கம் இரு கோணங்கள்)

∴ AE = AF —1

DE = DE

செங்கோண முக்கோணங்கள் BED, CED களில்

∴ { கர்ணம் BD = கர்ணம் DC (∵AD இரு சமவெட்டி)
DE = DF (நிரூபித்தது)

△ BED ≡ △ DCF (கர்ணம், பக்கம் சமம்)

∴ BE = CF ... ... 2

AE + BE = DF + CF

∴ AB = AC.

2. நிரூபி: 16 = 36

இரு பக்கங்களையும் ஒரே எண்ணால் பெருக்கினாலும் வகுத்தாலும், சமன் பாட்டின் மதிப்பு மாறாது.

$$\begin{aligned}
16\times 8 &= 36\times 8\\
16\times 8\ (16-12) &= 36\times 8\ (16-12)\\
16\times 16\times 8-12\times 8\times 16 &= 36\times 8\times 16-12\times 36\times 8\\
16\times 16\times 8+12\times 36\times 8 &= 36\times 8\times 16+12\times 8\times 16\\
5104\ (a-b) &= 5904\ (a-b)\ (\text{இதில் } a=b)\\
5104a--5104b &= 5904a-5904b\\
5104a+5904b &= 5904a+5104b\\
5104a+5904a &= 5904a+5104a\quad (\because a=b)\\
11008\ a &= 11008\ a\quad \text{இது உண்மை}\\
\therefore 16 &= 36.
\end{aligned}$$

3. ஒரு எண்ணை 9 வகுக்குமானால் மீதி என்ன? (விடைகள் பின்பக்கம் பார்க்க)



# பழமொழிகள்
# समान कहावतें।
# Parallel Proverbs

1. அகத்தின் அழகு முகத்திலே.

मुख को देखो मन को जानो।

The face is the index of the mind.

2. அலை மோதும் போதே தலை முழுகு. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.

लोहे को पीठो जब वह गरम हो।

Strike while the iron is hot. Make hay while the sun shines.

3. அளவிற்கு மிஞ்சினால் அமிருதமும் விஷம்.

अमृत भी अधिक हो तो आलकाल बन जाय।

Too much of anything is good for nothing.

4. யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே. கேடு வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே.

पहले आती छाया बाद को आती काया।

Coming events east their shadows before.

5. எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றினாற் போல.

जलती आग में तेल डालना।

To add fuel to fire.

6. ஆழமறியாமல் காலை விடாதே.

गहराई जानकर कदम बढा ओ।

Look before you leap.

7. கல்வி கரையில, கற்பவர் நாள் சில.

इलम बहुत है और उम्र कम है।

Art is long, and life is short.

8. கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்காதே.

गाय मारकर चमडे का दान मत करना।

Do not rob seter to pay Paul

9. கழுதை அறியுமா கற்பூர வாசனை.

सुअर के आगे मोतियाँ फेंकना।

Casting pearls before swine.

10. குறை குடம் ததும்பும், நிறை குடம் ததும்பாது.

खाली वर्तन आवाज़ मचाता।

Empty vessals make the most sound.

11. சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்.

कम बता ओ ज्याता समझा ओ।

Brevity is the soul of wit.

12. நாமொன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்.

हम कुछ सोचते ईश्वर कुछ और सोचना।

Man proposes God disposes.

---

(முன்பக்கத்திலுள்ள 'தவற்றைக் கண்டுபிடி' கேள்விகளுக்கு விடைகள்)

1வது விடை: கர்ணம் BD = கர்ணம் DC ($\because$ AD இருசம வெட்டி) AD இருசம வெட்டியானால், அது BCயை இருசம கூறாகப்பிரிக்க வேண்டுமென்பது அவசியமில்லை.

2வது விடை: $5104(a-b) = 5904(a-b)$ $a-b=0$ ($\because a=b$) எனவே இது தவறு.

3வது விடை: 0. வகுக்குமானால் எப்படி மீதியிருக்கும்!

# இரண்டு பர்லாங்

M. G. SAMY.

எங்கள் ஆசிரியர் சங்கத்தின் கொச்சி, திருவனந்தபுரம் இன்பச் செலவிலே குறுக்கிட்டு எங்கள் உயிரைக் குற்றுயிராகச்செய்த வார்த்தைகள் "இரண்டு பர்லாங்". அதிலும் இந்த "இரண்டு" என்ற வார்த்தை எங்கள் இன்பச் செலவிலே எங்களுக்கு சோதனையை ஏற்படுத்துவதற்காக தோன்றியதாக இருக்குமோ என்று நினைக்கிறேன். திண்டுக்கல்லிலே "இரண்டு பர்லாங்" எனக் கேட்ட வார்த்தை, கோயம்புத்தூரிலே 'டூ பர்லாங்க்ஸ்' Two Furlongs என ஆங்கிலத்திலே ஒலிக்க ஆரம்பித்து எர்ணாகுளம், கொல்லத்திலே 'ரண்ட பர்லாங்க' என மலையாளத்திலே எதிரொலிக்க ஆரம்பித்தன. அந்த ஒலிகள் எங்கள் காதுகளில்விழுந்தவுடனே எங்கள் கால்கள் எங்களை கெஞ்ச ஆரம்பிக்கும் எங்களை அறியாமலே அதேயிடத்தில் நிலையாக நின்றுவிடத் துடிக்கும். மூன்று மைல் என்று சொன்னாலும் தயங்காது முன்னேறும் கால்கள் இரண்டு பர்லாங் என்று கேட்டவுடனே பின்னோக்கி நடக்க ஆரம்பிக்கும். காரணம் அந்த வார்த்தைகளினால் எங்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றம், அலைச்சல், காலச்செலவு இன்னும் எவ்வளவோ இன்னல்கள்தான். ஆனால் ஒரு ஆச்சரியம் என்னவென்றால் நாங்கள் யாரைப்பார்த்து எந்த இடத்தை, எதைக் கேட்டாலும் இந்த இரண்டு பர்லாங் அல்லது இரண்டு என்ற வார்த்தைகளைத் தவிர வேறு எதுவும் வெளிவராது. அந்த வார்த்தைகளெல்லாம் உண்மையாக இருந்திருந்தால் ஒரு தொல்லையுமில்லை, இவ்வளவு சொல்லவேண்டிய அவசியமுமில்லை.



இந்த இரண்டு பர்லாங் வரலாறுகளை அறிய வேண்டுமென்றால் எங்கள் உல்லாசப் பிரயாணத்தின் நிகழ்ச்சிகளுக்குள்ளே புகுந்து சென்றால் தான் கொஞ்சம் ரஸிக்க முடியுமென நினைக்கிறேன். 10—1—1958ல் மாலை 6½ மணிக்கு 24 ஆசிரியர்களும் எங்கள் உல்லாசப் பிரயாணத்தின் முதல் படியாகிய திண்டுக்கல்லில் கால்வைத்தோம். "கோயம்புத்தூர் செல்லும் ரயில் 11 மணிக்குத்தான். அதுவரையில் ஆசிரியர்கள் தங்களுக்குப் பிரியமான இடங்களுக்குச் சென்று வரலாம்" என்று எங்கள் தலைவரிடமிருந்து அறிவிப்பு வந்தது. பிரியமான இடத்தை யோசித்தோம்— தியேட்டர். அதுதான் எங்கள் முன்னால் வந்து நின்றது. "என்னடா, இவர்கள் உல்லாச பிரயாணத்தில் பார்க்கவேண்டிய இடம் முதலிலேயே தியேட்டர் தானா ஆரம்பிக்க வேண்டும்" என்று முகத்தை சுழிக்க வேண்டாம். திண்டுக்கல் எங்களில் சிலர்க்குப் புதியதுமல்ல அங்குள்ள இடங்கள் நாங்கள் பார்க்காதவையல்ல. நாங்கள் படம் பார்த்துவிட்டு வெளியே வந்தோம். மணி 10. எல்லோருக்கும் பசியிருந்தாலும் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றுவிடலாமென்று ஒருவரை அணுகி "ரயில்வே ஸ்டேஷன் எவ்வளவு தூரத்திலிருக்கிறது" என்று கேட்டோம். "இதோ நேராகச்சென்று வலதுபக்கம் திரும்பிச்சென்றால் ரயில்வே ஸ்டேஷன் தான். 'இரண்டு பர்லாங்' கிலுள்ளது" என்றார். 6 நாட்களுக்குரிய ஆடைகள் அன்றாடத்தேவைப் பொருள்கள் அடங்கிய பெட்டி எவ்வளவு கனமிருக்குமென்று நினைத்துப் பாருங்கள். எங்களுக்கோ பசி: சமாளித்துக் கொண்டு கைமாற்றி கைகளிலேயும், தோள்களிலேயும் வைத்து தூக்கிச்சென்றோம். சொன்ன திருப்பத்தையும் கடந்துவிட்டோம். நடந்துகொண்டே இருந்தோம். ஸ்டேஷன் வந்தபாடில்லை. மணியை பார்த்தோம் 10½. 'என்னடா ½ மணிநேரமாக

இரண்டு பர்லாங்கை கடக்கத்தான் நடந்துகொண்டிருக்கிறோமா' என்ற சந்தேகத்தோடு பக்கத்தில்வந்த ஒருவரிடம் "ஐயா ரயில்வே ஸ்டேஷன் இன்னும் எவ்வளவு தூரத்திலுள்ளது"என்றோம் ரயில்வே ஸ்டேஷன் தானே இதோ "இரண்டு பர்லாங்தான். இதே ரோட்டில் செல்லுங்கள்" என்றார். இரண்டு பர்லாங், இன்னும் இரண்டு பர்லாங். இனி இந்த இரண்டு பர்லாங்கை சாப்பாடில்லாமல் கடக்க முடியாது. முதலில் சாப்பிட்டுக் கொள்ளலாம் என்ற முடிவோடு ஹோட்டலினுள் நுழைந்தோம். கடைசியில் ஒருவாறாக ஸ்டேஷனை அடைந்தோம்.

திண்டுக்கல்லில் படுக்கைவிரித்தோம். பழனி அருகே தூங்க ஆரம்பித்தோம். கோயம்புத்தூரிலே எழுந்தோம். ஸ்டேஷனை விட்டு வெளியே வந்து ஒருவரிடம் "மணி உயர் நிலைப் பள்ளி எங்கே உள்ளது?" என்று வினவினோம். அவர் சில வளைவுகளையும், திருப்பங்களையும், காட்டி அதன் வழியாகச் சென்றால் "இரண்டு பர்லாங்" தான் என்றார். "இரண்டு பர்லாங்" அவர் சொன்ன வளைவுகளையும், திருப்பங்களையும் மட்டும் கணக்குப் போட்டால் குறைந்தது 3மைல் ஆகிலும் ஆகும். முன்பே அனுபவப்பட்டவர்கள் இந்த இரண்டு பர்லாங்கில் மறுபேச்சு பேசாமல் டவுன் பஸ்ஸில் ஏறிவிட்டோம். நாங்கள் நினைத்தது வீண்போகவில்லை. இரண்டு என்ற வார்த்தை பன்னிரெண்டு என்று உயர்ந்த பிற்பாடுதான் டிரைவர் எங்களைக் கீழே இறக்கிவிட்டார்.

தென்னிந்தியாவின் தொழில் கேந்திரமான கோயம்புத்தூரிலுள்ள முக்கியமான தொழில் ஸ்தாபனமாகிய "Ganapathi Textile Works"ஸை நோக்கி கோயம்புத்தூர் நண்பர் ஒருவர் வழிகாட்ட நடந்து கொண்டிருந்தோம். எங்கள் கால்களும் வலியெடுக்க ஆரம்பித்து விட்டன. ஆதவன் எங்கள் நாவிலுள்ள நீரை எல்லாம் நீராவியாக மாற்றி விட்டான். எங்கள் ரத்தத்திலுள்ள நீரெல்லாம் உடம்பிலே வழிந்தோட ஆரம்பித்தது. ஆவலை அடக்க முடியாத நிலை வந்தவுடன் கோயம்புத்தூர் நண்பரிடம் மெதுவாக அணுகி இன்னும் எவ்வளவு தூரமிருக்கிறது நாம் போகவேண்டிய இடம்?" என்று பயத்துடன் கேட்டோம். "இரண்டு பர்லாங்" என்ற வார்த்தை வெளிவரக்கூடாது என்று பயந்தோமோ அந்த வார்த்தையை அவர் அழுத்தம் திருத்தமாகச் சொன்னார். ஆனாலும் எங்களுக்கு ஒரு நம்பிக்கை. நம் கூடவே வந்துகொண்டிருக்கிறார். உண்மையாகத் தானிருக்கும், என்ற மன அமைதியோடு நடந்தோம், நடந்து கொண்டே இருந்தோம். நான்குபர்லாங்கும் கடந்துவிட்டது இன்னும் நாங்கள் நாடிவந்த Factory கண்ணுக்கே தெரியவில்லை. நடக்கமுடியாமல் எப்பொழும் ஒரு பர்லாங்கிற்கு பின்னாலேயே வந்து கொண்டிருக்கும் ஆசிரியர்களைக் கேலி பண்ணி பேசிய நண்பர்களெல்லாம் இப்பொழுது அவர்களுக்கும் பின்னாலே ஒரு பர்லாங் தூரத்தில் வந்து கொண்டிருந்தார்கள். மறுபடியும் அவரை அணுகினோம் "ஸார் இன்னும்......" நாங்கள் முடிக்கவில்லை. அவரேபேச ஆரம்பித்து விட்டார். "என்ன ஸார் அதற்குள் அசந்து விட்டீர்கள். கொஞ்சம் வேகமாக நடந்தால் போதும்-இரண்டு பர்லாங்தானே" என்றார். எங்களுக்குத் தூக்கி வாரிப் போட்டது. கொஞ்ச நேரத்திற்கு முன்பு தான் இரண்டு பர்லாங் என்று இவரே சொன்னார். அதற்குள் அதை மறந்து விட்டாரோ? அல்லது நாங்கள் தான் அவர் அப்படிச் சொல்லியிருப்பார் என்று நினைத்துக்கொண்டோமோ! வேறுவழி இல்லை. அவர் கூடவே நடந்து கொண்டிருந்தோம். கொஞ்சதூரம் சென்று மற்றொருவர் சென்று வினவினர். அதே பதில்தான். "இரண்டு பர்லாங்" மறுபடியும் நடந்தோம்—கேட்டோம்—அதே பதில்தான். ஒருவகையாக Factoryயும் வந்து சேர்ந்தது. எங்கள் தாகம் Factoryஐ சுற்றிப்பார்ப்பதில் செல்லவில்லை. உட்காருவதற்கு இடங்களைத் தேடுவதில் சென்றது.

தொழிற் கூடத்தினுள் நுழைந்தவுடனே எங்களை ஆச்சரியத்தில் மூழ்கவைத்தன அங்கே நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிள்கள் ஆயிரக் கணக்கான சைக்கிள்கள் எந்தப்பக்கம் திரும்பினாலும் நின்றுகொண்டிருந்தன. தொழிற் கூடத்தைச்சுற்றிக் காண்பிப்பதற்காக நமது ஆசிரியர்

திரு. சங்கர ஐயரின் குமாரர் ஒருவர் (அங்கு வேலை பார்ப்பவர்) வந்தார். அவரிடம் "ஸார் நாங்கள் இரும்பு Factory யைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறோம். தங்கள் தம்பி எங்களை தவறுதலாக சைக்கிள் உற்பத்தி சாலைக்கு அழைத்து வந்து விட்டாரே" என்றோம். அவர் சிரித்துக் கொண்டே "இந்த ஆயிரக்கணக்கான சைக்கிள்கள் இங்கு வேலை செய்யும் தொழிலாளர்கள் கொண்டுவந்திருப்பவை" என்றார். சைக்கிள்களிலே மட்டும் இவ்வளவு தொழிலாளர்கள் வந்திருந்தால் கால்நடையாக எவ்வளவு தொழிலாளர்கள் வந்திருக்கவேண்டும். இவ்வளவு பேருக்கும் வேலைகொடுத்து சமாளிக்கும் இந்த தொழிற்கூடம் எவ்வளவு பெரிதாக இருக்கவேண்டும் என்று நான் எண்ணிய எண்ணம் எவ்வளவு உண்மையானது என்பது உள்ளே சென்றவுடன் தான் தெரிந்தது. அங்கே இரும்பு துரும்பாக மதிக்கப்பட்டது. வேண்டிய அளவு நீட்டப்பட்டது, வெட்டப்பட்டது, பென்சிலைப்போல் சீவப்பட்டது. குழம்புபோல் காய்ச்சி வேண்டிய உருவங்களுக்காக ஊற்றப்பட்டது. இவைகளை எல்லாம் இன்னும் விளக்கிச் சொல்வதற்கு வார்த்தைகள் தெரியாமல் என் வாய் அடைத்தே விட்டது. அங்குள்ள பிரம்மாண்டமான இயந்திரங்கள், அதை இயக்கும்,-பெருமையாகச் சொல்லிக் கொள்கிறேன்—இந்தியத் தொழில் நிபுணர்கள், சூழ்ந்திருக்கும் அபாயங்களையும் மதியாமல் அவர்கள் கைகள் வேலை செய்யும் விரைவு இவைகளையெல்லாம் எண்ணி என் உள்ளம் பூரித்துப் போனது. நம் நாட்டு முன்னேற்றத்தின் படிகள் விஞ்ஞானிகள் அங்கு தயாராவதைக் கண்டு, நாம் பெற்ற சுதந்திரத்தை வளர்த்து நம் நாட்டை உலகில் ஒரு தலைசிறந்த நாடாக உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்ற நினைவுதான் அப்பொழுது என் உள்ளத்திலே எழுந்தது. அங்குள்ள இயந்திரங்களை விளக்கிச் சொன்னவர் பெருமையாகச் சொல்லிக்கொண்டார் "ஆசிரியர்களாகிய உங்களுக்கு விளக்கிச் சொல்வது வருங்கால நம் நாட்டின் பிரஜைகளுக்கு உங்கள் மூலமாகச் சொல்வதைப் போன்றது" என்றார்.

Factory ஐயைப் பார்த்து முடித்துவிட்டு வெளியே வந்தோம். எங்களை Factory அழைத்துவந்த நண்பரிடம் விடை பெற்றுக்கொண்டு கோவை தொழில் நிபுணர் திரு. G. D. நாயுடு அவர்களின் தொழிற் கூடத்திற்குப் பஸ் ஏறினோம். பஸ் ஏறப் போகும்பொழுது நாங்கள் அந்த நண்பரிடம் "எங்களை இரண்டு பர்லாங், இரண்டு பர்லாங் என்று சொல்லி ஏன் ஸார் இவ்வளவு தூரம் இழுத்தடித்தீர்கள்? கோயம்புத்தூருக்கு நாங்கள் எப்பொழுது வருவோம் என்று காத்திருந்தீர்களா?" என்று சிரித்துக்கொண்டே கேட்டோம். "அதெல்லாம் ஒன்றுமில்லை ஸார். இங்கு வருவதற்கு டவுன் பஸ் இல்லை. உண்மையான தூரத்தைச் சொன்னால் இங்கே வரவே வேண்டாமெனச் சொல்லியிருப்பீர்கள் இந்த Factory யைப் பார்க்கும் அரிய சந்தர்ப்பத்தை இழந்திருப்பீர்கள்" என்றார்.

கோபால் பார்க் (நாயுடுஅவர்களின் தொழிற்கூடம்) கினுள் செல்ல அனுமதிக்காக எங்கள் தலைவர் சென்றிருந்தார். நாங்கள் வாசலிலே உட்கார்ந்திருந்தோம். Textile Factory யிலேயே தண்ணீர் கேட்ட நண்பர் இங்கே அதற்காக தன் கண்களை அலைய விட்டுக்கொண்டு என் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தார். அவர் கண்களை அங்கே மாட்டியிருந்த ஒரு அறிவிப்புப் பலகையைப் பார்க்கும்படி திருப்பினேன். 'என்னைத் தேடி வருபவர்களுக்கு ஒரு கிளாஸ் தண்ணீர்கூட கொடுக்க முடியாத நிலையிலுள்ளேன்.' படித்துப் பார்த்த நண்பரின் முகம் 'பாவம்' பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அனுமதி கிடைத்துவிட்டதால் எல்லோரும் எழுந்து சென்றோம். 'ஒரு கிளாஸ் தண்ணீர் கொடுக்க முடியாதவரிடம் பார்ப்பதற்கு என்ன இருக்கப் போகிறது?' என்ற சந்தேகம் எங்கள் மனதின் ஒரு ஓரத்தில் இருக்கத்தான் செய்தது. ஆனால் உள்ளே நாங்கள் வைத்த ஒவ்வொரு எட்டிலும் G. D. நாயுடு ஒரு தொழில் விஞ்ஞானிதான் என்பதை எங்கள் மனம் உணர ஆரம்பித்தது.

ரயிலின் "கட, கட" தாலாட்டிலே தூங்கிக் கொண்டு வந்த என்னை யாரோ திட்டிக்கொண்டிருப்பது தெரியவே மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தேன். திட்டவில்லை பக்கத்தில் உட்கார்ந்திருந்தவரோடு ஒருவர் மலையாளத்திலே பேசிக்கொண்டிருந்தார். அவரிடம் "என்ன

குளத்திற்கு இன்னும் எத்தனை ஸ்டேஷன்களைக் கடக்கவேண்டுமெனக் கேட்டேன். 'இரண்டு' என்றார், அவ்வளவுதான் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தேன். பெட்டி படுக்கைகளைத் தூக்கிக்கொண்டு அடுத்த பக்கமிருந்த ஆசிரியர்களிடம் சென்றேன். அவர்கள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். வெளியே எட்டிப் பார்த்தேன். ஒரே இருட்டு. ஒன்று, இரண்டு, மூன்று என்று ஸ்டேஷன்கள் பின் நோக்கிச் சென்று கொண்டே இருந்தன. தூக்கவெறியோடு அவரிடம் சென்றேன்." என்ன ஸார் தப்பிதமாகச் சொல்லிவிட்டீர்களே" என்றேன். அவர் ஒன்றும் தெரியாமல் விழித்துக்கொண்டு ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்தார். சந்தேகத்தோடு மறுபடியும் ஆங்கிலத்திலே கேட்டேன். தான் ஸ்டேஷனைச் சொல்லவில்லை யென்றும், மணி இரண்டாகிவிட்டதை சொன்னதாகவும் சொல்லி தன் கைக் கடிகாரத்தைக் காண்பித்தார். "உங்களிடம் போய் கேட்டேனே நான் ஒரு முட்டாள்" என்றேன் தூக்கம் கலைந்துபோய்விட்டதே என்ற கோபத்தில். அதற்கும் அவர் ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்தார். சரிதான் ஆசாமிக்கு தமிழில் "அ" னு, "ஆ" வன்னு கூட தெரியாது போலிருக்கிறது என்று நினைத்துக்கொண்டு படுக்கையை விரிப்பதற்காக முந்திய இடத்தை நோக்கினேன். அங்கே அவரோடு பேசிக்கொண்டு வந்த நண்பர் ஹாய்யாகத் தூங்கிக்கொண்டிருந்தார். என்னையறியாமலே என் கை தலையைப் பிடித்துக் கொண்டது.

எர்ணாக்குளத்திலிருந்து கொச்சிக்கு Steam Launch-லே சென்றோம். துறைமுகத்தில் நின்றுகொண்டிருந்த ஒரு ஜப்பான் கப்பலினுள் சென்று பார்க்க அனுமதி கிடைத்தது. மறுநாள் நாங்கள் இரு பிரிவாகப் பிரிந்து ஒரு பகுதியினர் எர்ணாக்குளத்திலுள்ள Burmah Shell கம்பேனிக்கும் மற்றொரு பகுதியினர் இந்திய கடற்படையைச் சேர்ந்த கப்பலைப் பார்ப்பதற்கும் சென்றுவிட்டனர். Burmah Shell கம்பேனியில் மண்ணெண்ணெய் டின் பகுதி முக்கியமானது. மண்ணை வெட்டுவதிலிருந்து எண்ணை அடைத்து மூடுவதுவரை எல்லாம் இயந்திரங்களே செய்கின்றன.

கோட்டயத்திலிருந்து கொல்லத்திற்கு பிரயாணம் செய்ததை என்றும் எங்களால் மறக்க முடியாது. அந்த ரயில் பாதை திறந்து 6-வது நாளில் நாங்கள் அந்தவழியாகச் சென்றோம். சில இடங்களில் வேலை நடந்துகொண்டே யிருந்தது. பெரிய பெரிய மண் மலைகளை கணவாய்களாக வெட்டி அதன் நடுவே ரயில் போகின்றது. அரசாங்கம் அதைப் போடுவதற்கு எடுத்துக் கொண்ட சிரமங்களை வழி நெடுக பார்த்துக் கொண்டே செல்லலாம். இன்னொரு விஷயம் என்னவென்றால் ரயிலைப் பார்க்காத பாமர மக்கள் வெகு தூரத்திலிருந்துகூட தங்கள் குழந்தைகளை அழைத்துக்கொண்டு வந்து ரயிலைப் பார்ப்பதற்காக வழி நெடுக பாதையின் இரு மருங்கிலும் காத்திருந்த காட்சிதான். ரயில் வந்தவுடன் அந்த சிறுவர்களும் சிறுமியர்களும் ஆனந்தத்தினால் கூச்சலிடுவதையும், அந்த ஆனந்த வெள்ளத்திலே நாமும் சிக்கி நம்மையறியாமலே நம் கைகள் அவர்களை நோக்கி "டா, டா" சொல்வதையும் நினைத்தால் இன்னுமொரு முறை அவ் வழியே செல்ல நம் மனம் ஏங்கத்தான் செய்கிறது. ஆனால் அந்த வரவேற்பு இனி கிடைக்குமா என்பது சந்தேகம்தான்.

கொல்லத்தில், நாங்கள் ரயிலை விட்டு கீழே இறங்கும்பொழுது இரவு 9-30மணி. பசி எங்களை ஹோட்டலினுள் பிடரியைப் பிடித்துத் தள்ளியது. அந்தசமயம் பார்த்து ஒருவர் வந்து சேர்ந்தார் 'நல்ல ஹோட்டலாகக் காண்பிக்கிறேன், சாப்பிட்டதும் பக்கத்திலேயேயிருக்கும் தியேட்டருக்குச் சென்று படம் பார்க்கலா' மென்று நம்பிப் பின் சென்றோம். பிறகுதான் அவர் திருவாய் மலர்ந்தருளியது ஹோட்டல் 2 பர்லாங்கென்று. என்ன செய்வது, திரும்பிச் செல்லும் வரையிலும் அந்த ஹோட்டலில் சாப்பாடு இருக்குமோ இல்லையோ ! அவருடனேயே நடந்தோம். கால்கள் தள்ளாடின. வயிறுகள் கெஞ்சின. அவர் சொன்ன இரண்டு பர்லாங்தான் கழியமாட்டேனென்றது. அவரும் அந்த இரண்டு பர்லாங் பல்லவியை மறக்காமல் சொல்லிக்கொண்டே வந்தார். நடக்கமுடியா நிலை வந்தது. ஆனால் அதற்குள் அவர் ஹோட்டலைக் காண்பித்துவிட்டார். எங்கள் எல்லோருக்கும்

அங்கே உட்கார இடம் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற சந்தேகத்துடன் உள்ளே நுழைந்தோம். "சாப்பாடு தீர்ந்துவிட்டது" என்ற வார்த்தைதான் முதலிலே எங்கள் காதிலே விழுந்தது. எல்லோர் கண்களும் கோபத்தினால் சிவந்தன. இரண்டுபர்லாங் ஆசாமிதான் சாப்பாட்டிற்கு வழி என்ற முடிவோடு அவர் பக்கம் திரும்பினோம். அங்கே அவரைக் காணோம். சமயமறிந்து நழுவிவிட்டார். கடைசியாக ஹோட்டல்காரரிடம் இருப்பதைக் கொண்டுவந்து வைக்கச் சொன்னோம். எங்கள் இலைகளிலே காய்ந்த இட்லியும், ஆறிப்போன தோசையும் வந்து விழுந்தன. மறுநாள் மூன்று டாக்ஸிகளை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு, ஓடு செய்யும் தொழிற்சாலை, முந்திரித் தொழிற்சாலை, தீபஸ்தம்பம் முதலியவை பார்த்து வந்தோம்.

அடுத்தநாளும் மூன்று டாக்ஸிகள் எங்களை சுமந்துகொண்டு திருவனந்தபுரத்திலே ரப்பர் தொழிற்சாலை, கடற்கரை, மீன் வளர்க்குமிடம், மிருககாட்சி சாலை, பொருட்காட்சி சாலை, சித்திரக் கூடம் முதலிய இடங்களுக்குச் சென்று வந்தன. கன்னியாகுமரி போக பிரியமுள்ளவர்களுக்காக இரண்டு டாக்ஸி அமர்த்தப் போகிறேனெனச் சொன்னார்கள். இரண்டு என்றவுடன் நம்பிக்கை இழந்துவிட்டோம். அதேபோல் சில அசந்தர்ப்பங்களின் காரணமாக அங்கு செல்லவும் முடியவில்லை. அடுத்தபடியாக Mery Land Studio வுக்கு போக பிரியமுள்ளவர்களுக்காக இரண்டு டாக்ஸி அமர்த்தியிருக்கிறோம் என அழைத்துச் சென்றார்கள். போகும்பொழுதே சந்தேகம், 'இரண்டு' டாக்ஸி அமர்த்தியிருக்கிறார்கள். ஏறி உட்கார்ந்தால்தான் நிச்சயம். எல்லோரும் டாக்ஸி ஏறி உட்கார்ந்தோம். ஒருவர் மீதப்பட்டு விட்டார். டாக்ஸிகாரன் அதற்குமேல் ஏற்ற மறுத்துவிட்டான். வேறு என்ன செய்வது? இரண்டு டாக்ஸி மூன்றானவுடன்தான் Studio போய்ச் சேர்ந்தோம். "மரியகுட்டி" என்ற படத்திற்கான படப்பிடிப்பு பார்த்தோம். பிரபல மலையாள நடிகை 'குமாரி' என்பவரை கண்டு சிறிது நேரம் அளவளாவினோம். அவரிடம் கையெழுத்து வாங்குவதற்காக பேப்பரைப் பார்த்தோம் கிடைக்கவில்லை. அந்த அவசரத்திலே பையிலிருந்த 'இரண்டு' ரூபாய் நோட்டை எடுத்தேன். கெட்டகாலம் அந்த இரண்டு அந்தச் சமயத்தில் கழுத்தை அறுக்காமல் அறுத்தது. அந்த நோட்டிலிருந்த வெள்ளைப்பகுதிமுழுவதும் கிழிந்துபோயிருந்தது. வேறொரு நண்பரிடமிருந்த 1ரூபாய் நோட்டை வாங்கி கையெழுத்து வாங்கிக்கொண்டோம்.

எங்களோடு பிரயாணம் செய்த கேரள பிரயாணிகளில் படித்தவர்கள், படிக்காதவர்கள், மற்றும் டாக்ஸி டிரைவர்கள். ரிக்ஷாக்காரர்கள் எல்லோரும் பிற ராஜ்யங்களின் அரசியல் விஷயங்களை அறிந்துகொள்வதில் ஆர்வமும், தம் ராஜ்ஜியத்து அரசியலில் கவனமும் வைத்திருக்கிறார்கள்

எங்கள் 5நாட்கள் பிரயாணத்தை முடித்துக் கொண்டு 16-1-58ம் தேதி திருவனந்தபுரத்திலிருந்து புறப்பட்டோம். இயற்கையின் எழிலைக் காணவேண்டுமென்றால் எங்கள் இன்பச்செலவின் இப் பகுதிக்குத்தான் வரவேண்டும். நீதி தேவனால் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளைப்போல் எங்களை ஒரு கரும்பூதம் இழுத்துக்கொண்டு செல்ல மற்றொரு பூதம் தள்ளிக்கொண்டு சென்றது. நான்கு முறை கரிய இருளரக்கனின் வாயினுள் இழுத்துச் சென்றன. குற்றம் புரியா குணசீலர்களானதால் எல்லோரும் மகிழ்ச்சியுடன் வெளியே வந்தோம். எங்களை வழி நெடுக தலை அசைத்து வரவேற்ற காட்டு மலர்கள்—அவைகளின் மணங்களை அள்ளிவரும் காற்று—இன்ப நீரோடைகளின் சலசலப்பு-பாடும் பறவைகளின் கலகலப்பு—இவைகளினூடே இயற்கை அன்னையின் மடியிலே புகுந்து விளையாடும் குழந்தையாக எங்கள் ரயில் கத்திக்கொண்டு சென்றது.

வத்தலக்குண்டு தாண்டி பஸ்ஸிலே, கடந்து சென்ற இந்த இன்பநினைவுகளில் மிதந்துகொண்டு வந்த என்மனதிலே 'இரண்டு பர்லாங்', 'இரண்டு' என்ற வார்த்தைகளினால் பெற்ற துன்ப ரேகைகளும் படர ஆரம்பித்தது. ஆரம்பத்திலிருந்து கடைசிவரை நாங்கள் கேட்ட ஒவ்வொருவரும் அந்தப் பதில்களையே சொல்லிவந்ததை எண்ணினேன். கடைசி தடவையாக இன்னுமொரு முறை பரிசோதித்துவிடுவோமென்ற முடிவோடு பக்கத்திலிருந்தவரிடம் நெருங்கி உட்கார்ந்தேன். இதுவரை தெரியாமலே கேட்டு வந்தோம். இப்பொழுது தெரிந்துகொண்டே கேட்கப் போகிறோம் என்று மனதில் நினைத்துக்கொண்டே "ஸார் பட்டிவீரன்பட்டி இன்னும் எவ்வளவு தூரத்திலிருக்கிறது" என்றேன். "இரண்டு பர்லாங்!!!"

# CHILD VERSES

( D. J. SIROMANI RAJ. )

## I. LAIKA, THE SPUTNIKITE

LAIKA, Laika, Sputnikite!
Shooting like a meteorite!
Sent up higher than a kite,
Laika, Laika, Sputnikite!

Laika, Laika, Sputnikite!
Wished you be a 'stellarite?'
Earned you there a civil right?
Laika, Laika, Sputnikite!

Laika, Laika, Sputnikite!
Why not you be canonized,
'Cause you are so sacrificed?
Laika, Laika, Sputnikite!

## II. SPUTNICK, THE BABY MOON

Baby Moon! Baby Moon! Whither art thou bound?
I'm bound for the spaces to traverse around.

Baby Moon! Baby Moon! What do you do there?
I record the motions in the ionosphere.

Baby Moon! Baby moon! What have you seen?
I have seen the stars, and the space in between.

Baby Moon! Baby Moon! May I come into your hold?
Oh yes, by all means, if you are bold!

# GEMS AMONG OUR GIRLS 1957--58 மாணவ மணிகள் (பெண்கள் பகுதி)



Best Singers – சிறந்த பாடகிகள்



Best Actresses – சிறந்த நடிகைகள்



Best Dancers – சிறந்த நாட்டியமணிகள்

# GEMS AMONG OUR GIRLS 1957--58 மாணவ மணிகள் (பெண்கள் பகுதி)



Best Speakers – சிறந்த பேச்சாளர்கள்



Best Artists – சிறந்த ஓவியர்கள்



Best Athletes – சிறந்த விளையாட்டுக்காரர்கள்

# MILESTONES FROM MEMORY

*(Important events*—**January 1957 to December 1957**)

16—1—57 School reopens with the flag hoisting ceremony. Headmaster gave New Year Greetings to the Staff and Pupils in the Assembly.

17—1—57 The teachers' meeting for the year was inaugurated by Shri A. Venkatasamy B. A., L. T., Headmaster, Basic Training School, Batlagundu. Dr. H. G. Schaeffer M. A., B. D., Ph. D., Educational Secretary to the Mission Schools at Renigunta, Andhra State, who accompanied the President delivered a fitting and eloquent lecture, on the duties of an ideal teacher who is faithful to his calling.

18—1—57 Our Masters' Volley Ball team goes to play finals at Thevaram.

19—1—57 The Half Yearly Conference of the Madurai District Teachers' Guild held at Batlagundu. Our manager Shri W. P. A. R. Chandrasekarsn hoisted the flag and delivered the inaugural address. Shri G. Krishnamurthy, teachers' representative in the M. L. C. spoke on the occasion, based on the needs of the teacher. The function was largely attended, and our school was represented by all the available teachers.

20—1—57 Our Masters' Volley Ball team returned with flying colours after winning the trophy for the fourth year in succession in the District Inter Schools Masters' Volley Ball tournament, held by the District Inter Secondary Schools Atheltic Association of Madurai.

26—1—57 Republic Day celebrated in the School. There was a grand gathering of teachers and pupils in front of the flag square. There was variety singing both by the High and Elementary Schools. Our Manager hoisted the flag and delivered the Republic Day Message.

30—1—57 Mahatma Gandhi's death anniversary. The whole school rose up at 11 a. m. and stood silently for two minutes observing silence, praying for world pea ce.

4—2—57 A general meeting of the Literary Societies held. The Headmaster presided. Shri M. Venkata Ratna Pavalar, Ex-Editor of 'Sagala Kala Valli' of Malaya, and Tamil scholar spoke on the 'Ideals of Students'.

14—2—57 Shri Raja Muthiah, a learned but blind man spoke to the School children at 4-30 p. m.

15—2—57 The Assistant District Commissioner for Guides, Mrs. Kamala Samuel visited the school and helped in the improvement of Guiding and Bulbul activities. In the evening she inauguarated the Students' Literary Association for Girls and Junior Boys being, the first meeting for the New Year.

18—2—57 February Mid-Term Test held.

19—2—57

20—2—57 School auditing continues. S. S. L. C. Model Test begins.

21—2—57 School auditing continues.

22—2—57 School auditing continues. Founder's Birthday centenary for the Scouts and Guides (Lord Baden Powell) celebrated at Basic Training School grounds, Batlagundu. Our school cubs and scouts and bulbuls attended the function. Our Headmaster gave a talk on the life and work of Lord Baden Powell.

23—2—57 Girls' C. T. Camp at Kottara Tope. About 100 girls attended the camp, S. S. L. C. Model Test is over the same evening.

26—2—57. Send off to the S. S. L. C. outgoing pupils. Mr A. C. Mills M. Sc., of Batlagundu Presided. A. Duraipandian, S. Karunakaran and P. Thangiah spoke on behalf of the outgoing pupils. Shri S. A. Dorairaj B. Sc., B. T., Shri S. Thomas B. A. and Shri N. Vijayarajan B. Sc, advissd the pupils. The President, Mr Mills (an American Agricultural Missionary) spoke beautifully both in Tamil and English. There were varie ty items. Sweets were distributed. Farewell address was read by A. Arputham Samuel. Vote of Thanks was proposed by the Acting School Pupil Leader, N. Rajasekaran, and our Tamil Pandit, Shri G. Subramanian.

25—3—57 Congratulatory Greetings were accorded to our Manager on his election to the State Assembly of Madras. Pupils cheered and showered flowers. There was a general meeting, in which our Manager addressed the Staff of pupils. (Details in Informative Log Book).

1—4—57 The L. D. S. Anniversary was held under Shri S. Muthu Konar B. A. L. T. Headmaster Board High School, Batlagundu.

16—4—57 School Anniversary & Annual Sports under Shri D. J. G. C. Pandian, Inspector of Central Exise, who distributed the prizes. A large gathering of old boys and elite of the town attended.

17—4—57 The Anniversary of the school was held in the school premises under the presidency of Mr A. C. Thomas B. Sc. (Ag) District Agricultural Officer, Madurai. Nearly 4000 peoples thronged to attend the function.

5—6—57 S. S. L. C. Results annourced. 23 out 36 passed. 64%

10—6—57 School reopens after Summer Vacation. There was flag hoisting cermony at 9 05 a. m. The Headmaster hoisted the flag and gave a message. New admissions were made. Instructions were circulated as to how to engage the classes during the first week of the school. 3 new sections opened.

17—6—57 'Flu' holidays from the afternoon of 17—6—57 to the end of 21—6—57.

28—6—57 Students' Republic formed. N. Rajasekaran (Form VI) was chosen unopposed as the School Pupil Leader, add Maruthamuthu (Form V B) chosen unopposed as the A. S. P. L, In the evening Class Pupil Leaders and Squard leaders, Editors and Artists were elected in each class. Thus the student Republic was formed at 4-80 P. M. the first Parliment for the students was held in which the ministerial cabinet took the oaths of servicc and secrecy. The Headmaster, as the President of the Republio, inaugurated the function. It was grand and solemn.

2—7—57 First Staff councill meeting was held.

8—7—57 Slip tests began from this week.

19—7—57 English study circle held for Forms I to VI.

29—7—57 World Health Day and L. D. S. Inauqural Function celebrated. Shri A. Venkatasamy B.A.L.T., Headmaster, Basic Training School, Batlagundu presided. Dr. Sendhivelu B. Sc., M.B.B.S. of Poly clinic, Pattiveeranpatti, gavean instructive lecture on "Health and Food". There was a variety entertainment and a short faree 'அமைதி'.

30—7—57 Shri A, K. Chettiar, author உலகம் சுற்றும் தமிழன் gave an interesting lecture tour about Australia, Canada and the Fiji Islands.

1—8—57 The Budget meeting of the Teachers' Association. A Staff excursion was proposed and money Rs. 200/— allotted for the same from the Association funds.

3—8—57 Working Day. Form II B & C went for the C. T. Camp in a grove near Ayyampalayam led by Shri G. Ponnusamy and Shri A. Chandra Samuel and Shri A. G. Manuel. The Headmaster of attended the camp.



8—8—57 Mid-Term Tests begin.

10—8—57 Forms III B & C go for the C. T. Camp at Yendel Farms led by Shri V. Ramasamy B. A. (Hons) B. T., Shri A. Chandra Samuel, Shri V. Thangamani and Shri S. Benjamin.
Forms I B, C & D go for the C. T. Camp at Vadipatti top led by Shri A. G. Manuel, Shri G. Ponnusamy and Shri P. Manoharan. The Headmaster attended the camp.

14—8—57 Freedom Struggle Centenary celebration was held in the School. Shri R. C. Kesavamurthy B. S. (U. S. A.), Old Boy presided and distributed the prizes. Variety Entertainment with Elocution contest and Disguise competition held. (Details in Informative Log Book).



15—8—57 Independence Day, celebrated in a grand manner. Procession round the village at 7-30 A. M. Manager Shri W. P. A. R. Chandrasekaran M. L. A. hoisted the National Flag. Sweets were distributed to school children in the High School premises. School premises tastefully decorated. (Details in Informative Log Book).

24—8—57 Form IV C. pupils go on a short excursional trip (as well as C. T. Camp) to Vaigai River Project near Periyakulam. Thirty three pupils went under four teachers Shri P. Perumal B. A, B. T., Shri A. G. Manuel, Shri P. Manoharan, and Shri M. Gurusamy.

30—8—57 School Annual Inspection by Shri A. Viraswami M. A., L. T., District Educational Officer, Madurai, and Shri Ramasamy, Deputy Senior Inspector of Schools, Batlagundu.



5—9—57 Form V B & C pupils go on a short excursional trip to Vaigai River Project, Periakulam. Fifty three pupils visit the project under three teachers Shri I. Ebenezer B. A., B. T., Shri P. Thangavelu P. E. T., and Shri P. Mariappan B. A., B. T.

6—9—57 The Sixth Form pupils go on a short excursional trip to Kodaikanal Hills to see the observatory and other things of interest under Shri S. A. Dorairaj B. Sc., B. T., and Shri S. Benjamin in a special bus, belonging to the Kodaikanal Motor Union Ltd. (Private)

7—9—57 Girls of Form VI, V A, & IV A and members of the Staff go on an educational trip to Kodaikanal Hills to see the observatory and other things of interest in the special bus, which took the Sixth Form pupils there.

8-10—57 School reopens after September Mid-Term holidays, with the usual flag hoisting.

14-10—57 Mr. Thomas Frederick Rasmussen, an American graduate of Washington University, who stayed with Shri R. C. Kesavamurthy (Old Boy) delivered a lecture to the upper form pupils of the school.

21-10—57 Wild Life Week was celebrated and contests were held.

24-10—57 Manager visited the school. The U. N. O. Day. A talk about the importance of the U. N. O, in the School Assembly by the Headmaster.

27-10—57 Manager meets the members of the staff.

29-10—57 School Parliament was held. Shri R. C. Kesavamurthy, who visited the school by chance, attended the session as a distinguished visitor, and gave good suggestions at the end.

7-11—57 School banner awarded to Form V B.

14-11—57 Children's Day was celebrated. Eatables were distributed to children.

25-11—57 November Mid Term Test.



26-11—57 November Mid Term Test.

29-11—57 Headmaster gives a talk in the All India Radio, Tiruchirapalli, on the 'Progress of the Second Five Year Plan', in an educational broadcast to High Schools.

12-12—57 Half-Yearly Examination begins.

18-12—57 Teachers Association of our School—Half Yearly Meeting.

21-12—57 Health Department's inoculation against cholera. School closes for the X'mas Holidays.

25-12—57 X'mas Day.

31-12—57 New Year Eve.

'Ring out the Old, Ring in the New'
A Prosperous New Year to you all!


*Scientific & Laboratory Requirements for*

RESEARCH, DEGREE COLLEGES & MULTIPURPOSE HIGHER SECONDARY SCHOOLS

*Please Contact:*

The firm which is now running its sixtyfirst year of service to Science and Industry and which celebrated its Diamond Jubilee in 1957.

PHONE: 173

HARGOLAL & SONS

THE SCIENCE APPARATUS WORKSHOP

*Head Office & Works:* **AMBALA CANTT**

BRANCHES:

27-A & B, Linghi Chetty St., Madras—1. Phone: 55659. Grams: HARGOSONS

G. P. O. Lane, Abid Road, Hyderabad Deccan. Andhra Pradesh. Phone: 4623.

**Representatives at: TRIVANDRUM & BANGALORE**

# A. T. N. நாகலிங்கம் & கம்பெனி

பாட புத்தக வெளியீட்டாளர்

புதுமண்டபம் : : மதுரை

●

## ஆரம்ப நடுத்தர பள்ளிகளுக்குரியவை

1. **முல்லை வாசகம்**—(1-*முதல்* 7-*வகுப்புகளுக்கு*)
   ஆசிரியர்கள் : பண்டித நா. லக்ஷ்மிநரசிம்மன், நா. பாலுச்சாமி, M. A.,
2. **புதுமுறைப் பூமிநூல்**—(2, 3, 4, 5-*வகுப்புகளுக்கு*)
   ஆசிரியர் : S. கிருஷ்ண ஐயங்கார், B. A., L. T.,
3. **சமூக அறிவு நூல்**—(6, 7, 8-*வகுப்புகளுக்கு*)
   ஆசிரியர் : S. கிருஷ்ணய்யங்கார், B. A, L. T.,

## உயர்நிலைப் பள்ளிகளுக் குரியவை

1. **புதுமுறைச் செந்தமிழ் வாசகம்**—( Part I—II Forms I to III )
   ஆசிரியர் பண்டித நா. லக்ஷ்மிநரசிம்மன்
2. **மாணவர் இலக்கியக் கோவை**—( Part I—II Forms IV, V )
   தொகுப்பாசிரியர் : பண்டித நா. லக்ஷ்மிநரசிம்மன்
   பதிப்பாசிரியர் : வித்வான் மே. வீ. வேணுகோபால் பிள்ளை
3. **சமூக அறிவு நூல்**—( I to VI Forms )
   ஆசிரியர் : S. கிருஷ்ண ஐயங்கார், B. A., L. T,
4. **பொது விஞ்ஞானம்**—( I to III Forms )
   ஆசிரியர் : M. S. ரெங்கநாதன், B. A., L. T.,

## துணைப் பாடங்கள்

1. **காஷ்மீரம்**—( Forms IV, V )
   ஆசிரியர்கள் : பண்டித நா. லக்ஷ்மிநரசிம்மன், நா. பாலுச்சாமி, M. A.,
2. **வையை**—( Forms IV, V )
   ஆசிரியர் : டாக்டர் மா. இராசமாணிக்கனார், M. A., L. T., M. O. L. Ph. D.
3. **TREASURE ISLAND**-( V Form ) & **STORIES RETOLD FOR THE YOUNG**-( Forms IV, V )
   *Abridged by :* S. A. JAIN M. A., L. T.,

## நூல் நிலையங்களுக்கு

1. **நந்தா விளக்கு**—by : *பேராசிரியர், ஔவை. சு. துரைசாமி பிள்ளை*
2. **உத்தமர் காந்தியடிகள்**—by : *பண்டித வித்வான், தி. இராமாநுஜன்*
3. **இலக்கியச் செல்வம்**—by : " " "
4. **இந்தியப் புரட்சி**—by : *நா. பாலுச்சாமி*, M. A.,
5. **தமிழகவேந்தர்**—by : "
6. SPOTLIGHT ON WORLD WAR II—by K. S. Swaminathan, B. A., L. T., & S. Krishna Iyengar, B. A., L. T.,